3273 CC
35/-
3273
104693

# தேர்ந்...
# கட்டுரை...

- இந்தியாவின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தகர்த்துள்ளனர்

- சிறீலங்காவில் அரசியல் போட்டி

- புலிகளுக்கு தடையை நீடிக்க வேண்டுமா?

JPL
C3273

...கா லையின்
...டம் ருவாண்டா



ஜூலை...

# 6 தேர்ந்த கட்டுரைகள்

பொதுசன நூலகம்
மாநகர ...
-1-9-1994
யாழ்ப்பாணம்

**வெளியீடு - 25**

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

104693

PUBLIC LIBRARY
JAFFNA.

32773C c

வெளியீட்டுப் பிரிவு
அரசியற்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
ஜூலை 1994

C.C
104693 C.C

# வாசகர்களுக்கு

AHOA
191

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 25 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் சில சரியானவை அல்ல. கட்டுரைகளை வாசித்து அதில் வரும் தகவல்கள், கருத்துக்களிலுள்ள சரியானவற்றையும், தவறானவற்றையும் பகுத்தறிய வேண்டிய கடமை வாசகர்களாகிய உங்களின் திறமையிலேயே அடங்கியுள்ளது.

பல்வேறுபட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

2
320.512

# உள்ளே

104693

KOHA JPL

விடயம் பக்கம்

01. இரண்டாம் மூன்றாம் மொழியைக்கற்றல் 01 — 05

02. புலிகளுக்கு தடையை நீக்கவேண்டுமா? 05 — 08

03. உயர்ந்தளவு விளைச்சலைத்தரும் பயிர்களுக்கான மண்வகையும் தாவரச்சத்துக்களும் 09 — 11

04. வடக்குக் கிழக்கைப்போல மலைநாட்டைச் சிக்கலாக்காதீர் 12 — 17

05. இரண்டாவது உலக மகாயுத்தம்! 18 — 27

06. செந்தமிழ்நாடு சிதறிப்போகும்! 28 — 30

07. சைபீரியா: மொழிகளுக்கு சாவுமணி 31 — 38

08. வடக்கில் பல தாக்குதல்கள் 39 — 4ꜫ

09. யாழ்குடாநாட்டில் அமைதி வேண்டும் 44 — 46

10. தமிழீழ விடுதலைப்புலிகளின் மேலுள்ள தடையை நீடிக்குமாறு தமிழ்நாடு கேட்கின்றது 47 — 49

11. இந்தியாவின் புவியியல் சார்ந்த அரசியலின் உண்மைநிலை 50 — 56

12. சிறிலங்காவில் அரசியல் போட்டி 57 — 60

13. இந்தியாவின் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் தகர்த்துள்ளனர் 61 — 77

14. இனப்படுகொலையின் உச்சக்கட்டம் ருவாண்டா 67 — 77

15. நெல்சன் மண்டேலாவிற்கும்
எவ். டபிள்யூ. டீ. கிளாக் அவர்களுக்கும்
ஒரு இலங்கைப் பிரசையின் கடிதம் 78 — 83

16. இன்றைய வியட்நாம் 84 — 94

17. விடுதலைப்புலிகள் - இந்திய உறவு தணிந்து
வருகின்றதா? 95 — 100

# இரண்டாம் மூன்றாம் மொழிகளைக் கற்றல்

— ஹரி அபய குணவர்த்தனா
(ஐலண்ட் - 10. 01. 1994)

முதலாம் ஆண்டிலிருந்து குழந்தைகள் கட்டாயமாக சிங்களத்தையும் தமிழையும் கற்க வேண்டுமெனவும், ஆங்கிலத்தை மூன்றாம் ஆண்டிலிருந்து கற்கவேண்டுமெனவும் ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இதுவரை இத் தீர்மானத்திற்கு எதிராக எந்த அரசியல் கட்சியோ அன்றி மனித உரிமை அமைப்புகளோ அன்றி கல்வியுடன் தொடர்புடைய எந்த அமைப்புகளோ தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை என்பது முக்கியமானதாகும். இத் தீர்மானம் ஏன்? எப்படி? எடுக்கப்பட்டதென்பதை விளக்குவது எனது நோக்கமல்ல. இத் தீர்மானத்தை அமுல்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்வதே எனது நோக்கமாகும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது மொழிகளைக் கற்க வேண்டிய சிக்கல் வயது வந்தவர்களுக்குக் குறைந்து விட்ட போதிலும், சுதேச உச்சரிப்பு முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய சிக்கல் அவர்களுக்கு உருவாகியுள்ளது. இப்பொழுது பேச்சை விளங்கிக் கொள்வதிலோ அல்லது எழுதிக் கொள்வதிலோ சிக்கல் எதுவுமில்லை. முதலாவது மொழியில் காணப்படும் அசைவுகளை உச்சரியாது, இரண்டாவது மொழியில் காணப்படும் அசைவுகளை உச்சரிப்பதால் சிக்கல் குறைக்கப்படுகின்றது.

வயது வந்த சிங்களவரொருவர் தமிழைக் கற்கும்போது உச்சரிப்பு அவருக்கு கடினமாக இருப்பதில்லை. அவர் ஆங்கிலத்தைக் கற்கும் போது மெய் எழுத்தொலியான (F) ''எவ்'' ஐயும் (Z) ''சற்'' ஐயும் உச்சரிக்கும் போதும், உயிர் எழுத்துகளான (Cot) ''கொட்'' ஐயும் (Cord) ''கோட்'' ஐயும் உச்சரிக்கும் போது மட்டுமே சிக்கல் ஏற்படுகின்றது. பிரித்தானியா,

அவுஸ்திரேலிய, அமெரிக்க ஆங்கில உச்சரிப்புக்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது இது ஒரு பெரிய விடயமல்ல. இந்த முறைகளில் ஐரோப்பியரல்லாத நாங்கள் பின்பற்றக்கூடிய முறையாது?

## உச்சரிப்பு

உச்சரிப்பை ஒருபுறம் சற்று நிறுத்தி, மொழியின் மற்றைய பண்புக் கூறுகளைக் கற்கும் போது, இரு மொழி, மும்மொழிக் கல்வியால் ஏற்படும் விளைவுகள் என்னவென்பதைக் கவனிக்க வேண்டும். தன்மொழி பயிலும் குழந்தை அதற்குரிய ஒரு பொருளளவு அல்லது சொல்லைக் கற்கிறான். இரு மொழி பயிலும் குழந்தை இரு சொற்களையும், மும்மொழி பயிலும் குழந்தை மூன்று சொற்களையும் கற்கின்றனர். இச் செயல் குழந்தைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும? இதனால் அக் குழந்தைகள் சில பொருள்களையும், செயல்களையும் மாத்திரமே பெயர் சொல்லக் கூடியவர்களாயிருப்பர். குழந்தையின் ஆற்றல், திறன், வல்லமை என்பன அவன் செயற்பாட்டிற்குத் தடையாக இருக்கும்.

தனிமொழியைக் கற்கும் குழந்தை வாசிக்கும் போதும், எழுதும் போதும் ஒரே எழுத்துக்களைக் கற்கின்றான். சிங்களத்தையும், தமிழையும் கற்கும் இரு மொழி பேசும் குழந்தைகள் இரு மொழி எழுத்துக்களைக் கற்கின்றனர். மும்மொழி பேசும் குழந்தைகள் ஆங்கிலத்தைப் படிப்பதுடன் சேர்த்து பெரிய எழுத்து, சிறிய எழுத்து தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருக்கும் பெரிய, சிறிய எழுத்துக்கள் அடங்கிய ஆறுவிதமான எழுத்துக்களைக் கற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இச் செயல் ஆறுமடங்கான தொழிற் பாட்டைக் கொண்டிருக்கின்றதல்லவா?

சிங்களமும் தமிழும் சொற்றொடரியல்பைக் கொண்டது. அத் தொடரில், எழுவாய் - செயப்படுபொருள் - வினை மற்றும் பின்னிடைச் சொல் என்பனவடங்கும். ஆங்கிலம், எழுவாய் - வினை - செயப்படுபொருள் மற்றும் முன்னிடைச்சொல் என்பனவற்றை உள்ளடக்கியதாயிருக்கும். எனவே தாய் மொழியில் போதிய பயிற்சி பெறாத பிள்ளைகள், சொற்றொடர்முறையில் போதிக்கப்பட்டால் அவர்களின் தாய் மொழியின் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் குந்தகம் ஏற்பட இடமுண்டல்லவா.

"95 வீதத்துக்கு மேலான (02) "எல் 02" இரு மொழிப் பயிலுனர்கள் மொழித்திறன் தகுதியில் தோல்வி கண்டுள்ளதாகவும் அதாவது தொடர்பு மொழியின் முடிவிற்கு எட்ட முடிய

வில்லையெனவும், மதிப்பீட்டு மொழி முறையில் வித்தியாசமான மரபொழுங்குகள் சில காணப்பட்டதாகவும் அதன் காரணமாகப் பயிலுவதை அவர்கள் நிறுத்தியுள்ளதாகவும், இதைக் காலத்துக் கொவ்வாத மொழியென ''செலிங்கர்'' என்பவர் சுட்டிக்காட்டியிருப்பதாகவும்'' எலின் என்பவர் கூறுகின்றார்.

## காலத்துக்கொவ்வாத மொழி

காலத்துக்கொவ்வாத ஆரம்பமொழி. மேற்கிந்திய தீவுகளில் குடியேறிய ஐரோப்பியர்களையும். தெளிவற்ற ஆங்கிலத்தைப் பேசும் சினரையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இம்மொழி பொதுவிடயங்களில் பாவிக்கப்பட்டதேயன்றி விஞ்ஞானத்திலோ அல்லது இலக்கியத்திலோ இடம்பெறவில்லை.

இருமொழி முறையினால் ஆக்கபூர்வமான நன்மைகளும் அளவிலான பாரிய தீமைகளும் ஏற்பட்டுள்ளன. இவை எதனால் என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். இவை எப்படி, எச்சந்தர்ப்பங்களில் நடைபெற்றதென்பதைத் தெளிவாக்கும் விதத்தில் ''கம்மின்ஸ்'' என்பவர் 1976,1979,1981 ஆம் ஆண்டுகளில் இரு கருத்துக்களை முன் கூறியுள்ளார்.

ஒருவன் இரண்டாவது மொழியைக் கற்க ஆரம்பிக்கும் போது தாய்மொழியின் ஆற்றலைப் பெற்றிருந்தாலே இரண்டாவது மொழியிலும் ஆற்றலைப் பெறமுடியுமென அவரது முதலாவது கருத்து குறிப்பிடுகின்றது.

இருமொழிகளை இயற்கையிலே கற்கும் ஆற்றல் குறைந்த குழந்தைப்பராயத்தினரின் நன்மைக்கும். இரண்டாம் மொழியின் ஆற்றலைப் பெருக்குவதற்கும் முதல் மொழிமாற்றம் அவசியமென்பது அவரது இரண்டாவது கருத்தாகும்.

1976 - ஆம் ஆண்டு சுவீடனில் ஐ நா. வில் கல்வி, விஞ்ஞான மற்றும் பன்னாட்டு அமைப்பைச் சேர்ந்த ஸ்குட்நாப்-கன்காஸ்சும் ரோச்மன்னும் மேற்கொண்ட ஆய்வு, இதன் சில பகுதிகளை ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்கள், இரு மொழிகள் ஒன்றுக்கொன்று மாற்றம்பெறும் முன்னர் தாய்மொழி எவ்வளவு தூரத்திற்கு முன்னேறியுள்ளதென்பதைக் கண்டுள்ளார்கள். குழந்தை இரண்டாவது மொழியில் திருப்தியான அறிவு பெறு முன்னர், தாய்மொழியின் அறிவை முழுமையாகப் பெறவேண்டுமென்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

**கற்றல்**

இயற்கையில் பல பாங்குகள் இருக்கின்றதென்பதையும் அவற்றை அடைவதற்கு கற்பது அடிப்படையாக உள்ளது. மொழிகள் பொதுவான பாங்குகளைக் கொண்டிருந்தால் முதல்மொழியினுடைய பாங்குகளை இரண்டாவது மொழி கற்பதற்குப் பயன்படுத்தலாம். மக்லாவ்ரினும் ரெயிலநும் வாதாடியதுபோல முன்னர் பெற்ற அறிவினால் தாய்மொழி உபயோகம் உளவியல் தொடர்பான வழிமுறையை வெளிப்படுத்துவதுடன் நம்பிக்கையையும் ஊட்டிப் புதிய முறையில் கற்க இலகுவான வழியைக் கடைப்பிடிக்க வைக்கின்றது.

தாய்மொழியை உபயோகிக்க முடியாத குழந்தைகளுக்கு, இரண்டாவது மூன்றாவது மொழிகளைக் கற்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதால் அவர்களின் புலன் உணர்வுக்குத் தீங்கை விளைவிக்கின்றோம். மொழித்தொடர்பை ஏற்படுத்துவதற்காக மாத்திரம் பாவிக்கும் சாதனமல்ல. அது சிந்தனையை உய்த்து உணரக் கூடிய சாதனமாகவுள்ளது.

எங்களால் அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுக்கப்படும் அன்னிய மொழிகளை சுதேசமுறையில் உச்சரிக்கும்போது உய்த்து உணரக்கூடிய கருத்தினாலான சிந்தனையின் வளர்ச்சிக்கு அது தடையாகவிருந்து, நாட்டுக்குப் பெருந்தீங்கை விளைவிக்கின்றது.

சமுதாயத்தில் இரு மொழிகளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு, மொழிகளைக் கற்பதிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இருமொழியாற்றல் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் அது சமுதாயப் பண்பாட்டுச் சூழலில் தங்கியுள்ளதென்றும் குறிப்பாக சமுதாயத்தில் இருமொழித் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டுமென்றும், குழந்தைச்சூழலில் சமுதாயப் பண்பாட்டுச்சூழலின் கட்டம் சரியான முறையில் நடைபெறாவிட்டால், தாய்மொழி மதிப்பீடு குறைவாக்கப்படுமென்றும் தனிமொழியைக் கற்கும் உச்சமனைத்தரத்தினரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர்களது அறிவாற்றல் தாமதப்படுமென்றும் அத்தாமதத்தை அவர்களால் நிவர்த்தி செய்யமுடியாதென்றும் ஹமேஸ், பிளாங் என்போர் தங்களது இரு மொழி பற்றிய நூலில் கூறியிருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் பின்வருமாறு கூறுகின்றார்கள் ''இருமொழி வளர்ச்சி ஒருவரை அவரோடு இணைந்து வாழும் தாய்மொழிக் குழுவின் தனித்துவத்தோடு இணையாதிருக்க வழி செய்வதுமல்லாமல் இரண்டாவது மொழியை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறது. அப்பொழுது அவர் இரு மொழி கற்கும் (L 02) ''எல் 02'' பயிலுனர் ஆகின்றார். இரு மொழி கற்பவர் தனது சொந்தப் பண்பாட்டுத் தனித்துவத்தைச் சில வேளைகளில் எப்படியும் கைவிட வேண்டியதாயிருக்கும். ஆனால் இரண்டாவது மொழி பண்பாட்டுக் குழுவிலும் அவரை அடையாளம் காண முடியாதிருக்கும், அதன் பின்விளைவு ஒழுங்கீனத்தையும் பண்பாட்டு மதிப்பையும் குறைக்கும். (பெறி 1980)

**அபாயம்**

1956 ஆம் ஆண்டு நடந்த சம்பவங்களையும், 1978 ஆம் ஆண்டிலிருந்து நடந்து கொண்டிருந்த சம்பவங்களையும் பார்க்கும் போது மேலுள்ள பந்தியில் கூறியுள்ள அபாயங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றது. மேற்கலகத்தில் கற்ற உயர்ந்த பிரிவைச் சேர்ந்த வலது இடது சாரிகள் 1956 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் போட்டியில வெற்றி பெறுவதற்காக ஒருவர் மீது ஒருவர் கண்டனங்களை வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

மூன்று மொழிகளையும் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அரசாங்கம் கொண்டுவந்த திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமையை நோக்குகையில் சிங்கள மொழிக்கோ அல்லது தமிழ் மொழிக்கோ வரவேற்பில்லையென்பது புரிவதுமல்லாமல ஸ்ரீலங்காவின் தேசிய மொழியாக ஆங்கிலத்தை மாத்திரம் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனபதற்கும் ஆதரவுமில்லை.

இரு மொழி அனுபவத்தின் எதிர்மறை விளைவுகள் அறிவாற்றல் குழுவின் மூலம் விபரிக்கப்படுகின்றன. "அரைமொழியியல" என்ற கருத்து எந்தவொரு மொழியாயினும் இலக்கியத் திறன்களை அடையத் தவறும் குழந்தையை விபரிக்க உபயோகிக்கப்படுகின்றது. "அரைமொழியியல" என்று அடையாளமிடப்பட்ட குழந்தைகள் தனிமொழிச் சொல்லோட்டமுடையவர்களாகத் தீர்மானிக்கப்படுகின்றனர். ஆனால் அம்மொழிச் சொல்லோட்டமானது மேல்வாரியானதென்றே குறிப்பிடப்படுகின்றது. அத்தோடு இவ்விரண்டு மொழிகளின் அமைப்புப் பற்றிய அறிவின் குறைவை மறைப்பதற்கே உபயோகிக்கப்படுகின்றது எனலாம் என ஹமேசும், ஹப்லாங்கும் கூறுகிறார்கள்.

இந்நாட்டில் மொழியை அழகாகவும் சொல்லோட்டமாகவும் பேசுவதில் குறையிருக்கவில்லை. ஆனால் மக்கள் பெருமளவில் அறிவுத் திறன் இன்மையினாலேயே வருந்துகிறார்கள். நாநலம் வாய்ந்தவர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தாமல் குழந்தைகளை சிமைப் பெருச்சாளிகளாக்கி அவர்களின் அறிவை வீணடிக்கிறார்கள்.

ஸ்ரீலங்காவில் தமிழ் அரசர்கள் இருந்து வந்தார்களானாலும் தமிழை அனைவரும் கட்டாயமாகக் கற்க வேண்டுமென வற்புறுத்தவில்லை. ஸ்ரீலங்கா ஆங்கில அரசர்களையும், அரசிகளையும் கொண்டிருந்தாலும் ஆளுநர்களின் மூலமே ஆட்சி புரிந்து வந்தார்கள். அவர்கள் ஆங்கிலத்தை அனைவருக்கும் கட்டாய மொழியாக்கவில்லை இப்பொழுதிருக்கும் சிங்களத் தலைவர்கள் சிங்களவர் அனைவரையும் தமிழையும் ஆங்கிலத்தையும் கட்டாயமாகக் கற்க வேண்டுமென விரும்புகிறார்கள்.

சக்கரவர்த்தி கண்ணுக்குப் புலப்படாத உடைகளை அணிந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்த அனைவரும் அமைதியாக விருந்த நேரத்தில், குழந்தையொன்று அவர் உடையின்றி வெற்றுடம்புடன் இருப்பதைக் கண்டு கொண்டது. இந்நாட்டுக் குழந்தைகளும் வீண் கற்பனையில் மூழ்கிவிடாது, தற்போதைய கல்விக் கொள்கையிலுள்ள வெறுமையை விழிப்பாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

# புலிகளுக்கு தடையை நீக்க வேண்டுமா?

(ராணி 08. 05. 1994)

விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு விதித்த தடை இந்த மாதத்துடன் முடிவடைகின்றது.

இந்தத் தடையை நீடிப்பதா, வேண்டாமா என்று டெல்லி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது!

''இரண்டு ஆண்டு தடையை நீடிக்க வேண்டும்'' என்று தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறது.

''தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளே இல்லை! ஒழித்து விட்டோம்!'' என்று நாள்தோறும் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கும் தமிழ் நாடு அரசு, இல்லாத புலிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று ஏன் கூறுகிறது?

இப்பொழுது டெல்லியுடன் தமிழ் நாடு ''டு'' போட்டிருக்கிறது! அந்த ஒரே காரணத்தால்தான், தடையை நீக்க டெல்லி விரும்பாதபொழுது, ''நீடிக்க வேண்டும்'' என்று தமிழ் நாடு அரசு கூறுகிறது! ஆகாத மருமகள் கால்பட்டாலும் குற்றம், கைபட்டாலும் குற்றந்தானே!

அது அவர்கள் பாடு, இருக்கட்டும். தடையை நீடிக்க வேண்டுமா என்று நாம் நடுநிலையுடன் ஆராய்ந்து பார்ப்போம்!

## விடுதலை இயக்கம்

விடுதலைப் புலிகள் சுதந்திர ஈழம் பெறப் போராடுகிறார்கள். அது ஒரு விடுதலை இயக்கம். இலங்கை அரசே விடுதலைப் புலிகளை தடை செய்யாத பொழுது நாம் ஏன் தடை செய்ய வேண்டும்?

நாமும் விடுதலைக்காகப் போராடியவர்கள்தானே! நம்முடைய நேதாஜியும் ஆயுதம் ஏந்தி, விடுதலைப் போரை நடத்தியவர்தானே?

விடுதலைப் புலிகள் ''கொரில்லா''க்கள் என்ற நிலையிலிருந்து உயர்ந்து ஒரு வலிமைமிக்க, கட்டுப்பாடு மிகுந்த, சாவுக்கும் துணிந்த ஒரு விடுதலைப் போர்ப்படையாக மாறிவிட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

## ராஜீவ் காந்தி கொலை

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புலிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

ராஜீவ் காந்தியைக் கொன்றது புலிகள்தானா?

அந்த நேரத்தில் தேர்தல் ஆதாயத்திற்காக அப்படி பிரசாரம் செய்யப்பட்டது! ஆனால், உண்மை என்ன?

ரஷியாதான் ராஜீவ் காந்தியைக் கொன்றது...

அமெரிக்காதான் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது...

இந்திய உளவுப் படையே ராஜீவ் காந்தியைக் கொன்றது .

என்று எல்லாம் கூறப்படவில்லையா?

ராஜீவ் காந்தி ஏன் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி விசாரிக்கும் நீதிபதி ஜெயின் போனவாரம் கூறியிருக்கிறார் ''நான் கேட்கும் கோப்புகளை சர்க்கார் கொடுப்பது இல்லை. அவை இரகசிய கோப்புகள் என்று கூறிவிடுகிறார்கள்'' என்று.

இதற்கு என்ன காரணம்?

புலிகள் கொலை செய்திருந்தால், சர்க்கார் கோப்புக்களை நீதிபதிமுன் தூக்கிப் போட்டு இருக்குமே!

ராஜீவ் கொலையில் வல்லரசுகளுக்குத் தொடர்பு இருக்கிறது! அது பகிரங்கமாக வெளிப்பட்டால், அரசியல் நெருக்கடி ஏற்படும்! அதனால்தான் டெல்லி மூடி மறைக்கின்றது என்று ஊகிக்கத் தோன்றுகின்றது அல்லவா?

**அது அரசியல்**

ராஜீவ் காந்தி கொலை ஒரு அரசியல் கொலை.

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டார். அதற்காக இந்தியாவில் சீக்கியர்களே வாழக்கூடாது என்று தடை செய்து விட்டோமா?

காந்தியடிகளைக் கொன்றது யார்? எந்த இயக்கம்? அந்த இயக்கத்தைத் தடை செய்து விட்டோமா? இல்லையே! இன்று எத்தனையோ பெயரில் கிளைகள் விட்டு அந்த இயக்கம் உலாவுகிறதே!

அரசியல் கொலைகளை அரசியலாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர கொலைகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது!

அரசியலிலே நிரந்தர நண்பனும் கிடையாது! நிரந்தரப் பகைவனும் கிடையாது!!

**இந்திரா காந்தி செய்தது!**

விடுதலைப் புலிகளை வளர்த்தவர் இந்திரா காந்தி. அவர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்தவர் இந்திரா காந்தி அவர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்தவர், இந்திரா காந்தி. ஏன் இவ்வளவும் செய்தார்? அதுதான் அரசியல் தந்திரம்!

இலங்கையில் இந்தியத் தூதராக இருந்துவரும், புலிகளுடன் நெருங்கிப் பழகியவரும், இந்திய அரசின் வெளிநாட்டுச் செயலராக இருந்த வருமான தீட்சித், புலிகளுடன் இந்திய அரசு மீண்டும் உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் என்றால், அதன்பின்னே எவ்வளவு அரசியல் தந்திரம் இருக்க வேண்டும்!

புலிகள் போராடுவது தமிழர்களின் விடுதலைக்காக தமிழர்கள் யார்? நம் உடன்பிறப்புகள்! நாம் தமிழர் அல்லவா? அவர்கள் துப்பாக்கிக் குண்டுகளால்- பீரங்கிக் குண்டுகளால்- விமானத் தாக்குதலால், காயம்பட்டு, குருதி கொட்டக் கொட்ட நம்மைத் தேடி வரும்பொழுது, அவர்களின் காயங்களுக்கு நாம் கட்டுப் போடவாவது வேண்டாமா? இதற்காவது தடையை நீக்க வேண்டாமா? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் அல்லவா!

# உயர்ந்தளவு விளைச்சலைத்தரும் பயிர்களுக்கான மண்வகையும், தாவரச் சத்துக்களும்

(சண்டே ஒ சேவர் – 08. 02. 1994)

நல்ல ஈரப்பசுமையுள்ள மண்ணில் மிக ஆழத்துக்கு வளர்ந்து செல்லும் வேர்கள் கூடுதலான சத்துக்களைப் பெறுவதோடு போதுமானளவு ஈரத்தன்மையையும் பெற்றுக்கொள்கின்றன. இதோடு மற்றைய நல்ல நிலையான உயிர்ப் பொருட் கூறுகளும் இணைந்திருத்தல் வேண்டும். பெருவிளைச்சல் தரும் பயிர்களிலுள்ள தெளிவான உண்மை இதுவேயாகும். பல புதிய முறைகளும் உள்ளன. உங்கள் பயிரை லாபமாகச் செய்வதற்கான எல்லா விடயங்களையும் உங்களால் கட்டுப்படுத்த முடியாதாகிலும் நீங்கள் உங்கள் பயிரை நல்லமுறையில் பராமரித்தல் வேண்டும்.

*சரியான சுவாத்தியத்துடன் உரவகைகளும் மண்ணின் தன்மையும் மிகமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். பயிர் மண்ணில் தான் வளருகின்றது. அது பல அளவிலான உயிர்ப்பொருட்களுடனும் கரைந்துபோகும் உவர்த்தன்மையுடனும் கலந்துள்ளது. உயிர்ப்பொருட்கூறுகளுடன் சேர்ந்து மண் திடத்தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது. எப்படியாயினும் சுண்ணக்கற்களும், உபயோகிக்கப்படும் உரவகைகளும் பயிர் வளர்வதற்கு அவசியமான 13 வகையான ஆதாரங்கள் அளிக்கின்றன.*

*மண்ணைக் கொண்டே பலவகையான நாட்டுப்புறப் பொருளாதார எண்ணங்கள் உருவாகின்றன. பயிர்களின் வேர்கள் ஒரு நிரந்தரமான இடத்தில் அசையாதிருத்தல் வேண்டும் மண்ணானது பயிர்களுக்கு வேண்டிய சத்துக்களை வழங்குவதோடு, எதிர்காலத்திலும் அவைக்குத் தேவையானவற்றை வழங்கும் ஒரு களஞ்சியமாகவுள்ளது. கூடுதலான அளவு மண்வகை*

கள் ப விகிதத்துக்கும் குறைவான உயிர்ப் பொருட் கூறுகளைக் கொண்டிருந்தாலும், இந்த ஐந்து விகித உயிர்ப்பொருட் கூறுகள் மண் உற்பத்தியில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. மண்ணினுள்ள நுண்ணுயிர்ச் செயற்பாடுகளால் ஏற்படும் உப உற்பத்திகள். மண்ணைச் சிறு துகள்களாக்கியும், தரமுடையவையாக்கியும் அதன் மாறாத்தன்மையை வைத்திருக்க உதவுகின்றது. அதனால் அங்கே கூடுதலானவளவு ஈரத்தன்மை மீண்டும் ஏற்படுகின்றது, காற்றோட்டம் நிலவுகின்றது. மண் கட்டியாதலும் குறைவடைகின்றது. பாஸ்பரம். மரஉப்பு. வெடியம் ஆகிய பயிருக்குத்தேவையான சத்துக்கள் மிக இலகுவாகவும். நிறைவாகவும் கிடைக்கும் வழி ஏற்படுகின்றன.

### பாஸ்பரம்.

சத்து. இரும்பு, திராவகம். காரச்சத்து. மின்மயத்தூளின் மாற்றுத்தன்மை ஆகிய மண் இரசாயனங்கள் உங்கள் மண்ணினால் உயர்வுச் செய்யவேண்டிய அனைத்தையும் மேலும் மட்டுப்படுத்துகின்றன. ஆதலால் உரமிடும்போது இவைகள் கவனிக்கப்பட வேண்டும். எப்படியாயினும் மண் தன்மைக்கேற்றவாறு சத்திடுதலை வேறு சில காரணிகள் உறுதிப்படுத்துகின்றன. கனிப்பொருட்படுகைகள். உயிர்ப்பொருட் கூறுகள் என்பன மேல்மட்ட மண்ணிலிருக்கும் சத்துக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. எப்படிப் பயிர்கள் பயன்பெறக்கூடியவகையில் இருக்கின்ற சத்தைப் பெற்றுக்கொள்கின்றன என்பது மிகவும் அவசியமானதும் உறுதிப்படுத்த வேண்டியதுமாகும். இது மண்ணின் அடர்த்தி, நீர்ப்பாசனம், காற்று, நீரைச்சேகரித்து வைத்திருக்கும் தன்மை, கற்பாறைகள், அவை எவ்வளவு ஆழத்தில் இருக்கின்றன என்பதிலும் முக்கியமாக பாஸ்பரத்திலும் தங்கியுள்ளது.

ஒரு பயிரின் வேர் செல்லும் ஆழத்தையும். அப்பயிர் இனப்பெருக்கம் செய்யும் காலத்தில் அதற்குத் தேவையான சத்தின் அளவையும் கணக்கிடுதல் மிகவும் முக்கியமானதாகும், பயன்தரும்முறையில் ஒரு பயிரின் வேர் ஆழத்துக்குச் செல்வது அந்தமண்ணின் தன்மையையும். இருக்கின்ற சத்தைத் தாக்கக்கூடிய பாஸ்பரத்திலும் தங்கியுள்ளது. ஆழமற்ற இயற்கையான மண்ணிலும். அல்லது மிகவும் களியான மண்ணிலும் வேர் ஊடுருவிச் செல்வது கட்டுப்படுத்தப்படுகின்றது. அவற்றில் நீர்த்தன்மையும். காற்றோட்டமும் குறைவாகவே காணப்படும். இவையெல்லாம் எல்லாப்பயிர்களையும் பாதிப்பதில்லை. ஏனெனில் சிலபயிர்கள் மற்றைய பயிர்களைப்போலல்லாது வேர்விடும்

தன்மையைக் கொண்டுள்ள மற்றைய நல்வகைகளிலும் பார்க்கச் சில மண்படிவுகளில் சத்துக்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன

வேர்விடத் தொடங்கிய பின்போ முன்போ சில தாவரங்களுக்கு வெடிப்பு அதிகம் தேவைப்படுகின்றது. ஒவ்வொரு தாவரத்தின் வேரும் மண்ணின்மேல் படலத்தில் இருப்பதால் அதில் வெடிப்பு இருத்தல் பயன் தரத்தக்கதாகும்.

சுண்ணாம்பும். உரம் இடுதலும் நிலத்தினது மின்மயத்தூளின் மாறும் தன்மையைப் பெரிதும் பாதிக்கின்றன. எல்லாச் சத்துக்களையும் நீடித்தகாலம் வைத்திருந்து வெளியேற்றும் ஆற்றல் மண்ணிலுள்ள மின்மயத்தூளின் மாற்றுத்தன்மைக்கே உண்டு

தாவர வளர்ச்சிக்கு சிறிது உதவும் நீர்மம் மற்றும் அலுமினிய மின்மயத்தூள்களை மீளவும் கொண்டுவரும் வெடியம் பாஸ்பரம். வெடிப்பு ஆகியவையும் கசிவுறுதலின் மூலம் அதிகமாக குறைந்வதருகின்றது பாஸ்பரத்தைச் சரிசெய்வதற்காக உரத்துடன், சுண்ணாப்பு கலந்து உரத்தினதும் அவசியத்தை நிலைப்படுத்தலாம். முக்கியமாக பாஸ்பரம் போன்ற சில சத்துக்கள் கிடைப்பதை கட்டுப்மடுத்த இதுதான் முக்கிய முறையாகும்.

# ஞானக் கண்

மனிதனுக்கு ஞானக்கண் என்று ஒரு மூன்றாவது கண் இருப்பதாகக் கீழைநாட்டு மக்கள் நெடுங்காலமாகவே நம்பி வருகிறார்கள் திபேத்திய லாமாக்கள் மெல்லிய மூங்கில் ஊசிகளால் நெற்றியில் துளையிட்டு மூன்றாவது கண்ணைத் திறந்து கொள்வது வழக்கம் என்று தெரிகிறது கி. பி. 1526 இல் எழுதப்பட்ட சமஸ்கிருத நூல் ஒன்றில் ஞானக்கண் பலகோடிச் சூரியன்களுக்குச் சமமான தேஜஸைத் தருவதாகக் கூறப்பட்டிருக்கிறது இந்த அதிசயக் கருத்தை இன்றைய விஞ்ஞானிகள் ஒருவகையில் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு வந்திருக்கிறார்கள்.

நமது மூளையின் மூன்றாவது குழலின் பின்னால் ஒரு பட்டாணியின் அளவில், சாம்பலும் வெள்ளையும் கலந்த நிறத்தில் ஒரு திசுக்கட்டி உள்ளது அதற்குப் பினியல் சுரப்பி (Pineal-Gland) என்றுபெயர் நெற்றியின் புருவமத்திக்கு நேர் பின்னால் அது அமைந்திருக்கிறது. அதுதான் கீழைநாட்டறிஞர்கள் கூறும் ஞானக்கண் என்று இன்றைய விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

# வடக்குக் கிழக்கைப்போல மலை நாட்டைச் சிக்கலாக்காதீர்

— ஜெகான் பெரேரா
(ஐலண்ட் - 09. 01. 1994)

தான் டிசம்பர் மாதத்தின்போது கொண்டாடும் அகில உலக மனித உரிமைகள் தினக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகவும், இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவும் சித்திரம்மூலம் விளக்கிக்காட்டும் போட்டி ஒன்றை சர்வோதயம் இலங்கை பூராவும் நடாத்தியது. சில சித்திரங்கள் மிகவும் தத்ரூபமாகவிருந்தன. அழகாக இல்லாதுவிடினும் பரிசைப் பெறக்கூடியதாகவிருந்த இன்னொரு சித்திரத்தில் கைப்பிடிவைத்த வெந்நீர்க் கொதிகலன் ஒன்றின் கீழ் தீயை இட்டு பெருஞ்சுவாலையாக எரியவிட்டபோதும், அந்தக் கலனின் மூடியைத் திருப்பிய போதும் அதன் மேல் பாகம் வெடித்துச் சிதறுவதுபோல் சமூகத்தைச் சித்தரித்துக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால், மத்திய மலைப்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் மாணவனால் அனுப்பப்பட்ட சித்திரம் பிரச்சினை ஒன்றை எடுத்துக்காட்டியிருந்தது. அந்தச்சித்திரத்தில் அவன் சுட்டிக் காட்டிய செய்தி யாவரும் அறிந்ததாகவும் தெளிவானதாகவும் இருந்தது. அந்தப்பகுதியில் வாழும் சிங்களவர்களும், தமிழர்களும் ஒருவருக்கு மற்றவர் எதிராகப் போரிடுவதை அந்தச் சித்திரத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருந்தது.

மனித உரிமைகளின் கோட்பாடுகள் அகில உலகிற்கும் பொதுவானவை. ஒரு இனத்திற்கு அவை பொருந்துமாயின் மற்ற இனத்திற்கும் அவை பொருத்தமானவையாக இருக்கின்றன. ஆனால் இந்த மாணவன் தீட்டிய சித்திரம் ஒரு இனத்திற்குச் சார்பாகவும் இன்னொரு இனத்திற்கு எதிராகவும் இருந்தது. பெரிய தேயிலைத் தொழிற்சாலை ஒன்றைச் சுற்றி செழிப்

பாக வளர்ந்த தேயிலைச் செடிகளைக் கொண்ட வளமான பகுதியில் இந்த இனங்களில் ஒன்று வாழ்ந்துவருவதாக இந்தச் சித்திரம் எடுத்துக்காட்டியிருந்தது. தோட்டத்துக்கு வெளியே நிற்கும் இனத்தவர்கள் தோட்டத்தை வெறுப்புடன் நோக்கு வதையும் பௌத்தகுரு ஒருவர் தனது கையை இந்தத்திசையில் சுட்டிக்காட்டுவதையும் இந்தச் சித்திரம் மேலும் எடுத்துக்காட்டி யிருந்தது.

பெருந் தோட்டங்களில் வாழும் தமிழ்த் தொழிலாளர்கள் தங்களைவிடச் சிறப்பாக வாழ்வதாக அவற்றுக்கு வெளியே வாழும் சிங்களவர்கள் கருதுகின்றார்கள். உறுதியான வருமானத் தையும், நிரந்தரமான வேலைவாய்ப்பையும், நல்ல மருத்துவ சேவையையும் இந்த மக்கள் பெறுவதாக இவர்கள் பேசிக்கொள் கின்றார்கள். அவசியம் ஏற்படும்பொழுது இந்த மக்களின் உப யோகத்திற்காக நோயாளிகளைக் கொண்டுசெல்லும் வாகனம் ஒன்று இருப்பதாகவும் இவர்கள் கூறிக்கொள்கின்றார்கள்.

ஆனால் இவர்கள் கேள்விப்படும் சில விடயங்களில் உண்மை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அநேகமான பெருந்தோட் டங்கள் இன்றுவரை இப்படியான வாகனம் எதையும் பெற வில்லை. ஜேதடபோன்று 10 இலட்சம் வீடுகளைக்கட்டும் திட் டத்தின் கீழ் 500 தோட்டங்களுக்கு சராசரி ஒருதோட்டம் என்ற விகிதத்தில் 100 இரட்டைக்குடிசைகள் மாத்திரமே கட் டப்பட்டுள்ளன.

மகப்பேறின்போது சாவைத் தழுவும் தாய்மார்களினதும் குழந்தைகளினதும் இறப்பு விகிதம் பெருந்தோட்டங்களிலேயே மிகவும் கூடுதலாக இருக்கின்றதென்ற உண்மையையும், கல்வித் தரம் இங்கேயேமிகவும் குறைவாக இருக்கின்றதென்ற உண்மை யையும் எவரும் மறுக்க முடியாது. மாலை நேரத்தை மகிழ்வுடன் கழிக்க வேறு எந்தவிதமான பொழுதுபோக்கு வசதிகளும் இல்லா ததால் லைன் அறைகளில் அடைபட்டிருக்கும் இந்த மக்கள் மட்டுமீறிய குடியில் ஈடுபடுகின்றார்கள். இது பாரம்பரிய சமூகப் பிரச்சனைகளை உருவாக்குகின்றது.

## இரண்டு பகுதியினரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இவர்களைப் பற்றி மற்றவர்கள் கொண்டுள்ள நோக்கு வித்தியாசமாகஇருக்கின்றது. பெரிய தோட்டங்களைச் சூழவுள்ள பகுதிகளில் வாழ்வோரும், அவற்றில் எவ்விதமான உரிமைகளையும் கொண்டாட முடியதவர்களுமான, தனது இனத்

32730

தவர்களுக்குள்ள குறைபாடுகளையே கிராமத்தைச் சேர்ந்த இந்தச் சிங்கள மாணவன் தனது சித்திரத்தில் சித்தரித்துக்காட்டியிருந்தான். பிரித்தானியரின் வருகைக்குமுன் இது சிங்களவர்களுடைய பாரம்பரியமான பூமியாக இருந்ததாக வரலாறு கூறுகின்றது. எங்கள் நாட்டை நாம் சிறப்பாக நிர்வகிக்கவேண்டும் என்று இன்று விரும்பும் பிரித்தானியர்கள் சிங்களவர்களை அவர்கள் வாழ்ந்த பூமியிலிருந்து அன்று வெளியேற்றியிருந்தனர்.

கண்டியிலுள்ள கிராமத்தவர்களை வெளியேற்றிவிட்டு அந்த இடங்களில் வேலை செய்வதற்காகக் குடியமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் அங்கு வாழும் சிங்களவர்களை விடச் சிறப்பாக வாழ்கின்றார்கள் எனக் கூற முடியாது. இன்று இந்த மக்கள் இடவசதியற்ற லைன் அறைகளில் வாழ்கின்றார்கள். மின்சார வசதி எதுவும் இந்த லைன் அறைகளுக்குக் கிடையாது. எவ்விதத்திலும் இவற்றுக்கு இவர்கள் உரிமை கொண்டாட முடியாது. இந்த லைன் அறைகளிலுள்ள உடைந்த யன்னல்களுக்குப் பதிலாக வேறு யன்னல்களைப் போடுவதற்குத் தானும் இவர்கள் மற்றவர்களின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது.

இவ்வாறு நிர்க்கதிக்குள்ளான மக்களுக்குத் தலைவர் ஒருவர் இருப்பாராகில் அவர் இவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக் கடமைப்பட்டுள்ளார். இவர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் தொண்டமான் அவர்களை அரசாங்கம் எதிர்க்கின்றது. அவரை எதிர்க்கும் அரசாங்கத்தைச் தேசியவாதிகள் புகழுகின்றார்கள்.

இந்த மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தொண்டமான் அவர்கள் பல தந்திரங்களைக் கையாளலாம். ஆனால் இதைச் சாக்குப்போக்காகக் காட்டி இவருடைய மக்களின் வாழ்க்கைத்தரத்தை நாம் மேம்படுத்தாது இருக்க முடியாது. அத்துடன் கிராமங்களில் வாழும் சிங்கள மக்கள் வறுமை நிலையிலும், எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் வாழ்கின்றார்கள், என்பதற்காக தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை வசதிகளை நாம் வழங்காதிருக்கமுடியாது.

வீடுகளைக் கட்டுவதற்கு காணியே இந்த மக்களுக்கு முதலாவது தேவையாக இருக்கின்றது. எந்த இனத்தைச் சார்ந்தவராக இருப்பினும் இலங்கைப்பிரசைகள் ஒவ்வொருவரும் காணியை வைத்திருக்க உரித்துடையவராக இருக்கின்றனர். காணிகளை மக்களுக்கு சொந்தமாக்க இடமளிக்கும் சனநாயகத்தையே தான்

பிரித்தானியாவில் உருவாக்க விரும்புவதாக அந்தநாட்டின முன்னாள் பிரதமர்களில் ஒருவரான திருமதி. மார்கறற் தாச்சர் கூறிவந்துள்ளார். இந்தக் குறிக்கோளுடனேயே அவர் அரச கூட்டுத்தாபனங்களைதனியார் மயப்படுந்தியிருந்ததுடன், மாநகரங்களில் வீடமைப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வந்தார்.

காணிக்கு எந்தவொரு மக்களும் சொந்தக்காரர்களாக இருக்கும் பொழுது தாங்கள் வாழும் சமூகத்தின் உறுதிப்பாட்டில் அவர்கள் அக்கறையாக இருப்பார்கள். தோட்டங்களில் வாழும் தமிழ்மக்களுக்கும் இது பொருத்தமாகவிருக்கின்றது. மத்திய மலைபபகுதிகளில ஊடுருவுவதற்கு வடக்கிலுள்ள தீவிரவாதிகள் முயன்றுவரும் இந்தவேளையில் இது மிகவும் முக்கியமானதாகவிருக்கிறது.

நகரங்களில் வாழும் மத்திய வகுப்பினர் கூட விலைவாசிகளின் உயர்வால் அவதியுறும இந்தவேளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் வேதனத்தை அதிகரிப்பது இரண்டாவது முக்கியமான தேவையாகும் கிராமங்களில் வாழும் விவசாயிகள் போலின்றி நகரங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட தேவைகளைப் பெற பணத்தை செலவிடவேண்டியிருப்பதுபோல், இந்த மக்களும் தங்கள் பணத்தைக் கொண்டே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியுள்ளது.

ஆண்டொன்றிற்கு 300 நாள் வேலை வழங்கவேண்டுமென்று கோரியிராது நாட்சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமென்று இவர்கள் கோரியிருந்தால் அது நியாயமானதாகவிருந்திருக்கும்.

தொழிலாளர்களின் வேதனத்தை நாளொன்றுக்கு 12/- ரூபா விகிதம் அதிகரிக்க மறுக்கும் தோட்ட நிறுவனங்கள் தங்கள் நிர்வாக அதிகாரிகளுக்கு மாதந்தோறும் 30,000/- ரூபாவிலிருந்து 100,000 ரூபா வரை வழங்குவது விந்தையாகவிருக்கின்றது. வருமானத்திற்கு ஏற்றவாறு வேதனத்தின் விகிதம் இல்லாமைக்கு தோட்ட நிர்வாகத்தின் தவறான வழிநடாத்தலும், ஆற்றலின்மையும் ஊழல் நடவடிக்கைகளும் காரணமேயல்லாது தோட்டத் தொழிலாளர் காரணமல்ல.

தோட்டங்களில் வாழும் தமிழ்மக்களின் கல்வி வசதிகளை அதிகரிப்பது மூன்றாவது முக்கிய தேவையாகும். கற்றனில் உருவாக்கப்பட்டடுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சம்பந்தமாகக் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. தோட்ட மக்கள் கல்வியில்

பின்தங்கியிருப்பதை நோக்கும் எவரும் இந்தக் கல்லூரியின் அவசியத்தை உணர்வர். நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிங்கள ஆசிரியர்களுக்குப் பயிற்சியை வழங்க இதைப் போன்ற 6 கல்லூரிகள் இருக்கின்ற போதிலும், தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பப் போவதாகக்கூறி இந்தக் கல்லூரியில் மாத்திரம் இன விகிதாசாரத்திற்கேற்ப மாணவர்களைச் சேர்க்க அரசாங்கம் தீர்மானித்தது.

## நம்பகத்தன்மை

இந்த நாட்டிலுள்ள எந்தவொரு அரசியல் தலைவரையும் விட வசதியற்ற சூழலைப் பின்னணியாகக் கொண்ட மறைந்த சனாதிபதி பிரேமதாசா அவர்களே சிறுபான்மையின மக்களின் குறைபாடுகளை நீக்கவேண்டுமென ஆர்வம் கொண்டிருந்தார். இந்த மூன்று முக்கியமான பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வை எட்ட இவருடனேயே தொண்டமான் அவர்கள் உடன்பாட்டை எட்டியிருந்தார். தோட்டத் தொழிலாளர்களால் பெரிதும் மதிக்கப்படுபவரும், கிராமங்களில் வாழும் சிங்கள மக்களின் நலனில அக்கறையுள்ளவருமான தொண்டமான அவர்களுடனான இந்தப் பிரச்சினையை வன்முறைகள் மூலமாகவின்றி பேச்சுவார்த்தை மூலம் அரசாங்கம் தீர்க்க வேண்டுமென தோட்டத் தொழிலாளர்களின் நலனில் தொண்டமான் அவர்கள் அக்கறை கொண்டுள்ளது போல் கிராம மக்களின் நலனில அக்கறையாகவுள்ள சர்வோதயத் தலைவர் கலாநிதி. ஆரியரத்தினா அவர்கள் கூறியுள்ளார்.

தேசிய நலனிலும், சிங்கள மக்களின் நலனிலும் தொண்டமான் அவர்கள் அக்கறை இல்லாதவர் எனக் கருதுவது மிகவும் தவறானதாகும். இலங்கையில் வாழும் பெரிய சமூகம் ஒன்றின் தலைவராக விளங்கும் இவர், அவர்களின் நலனில் அக்கறையாகவுள்ளதுபோல் சிங்கள மக்களின் நலனிலும் அக்கறையாகவுள்ளார். தேசிய நலனில் இவர் அக்கறை கொண்டுள்ளதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

''என்னுடைய மக்கள்'' எனத் தொண்டமான் அவர்கள் பேசி வருகின்றார் என்பதற்காக நாம் அவரை இழிவாகக் கருதக் கூடாது. தங்கள் இன மக்களின் நலனிலும், மற்ற இன மக்களின் நலனிலும் அக்கறையாகவுள்ள தலைவர்களே இலங்கைக்குத் தேவைப்படுகின்றார்களே அல்லாது தங்கள் சொந்த நலனில் அக்கறையுடைய தலைவர்கள் அல்ல. தொண்டமான் அவர்களுக்கு முற்றிலும் எதிர்மாறாக இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளில் அநேகமானோர் தங்கள் சொந்த வாழ்வின்

வளர்ச்சியிலேயே நாட்டம் கொண்டுள்ளவர்களாக இருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. இதன் காரணமாகவே மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தேர்தல்களில் வெற்றியீட்டியதன் மூலம் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அரசியல்வாதிக ளில் அந்த மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். தங்கள் அரசி யல் வாழ்வுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடும் என்ப தன் காரணமாகவே பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வை எட்ட இந்த அரசியல்வாதிகள் விரும்பவில்லை. ஆனால் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களின் நம்பிக்கைக்குத் தொண்டமான் அவர்கள் பாத்திரமாகவுள்ளார்.

கல்வி கற்காத கீழ் மட்டத்திலுள்ள மக்கள் தேசியப் பிரச்சி னைக்கான தீர்வு சம்பந்தமாக தீர்மானிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே எதிர் விளைவுகளை எதிர்கொண்டு தீர்வை எட்டுவதற்குத் தாங்கள் எந்த அரசியல்வாதிகளில் நம் பிக்கை வைத்துள்ளார்களோ அவர்களையே இவர்கள் ஆதரிக்கின் றனர். ஆனால் நன்கு சிந்தித்து முடிவு கண்டதன் பின்பே கல்வி கற்ற மக்கள் எந்தவொரு அரசியல்வாதியிலும் நம்பிக்கை வைக் கின்றார்கள்.

தோட்டத் தமிழ் மக்களுடன் சென்ற நான்கு தசாப்தங் களாக இணைந்து பணியாற்றியதன் காரணமாக அவர்களின் நன்மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் தொண்டமான் அவர்கள் ஆளாகி யுள்ளார். ஆகவே தங்கள் பிரச்சினைகளுக்கு எவ்விதமான தீர் வைத் தொண்டமான் அவர்கள் கொண்டுவந்தாலும் இந்த மக் கள் அதை ஆதரிக்கவே செய்வர். இதன் காரணமாகவே தொண்டமான் அவர்களுக்குப்பின் அவருடைய தலைமைத்துவத் தை ஏற்கவிருக்கும் தீவிரமான போக்கைக் கடைப்பிடிக்கக்கூடி யவர்களுடன் மலைநாட்டில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைக் குத் தீர்வை எட்டுவதற்குக் காத்திருக்காது. தொண்டமான் அவர்களின் தலைமைத்துவம் இருக்கும்போதே பரஸ்பரம் விட் டுக் கொடுப்பதன் மூலமும் பேச்சுவார்த்தை மூலமும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய தீர்வை எட்ட அரசாங்கம் முயற்சிகளை இப்பொழுதே மேற்கொள்ளல் வேண்டும்.

மென்போக்கைக் கடைப்பிடித்தவரும் சனநாயகவாதியுமான எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடன் அரசாங்கம் எட்டி யிருந்த சமாதான உடன்படிக்கைகளுக்கு நேர்ந்த கதியையும், அவருக்குப்பின் தமிழ் மக்களின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் தீவிரமான போக்கையும் நாம் மறந்துவிடக் கூடாது.

# இரண்டாவது உலக மகாயுத்தம்!

## அதன் தலை எழுத்தை மாற்றிய ஒரு அதிரடிப்பாய்ச்சல்

— ஞா. சிவசண்முகம்
(வீரகேசரி - 17. 04. 1994)

பேர்ள் ஹாபர் என்னும் பெயர்கொண்ட கடற்படைத் தளம் வடமேற்கு பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஹவாய் தீவுகளில்''ஒகு''என்னும் தீவில் அமைந்த அமெரிக்காவின் முக்கிய கடற்படைத்தளமாகும். முதலாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்கா, தனது கப்பல்களுக்கும் இத்தளம் மிக அவசியம் என்று கருதியதால், இதனைப் பசுபிக் பிராந்தியத்தின் முக்கிய தளமாக மாற்றியமைத்தது.

இத்தளம் மூன்று பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட ஓர் இயற்கைத் துறைமுக அமைப்பினைக் கொண்டது இதனால் அமெரிக்கா தனது பாரிய கப்பல்கள் தங்கி நிற்பதற்கும் பழுது, பார்ப்பதற்கும் ஏதுவாகச் சிறந்த முறையில் இதனை அமைத்துக் கொண்டது. அத்துடன் இவ்விடத்திலிருந்து பசுபிக் கடலிற் செல்லும் நேசநாட்டுக் கப்பல்களுக்குரிய பாதுகாப்பும் அமெரிக்காவால் வழங்கப்பட்டது. மேலும், இதன் அருகில் ஓர் இராணுவ நிலையத்தையும் விமான இறங்குதுறையையும் அமெரிக்கா அமைத்துக் கொண்டது.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே ஜப்பான் கிழக்காசியாவில் ஒரு 'குட்டி வல்லர' சாகத் திகழ வேண்டும் என்னும் நோக்குடன் அதன் பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கையை முன்னெடுத்துச் சென்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜப்பான்நாட்டின் சரித்திரத்தை யிட்டும் சிறிது நோக்குவது அவசியமாகும். ஜப்பான் பிரதானமான நான்கு தீவுகளையும் பல சிறு தீவுகளையும் கொண்ட மலைகள் நிரம்பிய சமவெளிப் பிரதேசமாகும். அத்துடன் சனப்பெருக்கம் நிறைந்த ஒரு நாடாகும். அதன் சனத்தொகை பத்துககோடி அறுபத்து நான்கு இலட்சமாகும்.

## கிழக்காசியாவில் தனிக்காட்டு ராஜா

மிக நீண்ட காலத்திலிருந்தே ஜப்பான் முடியாட்சிக்குட்பட்ட ஒருநாடக இருந்து வந்துள்ளது. ஜப்பானியர் தமது அரசனைக் கடவுளாகவே மதித்துப் பேற்றுவர். அரசனின் வார்த்தைக்கு மறு வார்த்தை எந்த உயர்நிலையில் இருப்பவரிடமிருந்தும் வரமாட்டாது சனப்பெருக்கத்துக்கு ஏற்ற இடமின்மையும் மூலவளங்கள் குறைவும் அதனை அயல்நாடுகளின் மீது ஆக்கிரமிப்புக்களை மேற்கொள்ளத் தூண்டியாது 1904 ஆம் ஆண்டிலிருந்து 1941ஆம் ஆண்டுவரை ஜப்பான் ஆசியாவிலேயே குடிசனச் செறிவுமிக்க, உலகின் அரைப் பங்குச் சனத்தொகையைக் கொண்டிருந்த கிழக்கு தென் கிழக்கு ஆசிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெரிய சாம்ராச்சியத்தை நிர்மாணிக்கும் எண்ணத்துடன் செயற்பட்டது.

> ''ஜப்பான் சமாதானத்தை பற்றிக் கூறிக்கொண்டே முதுகில் குத்திவிட்டது''
>
> அமெரிக்க ஜனாதிபதி
> - ரூஸ் வெல்ட்

இரண்டாவது உலக யுத்தகாலத்தில் கொரியா, மலாயா, சிங்கப்பூர், பர்மா மற்றும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் ஆகியன அதன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன தொன்றுதொட்டே ஜப்பானியச் சக்கரவர்த்திகள் தாம் சூரிய வம்சத்தைச் (sun-godess) சேர்ந்தவர்கள் என்று எண்ணத்தை ஏற்படுத்தியிருந்ததால் அந்தநாட்டு மக்கள் பிறநாடுகளைக்கைப்பற்றி ஆளுவதற்குப் பெரிதும் தகுதி பெற்றிருந்தனர் என்ற எண்ணத்துடன் செயற்பட்டனர்.

யுத்தம் 1939 இல் தொடங்கிய சில வருடங்களுக்குள்ளேயே மேற் கூறப்பட்ட நாடுகள் எல்லாம் ஜப்பானின் வசம் வீழ்ந்து விட்டன அத்துடன், ஆசியா ஆசிய மக்களுக்கு மட்டுமே என்ற மேற்கு நாடுகளுக்கெதிரான கோவத்தினை அவர்கள் பலமாக எழுப்பினர் சர்வதிகாரி ஹிட்லர் மேற்கு ஐரோப்பா முழுவதை தையுமே குறுகிய காலத்தில் கைப்பற்றியதுபோல், மேற்குறிப்பிட்டநாடுகளையும் தொடர்ந்து கைப்பற்றி யுத்தத்தில் பெரும் வெற்றி பெறவேண்டும் என்றும் கிழக்கசியாவில் தம்மை எதிர்ப்பார் எவருமின்றித் ''தனிக் காட்டு''ராஜாவாக இருக்கவேண்டும் என்ற நோக்குடன் ஜப்பானிய இம்பிரீயல் படையினர் நாடுகளை கைப்பற்றினர். இந்தநோக்கத்திற்குப் பசுபிக் சமுத்திரத்தில் இருந்த

PUBLIC LIBRARY
JAFFNA.

அமெரிக்க கப்பற்படையே பெருந்தடையாக விளங்கியது. இத் தடையை இல்லாமற் செய்யும் நோக்கத்தை நிறைவேற்ற எப்படி ஜப்பான் இரகசியத் திட்டம் தீட்டி நிறைவேற்றியது.

வடமேற்குப் பசுபிக் சமுத்திரத்திலுள்ள ஒரு என்னுந் தீவில் அமைந்ததே பேர்ள் ஹாபர் என்பதை முன்பே நோக்கினோம். இந்தத் தளம் அமெரிக்காவிடம் இருக்கும் வரை முழுப் பசுபிக் பிராந்தியத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது ஜப்பானுக்கு முடியாத காரியமாகும் என அந் நாடு நம்பியது. ஆகவேதான் இந்தத் ''தொண்டை முள்ளை'' உடனே பிடுங்கி எறிய வேண்டும் என்றார் அப்போதைய ஜப்பானிய இம்பீரியல் கடற்படையின் தலைவரான அட்மிரல் எமமோட்டோ. அதற்கான தாக்குதல் திட்டங்களைத் தீட்டுவதற்குக் கப்பற் படையில் இருந்த திறமை மிக்கவரான கமாண்டர் ஹெண்டா என்பவரை அட்மிரல் மோட்டோ (அட்மிரல் இசுறோகு ஐமமோட்டோ என்பதே அவரின் முழுப் பெயர் ஆகும்) கேட்டுக் கொண்டார். இவர் ஜப்பானிய கடற்படையில் விமானப் படைப் பிரிவின் ஒரு முக்கிய உத்தியோகத்தராவார்.

## அதிரடித் தாக்குதல் திட்டம்

அட்மிரல் ஐமமோட்டோ அமெரிக்க ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் கற்றவர். அத்துடன் அவர் அமெரிக்காவில் ஜப்பானின் கடற்படைப் பிரதிநிதியாகவும் இருந்தவர். அவருக்கு அமெரிக்காவின் பலத்தையிட்டு நன்கு தெரியும். எனவே, பேர்ள் ஹாபர் தளத்தினைத் தாக்கி அழிப்பது என்பது ஒரு சிரமமான செயல் என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆயினும், ஜப்பானின் பசுபிக் சாம்ராச்சியத் திட்டம் நிறைவேற வேண்டுமானால் இக் கப்பல் தளம் அழிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார். இதற்காக அவர் ஒரு திட்டத்தினை வைஸ் அட்மிரல் சுயிட்சி நகுமோவிடம் சமர்ப்பித்தார். 'ஒரு அதிரடித் தாக்குதல் பேர்ள் ஹாபர் மீது மேற்கொள்ளப்பட வேண்டும்' என்பதே அத்திட்டத்தின் சாராம்சமாகும். மேலும், விமானந் தாங்கிக் கப்பல்களை இத்தளத்துக்கு அருகாமையிற் கொண்டு செல்லாது தூரத்திலேயே வைத்து, அதிலிருந்து விமானங்களைப் புறப்படச் செய்து தாக்குதல்களை நடத்திவிட்டு, திரும்பி வரும்போது கடலில் அவை கட்டாயமாக இறக்கப்பட்டு அவற்றின் விமானிகள் கடற்படைக் கப்பல்கள் மூலம் மீட்கப்பட வேண்டுமென்பதும் திட்டத்தின் ஓர் அம்சமாகும். இப்படிச்செய்தால் ஜப்பானியர்கள் தன்னிகரில்லாதவர்கள், அவர்

களுக்கெதிராகத் தாக்குதல் நடத்துவது முடியாத காரியம் என்று அமெரிக்கா நினைக்கும் என்று ஜமமோட்டோ 1941 ஜனவரி மாதத்தில் தமது திட்டத்தினைத் தமத நண்பர் ராகி ஜிரோ ஒனிசு என்பவரிடம் தெரிவித்தார். அவர் இதனைத் தமது உதவியாளரான கமாண்டர் மினோ ஹெண்டாவிடம் தெரிவித்த போது அவர் இதனை ஏற்கவில்லை. மாறாக ஹெண்டா தமது சொந்தத் திட்டத்தினைச் சமர்ப்பித்தார். அதிற் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

எடுக்கக்கூடிய எல்லா விமானந் தாங்கிகளையும் எடுக்க வேண்டும். பேர்ள் ஹாபருக்கு அருகிற் சென்றே தாக்குதல்களை மேற்கொள்ளவேண்டும். தாக்குதல் அதிகாலை நேரத்தில் மேற்கொள்ளப்பட்டால் எதிர்த்தரப்பினர் நமது விமானங்களை அடையாளங் கண்டு கொள்ளாமல் இருப்பதுடன், மிகக் கூடிய சேதத்தினையும் ஏற்படுத்தி அமெரிக்கக் கப்பல்களுக்கு மிகக் கூடிய பாதிப்பையும் உண்டாக்குவதுடன் அவற்றை முற்றாகச் செயலிழக்கச் செய்யலாம்.

வைஸ் அட்மிரல் ஒனிசு இவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டார். அத்துடன் அவரது சில சொந்த மாற்றங்களுடன் 1941 மார்ச் மாதத்தில் அட்மிரல் ஜமமோட்டோவிடம் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டம் மிக மிக இரகசியமாகவே தயாரிக்கப்பட்டது. இவ்விடயம் அமெரிக்காவிற்குத் தெரிந்தால் தமக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதே இதன் நோக்கமாகும்.

அடுத்த ஒரு மாதத்திற்குள்ளேயே ஐந்து விமானந்தாங்கிக் கப்பல்களும் பத்து தாக்குதல் கப்பல்களும் இணைந்த ஓர் அதிரடிப்படை உடனே செயலில் இறங்கியது. மற்றக் கடற்படை அட்மிரல்கள் இத்திட்டத்தின் உண்மையை அறியாததால் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். தெரிந்திருந்தால் அவர்கள் இதனை அங்கீகரித்திருக்கவே மாட்டார்கள். ஆனால், ஜமமோட்டோவோ தாமே இதனைச் செயற்படுத்த விரும்பினார். ஆயினும்,

ஹவாய் தீவுகளில் ஒன்றான ஒகுவில் அமைந்து இருந்த 'பேர்ள் ஹாபர்' எனும் அமெரிக்காவின் கடற்படைத்தளம் பசுபிக் பிராந்தியத்தின் மிக முக்கிய கடற்படைத் தளமாக கருதப்பட்டு வந்தது.

வேறு கடமைகளின் நிமித்தம் வைஸ்அட்மிரல் சுய்ச்சி நகுமோ விடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஜப்பானில் இருந்து 3500 மைல் தூரத்திலுள்ள பேர்ள் ஹாபர் தளத்திற்கு இரக சியமாக ஒரு பெரிய தாக்குதல் படையைக் கடல்மூலம் கொண்டு செல்வது என்பது மிகவும் ஓர் இக்கட்டான செயலாகும். ஆனால் வைஸ் அட்மிரல் நகுமோ இதனைத் தம் நாட்டுக்குச் செய்யும் பெரும் சேவையாகவே கருதினார். இத்தாக்குதலின் வெற்றியிலேயே ஜப்பானின் எதிர்கால பசுபிக் சாம்ராச்சியத் திட்டம் தங்கியிருந்ததை அவர் முழுமையாக ஏற்றுக் கொண்டார். தமது நாட்டுக்குச் செய்யும் பெரும் தியாகமாகவும் அவர் இதனைக் கருதினார். ஆனால், இது நிறைவேறமாட்டாது என்ற எண்ணமும் அவரின் உள்மனதில் அடிக்கடி உண்டாயிற்று.

## ஒரு பக்கம் பேச்சுவார்த்தை மறுபக்கம் தாக்குதலுக்கான ஆயத்தங்கள்

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே ஜப்பான் வடசீனாவை 1938 ஆம் ஆண்டு தாக்கத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் சீனக்கடலில் வைத்து ஒரு அமெரிக்கச் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டது. இச்செயலால் அமெரிக்க-ஜப்பான் உறவு பாதிக்கப்படத் தொடங்கியது. அதுமட்டுமின்றி ஜப்பானுக்கும் ஜேர்மனிக்குமிடையேயான நெருக்கமான சிநேகிதம் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஜப்பானைச்சந்தேகக்கண்கொண்டு நோக்கும் ஒரு நிலையையும் உண்டாக்கியது. இக்காலகட்டத்தில ஜப்பான் தான் ஒருபோதும் அமெரிக்காவுக்கு எதிராகப் போரில் இறங்கமாட்டாது எனவும் தெரிவித்தது. ஜப்பானின் பேர்ள் ஹாபர் தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே அப்போதைய ஜப்பானியப் பிரதமர் ஜெனரல் ஹிடோகிறோஜோ தமது விசேஷ பிரதிநிதி ஒருவரை 1941 நவம்பர் 17 ஆம் திகதி அமெரிக்க அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெடுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பினார். இச்செயல் குறித்து அமெரிக்கா பெரிதும் மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவித்தது. என்னே ஜப்பானின் போக்கு. ஒரு பக்கம் சமாதானப் பேச்சு வார்த்தை மறுபக்கம் தாக்குதல்களுக்கான இரகசிய ஆயத்தங்கள். எவ்விதமான யுத்தத்தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் ஜப்பானிய உயர்மட்டப் பாதுகாப்புக் கவுன்சிலின் அனுமதி பெறப்படவேண்டும். அட்மிரல் ஜமமோட்டோ இத்திட்டம் சம்பந்தமாகத் தமது சுயவிருப்பத்திற்கே செயற்பட்டார்.

104693



நிகழ்ச்சிகள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் ஜப்பானியச் சக்கரவர்த்தியாக இருந்த ஹிரகிட்டோ தமது நாட்டின் நிலையையிட்டு ஆராய்வதற்காக 1941 செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி அரசின் தலைவர்கள், முப்படைத்தளபதிகள் மற்றும் உயர் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு மகாநாட்டினைக் கூட்டினார். இந்த நேரத்தில் நாட்டின் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றிருந்த பியுமிமரோ கொனேயோ என்பவர் யுத்தத்தைச் சகல வழிகளிலும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அமெரிக்காவுடன் யுத்தம் செய்யத் தயாராகும்படியும் கூறியதுடன், அதேவேளை பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நடத்துவதும் நல்லது என்றும் தெரிவித்தார். இக்கட்டத்தில் சக்கரவர்த்தி பேச்சு வார்த்தையை நடத்தினால் என்ன என்று வினவியபோது எவரும் செவிசாய்க்கவில்லை. இந்தக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த கடற்படைத் தலைவர் சக்கரவர்த்தியிடம் பேர்ள் ஹாபர் தாக்குதல் திட்டத்தினைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

காலம் விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றது. ஜப்பானின் கையிருப்பு எண்ணெய் நிலையும் மோசமடைந்து வருகின்றது. அமெரிக்கா தங்கள் மீது தாக்குதல் நடத்த முன் தமது திட்டத்தினை நிறைவேற்ற வேண்டுமென்று ஹெண்டாவும் ஜமமோட்டோவும் விடாப்பிடியாக நின்றனர். காலம் கடந்து கொண்டு போகையில் கடற்படைத் தலைமைப்பீடம் ஒரு முடிவினையும் எடுக்காததையிட்டுப் பெரிதும் ஆத்திரமுற்ற அட்மிரல் ஜமமோட்டோ 1941 ஒக்டோபர் மாதத்தில் தனது சீனியர் உத்தியோகத்தரான கமற்ரோ குரோஷிமோ என்பவரைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பினார். தலைமையலுவலகத்திற்குச் சென்ற குரோஷிமோ 'தலைமையகம் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்காவிட்டால் அட்மிரல் ஜமமோட்டோவும் பல கடற்படை உத்தியோகத்தர்களும் பதவிகளை விட்டு விலகிவிட உத்தேசித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்தார். நிலைமையின் சிக்கலை உணர்ந்த தலைமையகம் திட்டத்திற்குத் தனது ஒப்புதலை வழங்கியது.

ஜப்பானியப் படையினருக்கு பேர்ள் ஹாபரைப் பற்றித் தெரிந்திருந்தும் அங்கு எத்தனை கப்பல்கள் எங்கெங்கு நிறுத்தப்பட்டிருக்கும் என்பதையிட்டுச் சரியான விபரம் தெரியாது. அத்தகைய விபரங்கள் உடனடியாகச் சேகரிக்கப்பட வேண்டுமென்று ஜமமோட்டோ குழுவினர் கருதினர். இதற்கு ஜப்பானில் உளவுப்படையைப் பயன்படுத்த வேண்டுமென்றும் தீர்

மானித்தனர். பேர்ள் ஹாபர் இந்தத் தீவின் பிரதான நகரமான ஹொனலூலுவில் இருந்த அப்பிராந்தியத்திற்கான ஜப்பானிய இணைத் தூதுவராலயத்திற்கு ஒற்றர்களை அனுப்பத் தீர்மானித்தனர். இம்பீரியல் நேவியில் வேலை செய்த ரெக்கியோ ஜொசிக்காவா என்பவர் இதற்காக இணைத்தூதுவராலயத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கிருந்து பேர்ள் ஹாபரையும் அங்கு வரும், தங்கி நிற்கும், வெளியே செல்லும் கப்பல்கள் மற்றும் அருகில் உள்ள விமானத்தளம் ஆகிய எல்லா விபரங்களையும் படமெடுத்தும் கவனித்தும் கொளவார். பின் இரவில் தன் காரியாலயத்தில் இருந்தவர்கள் உறங்கியதும் எல்லாவற்றையும் விபரமாகக் குறித்துக்கொள்வார் பின் இவை யாவற்றையும் தூதுவராலயத்திற்குரிய சிறப்புரிமையைப் பயன்படுத்தி ஜப்பானுக்கு உரியவர்களுக்கு அனுப்பப்பட்டன.

இவ்வாறு நிலைமைகள் நடைபெற்று வருகையில் ஜப்பானில் இருந்த அமெரிக்கத் தூதுவர், பேர்ள் ஹாபர் மீது ஜப்பான் மேற்கொள்ள இருக்கும் விமானத் தாக்குதல் பற்றிய செய்தியை இரகசிய பரிபாஷை மூலம் வாஷிங்டனுக்குத் தெரிவித்தார் இதனை அமெரிக்கப் பாதுகாப்பு இலாகா பசுபிக் கடற்படையின் சுப்ரீம் கமாண்டராகவிருந்த அட்மிரல் கிமமல் என்பவருக்கு அனுப்பி வைத்தது அவர் தமது துணை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது பேர்ள் ஹாபர் பாதுகாப்புக்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. அமெரிக்கா மீது இராணுவ ரீதியாகத் தலையிடுவது ஜப்பான் தன்னையே அழித்துக் கொள்வதற்குச் சமம் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் கருதினர். அந்த நேரத்தில் அத்திலாந்திக் கடற்பிராந்தியத்தில் ஜேர்மனிய நீர்மூழ்கிகள் நேசநாட்டுக் கப்பல்கள் மீது தாக்குதல்களை அதிகரித்திருந்தமையால் அமெரிக்காவின் கவனமும் அந்தப்பக்கமே அதிகம் திருப்பப்பட்டது.

கமாண்டர் ஹெண்டா 1941 செப்டம்பர் மாதத்தில் நூற்றுக் கணக்கான விமானங்களுடனும் தேர்ந்தெடுக்கப்பட்ட விமானிகளுடனும் தாக்குதலுக்கான விசேஷ பயிற்சி ஒத்திகையை ஆரம்பித்தார். ஜப்பானியக் குண்டு வீச்சு வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு ஆபத்து மிகுந்ததும் புதுப்புது வகையானதுமான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பேர்ள் ஹாபரின் ஆழத்திற்கேற்ப (45-65) வெடிக்கக்கூடிய குண்டுகள் (ரோப்பெடோக்கள்) விசேஷமாகத் தயாரிக்கப்பட்டு, பேர்ள் ஹாபரையொத்திருந்த ஜப்பானியப் பிரதேசமான சுகோசிமாக்குடா என்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

னுமிடத்தில் (போர்லண்ட் தீவு என்பது) பரீட்சித்துப் பார்க்கப் பட்டது. கடற்குண்டுகளை (ரோப் பெடோக்கள்) இலக்கில் வீசக் கூடியவாறு விமானங்கள் 6500 அடி உயரத்திலிருந்து 130 அடி உயரத்திற்குப் பணிந்து வந்து குண்டுகளைப் போட்டு பயிற்சிகள் நடைபெற்றதுடன் விமானிகள் இதை மிகத் திறமையாகச் செயலிறகாட்டினர்.

> பேர்ள் ஹாபர்மீது ஜப்பானியர் நடத்திய திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கையே அமெரிக்காவை இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரவேசிக்கத் தூண்டியது!

தாக்குதல் கப்பல் படையினர் நவம்பர் 5 ம் திகதி தமது கடைசி ஒத்திகையை வெற்றிகரமாக நடத்தினர், சமகைடர் சுக விமானிகளுக்கு பேர்ள் ஹாபரில் கவைடவற்றை எல்லாம் விளக்கிக் கூறினார். நவம்பர் 17 ஆம் திகதி தாக்குதல் படைக் கப்பல்களுக்கு அட்மிரல் ஜமமோட்டோ பிரியாவிடை அளித்தார். இப்பிரிவில் ஆறு விமானத்தாங்கிகள் உட்பட 31 கப்பல்கள பங்கெடுத்தன. இவையெல்லாம் பனியினால் மூடப்பட்டிருந்த கிட்டோகப்பு குடாவில் ஒன்றிணைந்து அங்கிருந்த பயணத்தைத் தொடரவேண்டுமென்பதே திட்டமாகும். கப்பல்கள் பயணத்தை ஆரம்பிக்கும்போது சிறு சந்தேகமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் விஷேச கவனம் செலுத்தப்பட்டது.

நவம்பர் 22 ஆம் திகதி வைஸ் அட்மிரல் நகுமோ விமானிகளையெல்லாம் கப்பலின் அறைக்கு அழைத்தார். முதன்முறையாக அப்போதுதான் தாம் மேற்கொண்டிருக்கும் பயணத்தின் அடிப்படை நோக்கத்தை வெளியிட்டார். அத்துடன் அக்காரியத்தை நீங்கள் மிகவெற்றிகரமாகச் செய்து முடிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நவம்பர் 25 ம் திகதி இலக்கை நோக்கிச் செல்லுமாறு கடற்படைத் தலைமையகத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உடனேயே அதிரடி ஆமெடா முன்னேறத் தொடங்கியது. கப்பல்களின் வயர்லெஸ் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இரவில் கப்பல்களின் வெளிச்சங்கள் அணைக்கப்பட்டன. கொடிகளை அசைப்பதன் மூலமும் நிற வெளிச்சங்கள் மூலமும் கப்பல்களுக்கிடையிலான செய்திப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. வடபிராந்தியத்திலிருந்த பனிமூட்டம் கப்பல்கள் செல்வதை மேலிருந்து பார்க்க முடியாதவாறு மறைத்தது. இந்த நாட்களில்

ஜப்பானிய காலாட்படைப் பிரிவுகள் இந்தோசீனத்தில் ஏராளமாக வந்திறங்கின. எதிரிகளது கவனத்தைத் திருப்புவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை அமெரிக்காவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தன. டிசம்பர் மாதம் 6ம் திகதி எல்லாக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் முழு அளவில் எரிபொருள்கள் நிரப்பப்பட்டன. அன்று மதியத்தின்பின் விமானமோட்டிகள் கப்பல் தளத்துக்கு அழைக்கப்பட்டு சக்கரவர்த்தியின் ஆசி செய்தி அவர்களுக்கு வாசித்துக்காட்டப்பட்டது. கப்பல் அணி சரியாகத் தெற்கு நோக்கித் திருப்பப்பட்டு அவற்றின் வேகம் அதிகரிக்கப்பட்டது. தாக்குதல் அணியினர் தற்போது இலக்கிலிருந்து 500 மைல் தூரத்தில் இருந்தனர்.

டிசம்பர் மாதம் ஏழாந் திகதி, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரம் பேர்ள் ஹாபரில அமைதி குடிகொண்டிருந்தது. ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபடியால் இந்த அமைதி காணப்பட்டது. அமெரிக் கப்படையினர் மனதிலும் விடுதலை நாள் அமைதி நிலவியது. எந்தவிதப் பரபரப்புமின்றி வழக்கப்படி நிலைமை இருந்தது. இன்னும் சில மணி நேரத்தில் இங்குள்ள பலர் உயிரோடு இருக்க மாட்டார்கள். இலக்கிலிருந்து சுமார் 200 மைல் தொலைவில் தாக்குதல் அணி இருந்தபோதுதான் வைஸ் அட்மிரல் ஜமமோட்டோ கமாண்டர் ஹொண்டாவைப்பார்த்து, ''தாக்குதல் அணியை நான் எனது இலக்குவரை கொண்டு வந்துவிட்டேன் மீதி வேலையைக் கவனிப்பது உம் பொறுப்பு'' என்று கூறினார் கமாண்டர் ஹொண்டா அதை ஏற்றுக்கொண்டு செயற்பட்டார் சரியாக அதிகாலை 5.30 மணிக்கு இரு நீண்ட தூர கடல் விமானங்கள (சீபிளேன்) முதலிற் புறப்பட்டுச் சென்றன. தாக்குதல் விமானங்களுக்கு பேர்ள் ஹாபரின் நிலைமையையிட்டுத் தெரிவிக்கவே அவை முதலிற் சென்றன. சுமார் 15 நிமி நேரத்தில் விமானந் தாங்கிக் கப்பலிலிருந்து சுமார் 83 விமானங்கள் இலக்கை நோக்கி ஆகாயத்தில் பாய்ந்து சென்றன. விமானங்கள் மூன்று அணியிற் சென்றன. மொத்தமாக 353 விமானங்கள் தாக்குதலிற் பங்குபற்றின. யுத்த சரித்திரத்தில் ஒரே தடவையில் இவ்வளவு தொகையான விமானங்கள் தாக்குதலகளிற் பங்குபற்றியமை இதுவரை உலகில எங்கும் நடைபெற்றிராத சம்பவமாகும்.

ஒரு பெரிய நாட்டின் மிகச் சக்திவாய்ந்த கடற்படையும் விமானங்களும் யாருமே எதிர்பாராத வகையில இப்படித் தாக்கியழிக்கப் புறப்பட்ட சம்பவம் உலக மக்களுக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது சரியாக காலை 7 49 மணிக்கு தலைமை விமானியான பியூச்சிடாவின் ரூ-ரூ-ரூ எனனும் செய்தி ஜப்பானை எட்

டியது 'ரூ' என்பது ஜப்பான் மொழியில் தாக்குதல் என்னும் பொருளின் முதல் அடியாகும். பேர்ள் ஹாபரில் நிறுத்தியிருந்த கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் பேரிடி விழுந்தது போலாயிற்று அடுத்த செய்தி ரோரா-ரோரா-ரோரா- என்று அனுப்பப்பட்டது இதன் கருத்து' தாக்குதல் வெற்றி' என்பதாகும்.

ஜப்பானியரின் தாக்குதல் காலை 7.55 இலிருந்து 9.45 வரை நீடித்தது. மொத்தமாக 2638 அமெரிக்கப் படையினர் தாம் இருந்த இடத்திலேயே மாண்டனர். 946 பேர் காயமுற்றனர் அமெரிக்க டிஸ்ரேயர் அரிசோனா முற்றாகச் சேதமடைந்தது. அத்துடன் 7 கப்பல்களும் 177 விமானங்களும் சேதமுற்றன. ஜப்பான் 28 விமானங்களை இழந்தது.

பேர்ள் ஹாபரில் இத்தகைய ஒரு தாக்குதலை ஜப்பான் நடத்தும் என்று அமெரிக்கா மாத்திரமல்ல, முழு உலகமுமே எதிர்பார்க்கவில்லை. இத்தாக்குதல் சம்பவம் அமெரிக்க மக்களை ஆத்திரமடையச் செய்ததுடன் இரண்டாவது உலகயுத்தத்தில் அமெரிக்கா பிரவேசிக்க வழியும் ஏற்படுத்தியது. சுமார் நான்கு ஆண்டுகளில் ஜப்பான் மீது முதல் அணுகுண்டை அமெரிக்கா வீசுவதற்கும் இச்சம்பவமே அடிகோலியது என்பதில் பெருமளவு உண்மையுண்டு. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் "ஜப்பான் சமாதானத்தைப் பற்றிக் கூறிக்கொண்டே முதுகில் குத்திவிட்டது" என்று கூறினார்.

---

# மூளைக் கோளாறுக்கு மருந்து

மூளையில் சிரடோனின் சரியான அளவிலிருக்கும் போது மனிதனால் ஒழுங்காகச் சிந்திக்க முடிகிறது. அதன் அளவு குறையும்போது பிரமைகளும், மனப் பிராந்தியங்களும் ஏற்படுகின்றன சித்தப் பிரமை வியாதியின் அறிகுறிகள் தோன்றத் தொடங்குகின்றன. மூளைக்கோளாறுகளுக்கு இந்த ரசாயனப் பொருளை பயன்படுத்திச் சிகிச்சை செய்யமுடியும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது அதற்கான பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன எல்.எஸ்.டி. என்னும் லாகிரிப் பொருள் சிரடோனினைப் பாதிக்கிறது எல்.எஸ்.டி மூலக் கூறுகள் உடலுக்குள் புகுந்தவுடன் நேராக மூளையின் சில குறிப்பிட்ட கூறுகளுக்குச் சென்று சிரடோனின் செயல்படுவதைத் தடுக்கின்றன. இப்மி ளவு எல். எஸ் டி கூடப் பயங்கரமான பிரமைகளையும் மாயத் தோற்றங்களையும் உண்டாக்குவதற்கு காரணமாகின்றது.

---

# செந்தமிழ் நாடு சிதறிப் போகும்!

(ராணி - 01. 05. 1994)

**தமிழ்நாட்டில் இன்னும் தமிழே ஆட்சிமொழியாக வில்லை! அதற்குள் தெலுங்கு, மலையாளம், கன்னடம் மொழிகளும் தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டு உள்ளன! இது தமிழ்நாட்டை சிதறடித்துவிடும்!**

தமிழ்நாட்டில் இன்னும் தமிழே ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை!

எங்கும் ஆங்கிலம்! எதிலும் இந்தி!!

இந்த அழகில் மலையாளம், தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய மொழிகளையும் தமிழ்நாட்டில் ஆட்சிமொழிகளாகத் தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது!

அவர்கள் மொழிச்சிறுபான்மையினராம். அவர்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் மொழிகள் ஆட்சிமொழிகளாம்!

அவர்கள் அந்தப் பகுதிகளில் பெரும்பான்மையாகக்கூட வாழ வேண்டியது இல்லை! நூற்றுக்கு 15 பேராக வாழ்ந்தால்கூடப் போதும்! அங்கே அவர்களின் மொழி ஆட்சிமொழி!

பள்ளிக்கூடத்தில் அவர்கள் அவர்களின் தாய்மொழியில் பாடம் படிக்கலாம்! நீதிமன்றங்களில் அவர்களின் தாய்மொழியில் வழக்காடலாம்! அரசு அலுவலகங்களில் அவர்களின் தாய் மொழியைப் பயன்படுத்தலாம்!!

எதற்காக இந்த ஏற்பாடு?

வேறு எந்த மாநிலத்திலும் மொழிச் சிறுபான்மையினருக்கு இந்த உரிமை அளிக்கப்படவில்லை!

திருவனந்தபுரத்தில் தமிழ் ஆட்சிமொழி அல்ல! பெங்களூரில் தமிழ் ஆட்சிமொழி அல்ல! பம்பாயில் தமிழ் ஆட்சிமொழி அல்ல! செகந்திரபாதநில் தமிழ் ஆட்சிமொழி அல்ல! ஆனால், தமிழ்

நாட்டில் மட்டும் மலையாளம் ஆட்சிமொழி! தெலுங்கு ஆட்சி மொழி! கன்னடம் ஆட்சிமொழி! உருது ஆட்சிமொழி!! மார்வாடிகள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? விரைவில் இந்தியும் ஆட்சிமொழியாக எதிர்பார்க்கலாம்!

ஏன் இவ்வளவு கருணை?

தேர்தல் நேரத்தில் அவர்கள் வாக்குகளைப் பெறத்தான்!

மக்களாட்சியின் மிகப் பெரிய கேடு என்று இதனைத்தான் தந்தை பெரியார் கூறுவார்!

சில நூறு வாக்குகள் கிடைக்கும் என்பதற்காகத் தமிழையே விற்கத் துணிந்துவிட்டார்கள்!

இதனால் ஏற்படும் கேடுகளை யாராவது எண்ணிப் பார்த்தார்களா?

"தமிழை ஆட்சிமொழி ஆக்கக் கூடாது" என்று நாளை இவர்கள் கூறினால், "சரி" என்று சலாம் போட வேண்டியிருக்குமே!

"சுதந்திரத் தமிழ்நாடு" என்று கேட்கிறார்கள்! நாளை சில பேர் "எங்களுக்கு முதலில் சுதந்திரத் தெலுங்கு நாடு பிரித்துக்கொடு" என்று கேட்பார்களே! "நாம் தமிழர்" இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில் "நாம் தெலுங்கர்" இயக்கம் தொடங்கியவர்கள் தானே!

இன்றைக்கு திருவள்ளுர், திருத்தணியில் தெலுங்கு ஆட்சி மொழி! நாளை என்ன ஆகும்? "நாங்கள் ஆந்திராவுடன் சேர்ந்து கொள்ளுவோம்" என்று போராடுவார்களே! ஏற்கனவே நமக்குத் திருப்பதி மொட்டை போட்டுவிட்டார்கள்! நாளை திருத்தணி, திருவள்ளுருக்கும் பெரிய பட்டை நாமம் போட்டுவிடுவார்களே!!

பத்மநாபபுரம், குழித்துறை, விளவங்கோடு பகுதிகளில் மலையாளம் ஆட்சிமொழியாம்! தளபதி நேசமணி பெரும் போராட்டம் நடத்தி, இந்தப் பகுதிகளைத் தமிழ்நாட்டுக்கு மீட்டுக் கொடுத்தார்! மீண்டும் கேரளாவுக்குத் தாரைவார்க்கப் போகிறோமா!? தேவிகுளம்- பீர்மேட்டை இழந்தது போதாதா?

மேட்டுப்பாளையம், கோபி, பெருந்துறை, சத்தியமங்கலம் பகுதிகளில் கன்னடம் ஆட்சிமொழி!

சும்மாவே கன்னடர்கள் தமிழர்களை அடித்து விரட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்! இந்தப் பகுதிகளில் இருந்தும் தமிழர்களை அடித்து விரட்டிவிட்டு, கர்நாடகாவுடன் கலந்து கொள்ள நாமே வழிகாட்டுகின்றோம், இல்லையா?

தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளை ஆட்சிமொழி ஆக்குவதன் விளைவு இன்று தெரியாது! பத்து, ஐம்பது ஆண்டுகள் போனபின்புதான் தெரியும்!

அன்று சிதறு தேங்காய் போலத் தமிழ்நாடு துண்டு துண்டாக சிதறிப்போகும்!!

வேலியில் போகும் ஓணானைப் பிடித்து காதுக்குள் விட்டுக் கொள்ளுவானேன்! பிறகு குத்துது குடையுது என்று அவதிப்படுவானேன்!!

இந்த சிறுபான்மையினர் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசு உடனே திரும்பப் பெறவேண்டும்!

# தூக்கம்

மனிதர்கள் தூங்குகிறதைப் பற்றி நமக்குத் தெரியும் பிராணிகள் தூங்குகிறதைப் பற்றி சிலவிந்தையான விஷயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. விலங்குகள், பறவைகள்' மீன்கள் போன்றவற்றின் வாழ்க்கைமுறைகளைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருப்பது மட்டுமின்றி மனித உடலின் தன்மையைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும் இத்தகைய ஆய்வுகள் பயன்படுகின்றன. ஒரு பிராணியின் தூக்க வழக்கங்கள் அதனுடைய வாழ் சூழ்நிலைகளை அனுசரித்தே அமைகின்றன. உதாரணமாகப் புறாக்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் தூங்கும் அவற்றுக்கு நீண்ட நேரம் பறக்கக் கூடிய வலுவிருப்பதால் இரைதேட எவ்வளவு தூரம் போனாலும் இரவில் தூங்குவதற்கு தமது சொந்தக் கூட்டுக்குத் திரும்பி வந்துவிடக் கூடிய ஆற்றல் உள்ளது ஆகவே அவை அடிக்கடி தமது தங்குமிடங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவையிருப்பதில்லை. இதற்கு மாறாக கொரில்லா மனிதக் குரங்கு தனது அகோரமான பசியைத் தணித்துக் கொள்வதற்காக அக்கம் பக்கத்திலுள்ள உணவுப் பொருள்களையெல்லாம் விரைவில் தின்றுதீர்த்துவிடுகிறதால் அது உணவைத் தேடி வெவ்வேறு இடங்களுக்குப் போய்க் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. இதனால் கொரில்லா ஓரிடத்தில் ஒரு நாளைக்கு மேல் தங்கித் தூங்க முடிகிறதில்லை. கொரில்லா மனிதனுக்கு நெருங்கிய உறவுள்ள உயிரினம். அது தனது குடும்பத்துடன் சேர்ந்துதான் தூங்கும் குடும்பத்தலைவனான கொரில்லா தூங்குவதற்குப் பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுக்கும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# சைபீரியா: மொழிகளுக்குச் சாவுமணி

— விளாடிமீர் பெலிக்கோவ்
(ஏப்ரல் - 1994)

**உலக மொழிகளில் பல இன்று வழக்கழிந்து போகும் நிலையிலுள்ளன. பண்பாட்டு மாறுபாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு சைபீரியச் சிறுபான்மை மக்களின் அவலக்கதை சிறந்த எடுத்துக்காட்டு.**

உலக அளவில் பண்பாட்டு மாற்றங்கள் தானாகத் தோன்றினாலும், ரஷ்யாவில் மட்டும் பொதுவுடைமைக் கட்சியின் நேரடி விளைவாக பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்டன. பொதுவுடைமைப் புரட்சி நடந்த சிறிதுகாலத்தில் பண்பாட்டுக் கட்டமைப்புத் திட்டம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதனுடைய நோக்கம் யாதெனில் வெளியமைப்பில் தேசியமும், உள்ளமைப்பில் பொதுவுடைமையும் கொண்டிருக்கவேண்டும் என்பதே. பல்வேறு பண்பாட்டு, மொழி பாரம்பரியம் ஆகிய அனைத்திலும் தேசிய நீரோட்டச் சிந்தனையிருக்கவேண்டும் என்பதே இதன் முக்கிய கொள்கையாகும்.

இத்தகைய திட்டத்தின் முதல் விளைவுகளில் சில, மனதைக் கவரும் வகையில் விளங்கின. உக்ரெய்னிலுள்ள போல்டவா மாவட்டத்தில் ஒரு சிறு கிராமத்தில் ஸ்வீடன் நாட்டு மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆங்கு உள்ளாட்சி நிர்வாகத்திற்கு ஸ்வீடிய மொழியானது அரசு மொழியாகத் திகழ்ந்தது சைபீரியாவிற்குக் குடிபெயர்ந்த எஸ்தோனியன் மற்றும் லாட்வியன் ஆகியோரின் தாய்மொழி வளர அரசே பணம் கொடுத்து உதவியது. நாடோடி மொழியில் முதன் முதலாக (ஒன்று மட்டும்தான்) பள்ளிகளுக்கு வேண்டிய ஆரம்பப் பாடங்கள் அச்சடிக்கப்பட்டன. பொதுவுடைமை அரசாங்கத்தின் பிரச்சாரத்தில் சைபீரியாவை தேசிய பண்பாடுகளின் மலர்ச்சியென்று வர்ணித்தார்கள்.

## பண்பாட்டு ஒன்றிணைப்பு

1930ஆம் ஆண்டுகளின் மத்தியில் தீவினைப் பயனாக மலர்ச்சியானது மறையத் தொடங்கியது. இத்தகைய தன்மை செயல்முறை பொதுவுடைமைத் தன்மையை வளரச்செய்ய உதவாதது மட்டுமல்லாமல், சில சமயங்களில் பொதுவுடைமைத் தன்மைக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இம்மலர்ச்சி விளங்குவதாக ஆட்சிப் பொறுப்பாளர்கள் கருதினர். வெளியிலே விளம்பரம் செய்யாவிட்டாலும் பல்வேறு சிறுபான்மையினரின் பண்பாட்டை ஒன்றிணைக்கும் திட்டத்திற்கு ஆதரவு தரப்பட்டது.

ரஷ்யாவின் சமய மாறுபாடற்ற கிறித்துவத் திருக்கோயிலின் தாக்கத்திற்குட்பட்ட சில கிராமப் பகுதிகளில வாழும் மக்களிடையே, பணபாட்டில் வேறுபாடு மிக அதிக அளவில் இருக்கவிலலை. இத்தகைய பகுதிகளில பணபாடு ஒன்றிணைப்பானது மெதுவாக நடந்தாலும், ஆணடுகள் ஆக ஆக மொழி மற்றும் பணபாட்டு எலலைகள் மெலல மெல்ல முழுவதுமாக மறையத் தொடங்கின. சான்றாக ஐரோப்பிய ரஷ்ய விலை வடக்குப் பகுதியில் உளள கீழ்ப்பெச்சோரா ஆற்றின நதிக்கரையில ஃபின்னோ உக்ரக் மக்களான கோமியினத்தினர், பல நூற்றாண்டுகளாக ரஷ்யர்களோடு வாழ்ந்து வருகின்றனர். நாட்கள ஆக ஆக, ரஷ்யர்களின் எணணிக்கை அதிகரித்ததோடு, ரஷ்ய மொழியின தாக்கமும் அதிகரித்தது. பள்ளிகளில ரஷ்ய மொழியைப் பயன்படுத்தும் காலமவரை, கோமி இனத்தவர் இரு மொழி பேசுபவர்களாக இருந்தனர்.

பல்வேறு ஆண்டுகளுக்குமுன் நான் ஒரு கோமி மீனவரைக் கண்டேன். அவர் ஒரு கதையைச் சொல்லி, அதை முடிக்கும்போது பயன்படுத்திய வாக்கியமானது, இன்னும் என் மனதில் நிற்கிறது. அந்த மீனவருக்குப் புரியாவிட்டாலும் அவர் பேசிய மொழியில், வேர் மற்றும் துணைச்சொற்கள் ரஷ்ய மொழியில் இருந்தன. ஆனால், அவர் பயன்படுத்திய இலக்கணமோ கோமியைச் சார்ந்ததாகும். அவ்வாக்கியமானது இவ்வாறு இருந்தது: டேக் ஆஃப் டிம் ரிங்-ஸே அண்ட் ஃபண்டவுட் - டிம் தெட்டக் - இஸ் ஸ்பெண்ட் வின்டர் - டோமா ஸ்பிரான் - இன் (இத்தகைய ஆங்கில மயமாக்கலில கோமி பின்னிணைப்புகள் தகவல் அளிப்பவர் பயன்படுத்தியதைப்போல ஒதுக்கப்பட்டுள்ளன).

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக ரஷ்யாவில் உள்ள இப்பகுதிக்கு என்னால் செல்ல இயலவில்லை. இப்பேச்சு வழக்கானது நடைமுறையில் உள்ளதா என்றும் எனக்குத் தெரிய

வில்லை. ஆனால் ரஷ்ய மொழியின் ஆதிக்கத்தினால் கோமிப் பண்பாட்டினைப் பாதுகாக்க இயலவில்லை. என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது. இம் மொழிக் கலப்பானது, செய்திப் பரிமாற்றத்திற்குரிய ரஷ்ய மொழியோடு போட்டியிட முடிய வில்லை. 1970 ஆம் ஆண்டு எண்ணெய் வளப் பகுதிகளில் பணி புரிய ஆயிரக்கணக்கில் புதியவர்கள் வந்தனர். அனேக கோமி மீனவர்கள் தொழிற்சாலையில் பணிபுரியத் தொடங்கினர்.

பண்பாட்டாக்கல் தன்மைக்கும் குறிப்பாக, மொழியமைப்பு மாற்றத்திற்கும் மேற் சொன்ன செய்தியானது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பண்பாட்டு பரிமாற்றத்தின் விளைவு, இதுமட்டும் தான் என்றுகூற முடியாது. சான்றாக வெவ்வேறு மொழியைப் பேசும் இரு குழுவினர்கள் திடீரென்று ஒன்றாக இணைந்தால், குறைந்த அளவில் பேசும் மொழியின் பண்பாடானது வெகு விரைவில் மறைந்துவிடும், அதிக அளவில பேசப்படும் மொழியின் ஆக்கமும் மதிப்பும் உயர்வாகக் கருதப் படுவது தான் இதன் காரணமாகும். பண்பாடு முற்றிலும் மறை யும் தன்மையானது, வலுவிழந்த மனித இனப்பிரிவின துன்பம் தரக்கூடிய விளைவுகளைப் பொறுத்தே அமைகிறது. இதனால், பொதுவாக அவ்வினத்திற்குள்ளே அமைதியில்லா நிலை, அதிக அளவில் குற்றமிளைப்பு, மது அருந்துவோரின் எண்ணிக்கை உயர்வு, வாழும் ஆண்டுகள் குறையும் தன்மை ஆகியவை தென் படும். இத்தகைய அபாயமானது சைபீரிய டைகா காடுகளி லும் வடக்கில் வெகு தூரத்திலுள்ள ஆர்க்டிக் துந்துரா பகுதி யிலும் காணப்படுகின்றன.

## மரபு அறிவதற்கான அபாயம்

பதினாறாம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் ரஷ்யர்கள் சைபீரியாவை வெகு எளிதில் தம் வசமாக்கிக்கொண் டனர். அவர்கள் இப்பகுதியை வெளிநாட்டு எல்லை என்று கருதவில்லை. பல நூற்றாண்டு காலமாக ரஷ்யாவிற்குக் கிழக் குப் பகுதியில் எல்லையில்லாமல் இருந்ததால், அவர்கள் வெகு எளிதாக கிழக்குப் புறம் நோக்கிச் சென்றுகொண்டே இருந்த னர். இவ்வாறு சென்றவர்களில பெரும்பாலோர் பயிரிடுவதற்கு வசதியான தெற்கு சைபீரியாவில் குடியேறினர். சிலர் வடக்கின் வெகுதூரத்தில் உள்ள பகுதியில் குடியேறியதோடு மட்டுமல் லாமல் ரஷ்ய மொழியையும் மறக்கத்தொடங்கினர்.

1930 ஆம் ஆண்டுவரை உள்ளூர் சமூகத்தினர் மிகவும் நிலையாக இருந்தனர். வடக்கின் வெகு தூரத்திலுள்ள பகுதிகளிலும் மரம் அறுத்தலும், தாது வெட்டியெடுத்தலும் அதிகமாக, அதிகமாக

வாழும் சூழ்நிலையானது மாறத் தொடங்கியது. பொதுவாக அங்குள்ளோருக்கென்று சிறப்பான கல்வி நிலையங்கள் யாதொன்றும் இல்லாமல் இருந்தன. சிறுமிகள் தாம் செய்யக்கூடிய வேலைகளை தங்களுடைய அன்னையிடமிருந்து கற்றுக்கொண்டனர் சிறுவர்கள் தங்களுடைய வாழும் முறைகளை தந்தையிடமிருந்தும் மூத்த சகோதரரிடமிருந்தும் கற்றுக் கொண்டனர். வயதில முதிர்ந்தோர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுத்தனர் நோயாளிக்குக் குணம் அளிப்பது, மறைந்த பொருள்களைக் கண்டுபிடிப்பது, வானுலகிற்கு இறந்தோரின் ஆவியை அனுப்புவது ஆகிய அனைத்திற்கும் ஷாமென் உதவி செய்தனர் (ஷாமென் என்பது துங்கஸ் மொழியின் மூலம் கிடைத்த வார்த்தையாகும்.)

1924 ஆம் ஆண்டு முதல், இச் சூழலானது மாற ஆரம்பித்தது. வடக்கின் வெகு தூரத்திலுள்ள மக்களுக்கு உதவி புரிவதற்காக ஒரு குழு நிறுவப்பட்டது. இக்குழுவானது பல்வேறு இனப்பிரிவினரின் பாரம்பரியத்தில் இருந்து மாறி, பொதுவுடைமை வாதியாக்கத் தூண்டுகோலானது. இம்மாற்றத்தை உடனடியாக ஒரே தலைமுறைக்குள் ஏற்படுத்தியது.

1920 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொலைத்தூர சைபீரிய பகுதியில் வாழும் மக்களுக்கு ரஷ்ய மொழியைக் கற்றுத்தர ஆசிரியர்கள் வந்தனர். அச்சமயத்தில் வடக்கில் புழங்கும் பதின்மூன்று மொழிகளில் ஆரம்பப் பள்ளிக்குரிய பாட நூல்களின் எழுதப்பட்டன ஆனால் இந்நூல்களின் உள்ளடக்கமோ. ஒரே மாதிரியாக இருந்தன, குறிப்பாக லெனின் மற்றும் ஸ்டாலினின் வாழ்க்கைச் சரிதங்கள், ஜார் மன்னர்களின் குற்றங்கள், புரட்சியில் ஈடுபட்டோரின் வீரச் செயல்கள், தொழில்மயமாக்கலின் சாதனைகள் ஆகியவை பாடங்களாக இருந்தன.

சைபீரிய சிறுபன்மையினரின் நூல்களின் ஒரு பகுதியில், உள் நடப்புகளுக்கு இடம் இருந்தது. இதில் வயதானவர்களிடம் உண்மையான அறிவில்லாத்தன்மை வயதானவர்களிடம் காணப்படும். தவறான பழக்க வழக்கங்கள், தொன்றுதொட்டு வரும் பாரம்பரியம் என்பது அறியாமையின் விளைவு என்று இந்நூல்களில் எழுதினர். அது மட்டுமன்றி ஷாமென் என்பவர்கள் தங்களுடைய உள்நோக்கத்திற்காக பொதுவுடைமையின் வளர்ச்சியை எதிர்ப்பவர்கள் என்று எழுதி, ரஷ்ய மொழியின் மீது அளவு கடந்த ஆர்வத்தை ஏற்படுத்தினர்.

அன்றைய நாட்களில் வேட்டையாடுபவர்கள் மற்றும் சேகரிப்பவர்களின் தொன்றுதொட்டு வரும் பாரம்பரியத்தைப் பொதுவுடைமைக்கொள்கையானது எந்தவிதத்திலும் எண்ணியதாகத் தெரியவில்லை. தொழில் மயமாக்கமானது புதிய பண்பாட்டின் பொருளாதார அடிப்படையில் உருவாகியது என்று எண்ணினர். தொன்றுதொட்டு பயன்படுத்திய நிலமும், சமூக நிறுவனங்களும் பொதுவானதென்று அறிவிக்கப்பட்டது. வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பகுதிகளான நிலங்களும், ஆறுகளும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டன.

## மக்களின் எதிரி

தொன்றுதொட்டு வந்த பண்பாடானது சிறிது சிறிதாக மறையத் தொடங்கும் இந்த நேரத்தில், பள்ளிகளில் மட்டும் அம்மக்களின் தாய்மொழிகளில் சில பாடங்கள் இருந்தன. இருந்த போதிலும் 1938 ஆம் ஆண்டு ''உடிஹெற'' மொழியில் முதல்முதலில் நூல்களை எழுதியவரும் மொழிபெயர்ப்பாளருமான யூஜென் ஷெனய்டர் 'மக்களின் எதிரி' என்று குறிப்பிட்டார். இதனால் அவரைக்கைது செய்து உடனடியாக சுட்டனர். அவ்வூரைச் சார்ந்த ஒருவர், எவ்விதம் கே. ஜி. பி. யின் பிரதிநிதிகள், அவருடைய கிராமத்திற்கு வந்து பள்ளி நூலகத்திலிருக்கும் நூல்களை ஒரு முற்றத்தினில் வைத்து எரித்தனர் என்பதை வேதனையுடன் உரைத்தார். அவ்வாறு எரிக்கும் பொழுது அதிலிருந்து அரைகுறையாக எரிந்த ஒரு புத்தகத்தை திருடிவந்து சிறுவயதில் எவ்வாறு பாதுகாத்தார் என்பதையும் குறிப்பிட்டார். உடிஹெறயின் எழுத்து வடிவமானது தடைசெய்யப்பட்டது.

விடுதிகளில்தான் மாணவர்கள் தங்கிப் படிக்கவேண்டும் என்ற கட்டாயத் திட்டத்தைக் கொண்டுவந்ததினால், நிறைய மொழிகள் அழிய ஆரம்பித்தன. முதலில் ஆர்க்டிக் பகுதியில் கலைமான்களை மேய்ப்பவர்களும், கொடிய விலங்கை வேட்டையாடுபவர்களும் தங்களுடைய குழந்தைகளை இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் படிக்க வைத்தனர். பெரியகிராமங்களில் நிறுவப்பட்ட இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தங்கள் உறவினர்களோடு நேரத்தைக் கழிக்க அனுமதி தரப்பட்டது.

3273CC

சிறிது சிறிதாக ரஷ்ய மொழி மட்டும் தான் பயிற்று மொழியாக்கப்பட்டது. சில சமயங்களில் குழந்தைகள் தங்கள் தாய் மொழியில் பேசுவதைத் தவிர்க்கவேண்டுமென எச்சரிக்கப்பட்டனர். ஆனால் பெற்றோர்கள் எவரும் இதை எதிர்க்கவில்லை. அப்படியே எதிர்த்திருந்தாலும் அவ் எதிர்ப்பானது குழந்தைகளை எவ்விதத்திலும் பாதிக்காது. ஏனெனில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையேயுள்ள பிணைப்பானது முற்றிலும் முறிந்திருந்தது. பழங்கால பண்பாட்டின் முதுகெலும்பான நாட்டுபுறக்கதைகள் முற்றிலும் மறைந்துவிட்டன.

இதற்கிடையில் சைபீரியாவின் தொலைத் தூரப் பகுதிகளில் வாழும் ரஷ்யர்களின் எண்ணிக்கையானது. அதிகரிக்கத் தொடங்கியதால் உள்ளூர் நிர்வாகம் அனைத்தும் அவர்களுடைய கைகளுக்கு வந்தன. அவர்களோ அல்லது ரஷ்யாவின் பொதுவுடைமைவாதிகளோ, பழங்கால பண்பாட்டிற்கும் மக்களின் தேவைகளுக்கும் எவ்விதத்திலும் மதிப்புத்தரவில்லை. 1957 ஆம் ஆண்டு பொதுவுடைமைக் கட்சி கொண்டுவந்த தீர்மானமானது சைபீரிய மொழிகளுக்குச் சாவுமணியடித்தது. வடக்கில் வாழும் மக்களின் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு வளர்ச்சியைக்குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மாற்ற இயலாத வழிமுறை

இத்தீர்மானத்தின் மூலம் சைபீரியாவில் சிறுபான்மையினர் வாழும் பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்கள், கடைகள், மருந்தகங்கள் ஆகிய அனைத்தும் மூடப்பட்டு, வேண்டுமென்றே சைபீரியாவின் சில பகுதிகளில் புதிய குடியிருப்புக்கள் நிறுவப்பட்டன. நிறைய அளவில் புதியவர்கள் வருகையால் அங்கேயே வாழ்ந்து வந்த மக்களால் வேட்டையாட முடியவில்லை. மீன்பிடிக்கவும் இயலவில்லை. இத்தகைய புதிய குடியிருப்புக்களினால் புதிய புதிய இடங்கள் உருவாகின. இதற்குச் சான்றாக சுக்சி சுதந்திரப் பகுதியின் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். 1926 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டுவரை அப்பகுதியின் மக்கள் தொகையானது பதினொரு மடங்காக அதிகரித்தது. எண்ணிக்கையில் பதினைந்தாயிரத்திலிருந்து நூற்றி அறுபத்தி நான்கு ஆயிரமாக மக்கள் தொகையானது உயர்ந்தது. சுக்சியின் அங்கமானது 79 சதவிகிதத்திலிருந்து 24 சதவிகிதமாகக் குறைந்தது. அதே சமயத்தில் ரஷ்யர்கள் மற்றும் புதியவர்களின் எண்ணிகையானது 2 சதவிகிதத்திலிருந்து 95.3 சதவிகிதமாக உயர்ந்தது.

தேசிய நூலகப் மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

இனப்பாங்கின் விளக்கவியலை அடிப்படையாகக் கொண்டு தான் மொழியும், அதன் அறிவின் தன்மையும் இவ்வறைய நாட்களில் விளங்குகின்றன. ஆதலால், இத்தகைய மனித இனப் பிரிவுகளின் மொழிகளில் எழுத்துவடிவத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தவில்லை. சைபீரியாவின் இரண்டு முக்கிய மொழிகளான ஒரொக்ஸ் மற்றும் நஹானஸன் பள்ளிகளிலோ அல்லது அச்சிலோ பயன்படுத்தாமல் இருந்து வந்தன.

ஸாக்கலின் தீவுகளுக்கு எதிர்புறத்தில் "ஒரோக்ஸ்" மொழி பேசும் மக்களின் சொந்த நிலமானது இருந்தது. 1930ஆம் ஆண்டுகளில் இவ்விடத்தை ரஷ்யர்கள் கைப்பற்றி புதிய ரயில் பாதைகள், புதிய நகரங்கள், புதிய துறைமுகங்களைத் தோற்று வித்தனர். இப்புதிய சூழலில், தொன்றுதொட்டு வரும் பண் பாட்டுக்கு எவ்வித இடமும் இல்லை. ரஷ்ய மொழியைத் தவிர மற்ற மொழிகளைப் பேச எந்தவொரு தேவையும் இல்லாமல் இருந்தது இதன் விளைவாக, 1989 ஆம் ஆண்டில் சுமார் பதி னைந்து சதவிகித "ஒரோக்ஸ்" மக்கள் மட்டும்தான் "ஒரோக்ஸ்" மொழியைப் பேசினர்,

ஆனால் நஹானஸன் மொழி பேசுபவர்களின் நிலை இதற்கு மாறாகத் திகழ்ந்தது, தைமீர் தீபகற்பங்களில் கலைமான்களை மேய்க்கும் இம்மக்கள், தங்களுடைய பண்பாட்டையும் பழைய பழக்கவழக்கங்களையும் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். இதன் காரணம் யாதெனில், ஆர்க்டிக் காலநிலையானது முற்றி லும் குளிர்நிலையையுடைய பகுதியாகும், ஆதலால் இங்கு குடி யேற வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் ஏற்படுவதில்லை. 1960 ஆம் ஆண்டுகள் வரை இங்கு படிக்கும் மாணவர்களுக்கு விடுதிகள் கட்டவேண்டும் என்ற திட்டமும் செயல்படாமல் போயிற்று. 1989ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இப்பகுதியில் வாழும் மக்களில் 90 சதவிகிதத்தினர் ஏதேனும் ஒரு சிறிதா வது அவர்களுடைய மொழியைக் குறித்து அறிந்திருந்தனர்.

அண்மைக் காலங்களில் எங்கும் திறந்த நிலை என்ற மனப் பாங்கானது முந்தைய சோவியத் குடியரசின் ஐக்கிய நாடுகளின் சில பகுதிகளில் மண்ணின் தேசிய நீரோட்டமானது புதுப்பிக்க உதவியது ஆனால், சைபீரிய சிறுபான்மையினரிடம் எந்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை கடந்த சில பத்தாண்டு காலங் களாக சைபீரிய இளைஞர்கள், ரஷ்ய பண்பாட்டினால் கவரப் பட்டு தங்களுடைய கிராமங்களை விட்டுச் சென்றனர் நகரங் களில் சிலருக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைத்தன. சிலரோ தொலைத்தூர வடக்குப்பகுதியில் ஆசிரியர்களாகவும் மருத்து

வர்களாகவும் பணிபுரிய ஆரம்பித்தனர். ஆனால், இவர்கள் அனைவரும் தங்களுடைய பண்பாட்டை முற்றிலும் மறந்து விட்டனர்.

உள்ளூர் மொழிகளை மற்றும் பண்பாட்டைப் புதுப்பிக்கும் முயற்சியானது சைபீரியாவில் மட்டும் சிறிதும் எடுபடாமல் போயிற்று. ஏனெனில் சைபீரிய மக்கள் தங்களுடைய மொழியைப் பேசுவதற்கு வெட்கப்பட்டனர். ரஷ்யர்களோடு தாங்கள் பிரிக்கப்படுவதை முற்றிலும் வெறுத்தனர். திருமணம் செய்து கொள்வதற்கு ரஷ்யர்கள்தான் ஏற்றவர்கள் என்று கருதினர். ஏனென்றால் ரஷ்யர்களைத் திருமணம் செய்து கொண்டால் தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதுடன், தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வெகு அழகாகப் பிறக்கும் என்றும் கருதினார்கள்.

# தண்ணீர்

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த நீரியல் நிபுணர் (Hydrologist) இகார் ஸெக்ட்டர் (Igor Zektser) எதிர்காலத்தில் கடலடித் தரையின் கீழேயிருந்து தூய குடிநீரைப் பெற முடியும் என்று கூறுகின்றார். கடலடித் தரையிற் கீழேயிருந்து இப்போது பெற்றோலியத்தை எடுப்பதுபோல தூய நீரையெடுப்பதும் கூடிய விரைவில் சகஜமாகிவிடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். கடலடித் தரையில் பல இடங்களிலிருந்து தூயநீர் ஊற்றாகப் பீறிட்டு எழுந்து கொண்டிருக்கிறது. அவற்றிலிருந்து வெளிப்படும் நீர் பல மீட்டர் ஆழத்திலிருந்து கடலின் மேல் மட்டத்திற்கு வருகிற அளவுக்கு இந்த ஊற்றுக்களில் அழுத்தமும் விசையுமுள்ளன. இத்தகைய ஊற்றுக்களைப் பற்றி விஞ்ஞானிகளுக்குப் பல ஆண்டுகளாகவே தெரியும். எனினும் இந்த மாதிரி கடலடியிலிருந்து வருகிற தூய நீரை நகரங்களில் குடிநீராக விநியோகிக்கலாம் என்ற கருத்து யாருக்கும் தோன்றவேயில்லை. சமீபத்தில்தான் இந்த ஊற்றுக்களைப் பற்றி ஒரு புதிய அக்கறை தோன்றியிருக்கிறது. இதன் காரணமாகப் பல புதிய, எதிர்பாராத உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

# வடக்கில் பல தாக்குதல்கள்

— சமின்திரா பேர்டினன்டோ

(ஐலண்ட் - 13 03. 1994)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தன்று விடுத்த செய்தியில் தமிழ் இனத்தைப் பகுத்தறிவில்லாத இனவாதிகள் எனக்கூறும இலங்கை அரசின் கடும் போக்கைப் பகிரங்கமாகக் கண்டித்தார்.

இந்த அரசாங்கம் படையைக் கொண்டும் பயங்கரவாதத் தன்மையாலும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்படத் தொடங் குமானால் சமாதானக் கதவுகளைமூடி சுதந்திரமான அரசை நிலைநாட்ட போராட்டத்தைத் தொடர்வதைத்தவிர நாம் செய்வதற்கு வேறொன்றுமில்லை எனக் கூறினார்.

தொடர்ந்து வந்துள்ள இலங்கை அரசாங்கங்கள் விருப்ப மில்லாத கொள்கையைத் தமிழ் மக்களுக்கு எதிராகக் கடைப் பிடித்து வந்தனவேயன்றி, அவர்களின் நன்மை கருதி அவர் களைத் திருப்திப்படுத்தும்வகையில் கணிசமான கருத்துக்களை முன்வைக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தமிழ் இனத்தைப் படை மூலம் அடக்கியொடுக்கி தோல்வியுறச்செய்யவே ஆட்சி பீடத்திலிருக்கும் சிங்கள உயர் குழாம் தனது கொள்கையைச் செயல்படுத்தியது. தற்போதைய அரசு தன்னுரிமைக்காகப் போர் செய்யும் தமிழ் மக்களைப் பயங்கரவாதிகளென உணரவைப் பதற்காக மிகக் கடும்போக்கைக் கொண்டுள்ளதுடன் உறுதி யாக சாமாதானத்திற்கான கதவை மூடிவிட்டதாகவும் திரு. பிரபாகரன் கூறினார்.

மண்கிண்டிமலை, புலோப்பளை மற்றும் அண்மையில் பூநகரியில் நடாத்தப்பட்ட எமது படை நடவடிக்கையின் போது ஆயிரத் துக்கும் மேலான இலங்கைப் படையினர் கொல்லப்பட்டார்கள். படை நடவடிக்கைகள் அழிவையே ஏற்படுத்தும். தமிழீழ விடு தலை புலிகள் படைரீதியில் பலம் வாய்ந்தவர்கள். அனறியும்

தற்போதைய போர் நடவடிக்கைகளில் திறமையும், பலமாக அமைக்கப்பட்ட காவல் அரண்களை அழிப்பதில் வல்லமையும் உள்ளவர்கள். கொழும்பிலிருந்து போரை நடத்துபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து போரில் வெற்றியடையலாமென எண்ணுவது எவ்வளவு மடமையானதென திரு. பிரபாகரன் கூறினார்.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பகை மூண்டகாலமான 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் பேச்சுவார்த்தையின் பின் போர் நிறுத்தத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசு விடுதலைப் புலிகளின் இணக்கத்துக்கான பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்விற்கான சமிக்கையைத் திட்டமிட்டு நிராகரித்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் எப்பொழுது சமாதானத்திற்கு அழைக்கின்றதோ அப்பொழுது இலங்கை அரசு கோபமூட்டக் கூடியவகையில் படை நடவடிக்கையின் மூலம் போரில் ஈடுபடமுனைந்தது. அரசு தொடர்ந்து படைப் போக்கைக் கடைப்பிடித்து, எமது மக்களுக்கெதிராக நடத்துமேயானால் இணக்கக் கதவை மூடி தனியாட்சிப்பண்புரிமைக்கும் தனி நாட்டுக்கும் தொடர்ந்து போர் புரிவோம் என திரு. பிரபாகரன் கூறினார்.

பாதுகாப்புப் படையினருக்கு எதிராக மிகத் தீவிரமான நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் கடந்த கிழமை வடக்குப் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ளனர். இந் நடவடிக்கையின் போது ஆகக் குறைந்தது பத்துப் படையினரும் காவற்துறையினரும் கொல்லப்பட்டார்கள். கடந்த கிழமை நடைபெற்ற வேறொரு சமரில் இருபத்து நான்கு பேருக்குமதிகமானோர் காயப்பட்டனர். இத்திடீர்த்தாக்குதல் கடற்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென பாதுகாப்பு மேலாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

மன்னார்த் தீவிலுள்ள தாராபுரத்தில் அமைந்துள்ள தனிமையான காவல்துறையினமீது புதன்கிழமை விடுதலைப் புலிகள் திடீர்த்தாக்குதல் நடாத்தியதின் விளைவாக நான்கு பேர் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்தும் பன்னிரண்டு பேர் காயப்பட்டுமுள்ளார்கள். அங்குள்ள ஆயுதங்களும் வெடிமருந்துகளும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

எப்படியிருந்தபோதிலும் காவல்துறையினர் மூன்று புலிகளைக் கொன்றதுடன், அவர்களால் பாவிக்கப்பட்ட சீனத் தயாரிப்பான ரி-56 வகைத் துப்பாக்கியையும் வெடிமருந்துவகை

களையும் கைப்பற்றினார்கள். அடுத்த நாள் விடுதலைப் புலிகள் ஊர்காவற்றுறைக்கு அண்மையில் படைவாகனத்தைத் தகர்த்ததன் விளைவாக நான்கு படையினர் கொல்லப்பட்டும், நான்கு இடைநிலை மேலாளர்கள் உட்பட பதின்மூன்று பேர் காயப்பட்டும் உள்ளார்கள். விடுதலைப் புலிகளின் ஒரு சிறிய பிரிவு வியாழக்கிழமை காலை ஊர்காவற்றுறைக்குள் ஊடுருவி படைவாகனத்தைத் தகர்க்கக் கண்ணிவெடிகளை அங்கு புதைத்து வைத்திருக்கலாமென, பாதுகாப்பு மேலாளர்கள் உய்த்துணர்ந்துள்ளார்கள்.

மண்டைதீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை அணியில் கடமையில் ஈடுபட்டிருந்து ஓய்வெடுத்துக்கொண்ட படையினரை வேலணையிலிருந்து ஊர்காவற்றுறைக்குக் கொண்டு சென்ற வாகனமே கண்ணிவெடியில் சிக்கி விபத்துக்குள்ளானது.

ஊர்காவற்றுறையில் கடைசியாக விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் வடபகுதித் தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவும், யாழ்ப்பாண பாதுகாப்புப்படைத் தளபதி பிரிகேடியர் விமலரத்னாவும், வட பகுதி கடற்பிராந்திய தளபதி கொமடோர் மோகன ஜெயமகாவும் மற்றும் ஏழு பேரும் 8 . 8 .92 அன்று கண்ணிவெடியில் சிக்கிக் கொல்லப்பட்டனர்.

காரைநகர், எழுவைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை மற்றும் மன்னார்த் தீவிலுள்ள பாதுகாப்புப் படையினருக்குத் தொல்லை கொடுப்பதற்காகத் தொடர்ச்சியான திடீர்க்கடல் தாக்குதல்களை நடாத்த விடுதலைப் புலிகளின் உயர்மட்டம் உத்தரவிட்டிருக்கலாமென பாதுகாப்பு உயர் மேலாளர்கள் கருதுகின்றார்கள். மன்னார்த் தீவில் விடுதலைப் புலிகள் காவற்துறையினரோடு மோதியவேளை, இன்னொரு பிரிவினர் பலாலியையும், கெமுனுபுரவையும் தாக்கி மேலும் இரண்டு படை வீரர்களைக் கொன்றனர். வேறும் சிலர் காயப்பட்டனர்.

கடந்த மாத பிற்பகுதியில், விடுதலைப் புலிகள் முக்கியமான தாக்குதல்களை படைக்கெதிராக நடாத்தியதாக படை மேலாளர்கள் கூறுகின்றார்கள்.

ஆறு படையினர் கொல்லப்பட்டதும், முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றுப் பகுதியில் மாசி மாத பிற்பகுதியில இன்னொரு தாக்குதலில் தென் ஆபிரிக்கத் தயாரிப்பான காப்பூர்த்தி வீசியெறியப்பட்டதும் இவற்றின் தொடக்கமாகும் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். பூநகரிப் பகுதியில் மேலும் மூன்று படையினர் சென்ற கிழமை மோதலில் கொலலப்பட்டார்கள்.

படையினர் கூட விடுதலைப் புலிகளுக்கெதிரான சில மோதல்களில் வெற்றிகண்டுள்ளனர்.

படை நடவடிக்கையின்போது ஆகக்குறைந்தது இருபத்தைந்து விடுதலைப் புலிகள் இம்மாதம் கொலலபபட்டார்கள். வவுனியாவிற்கு வடக்கே, சென்ற ஞாயிற்றுக்கிழமை படையினர் ஆறு விடுதலைப் புலிகளைக் கொன்றதுடன் சில தங்ககங்களையும் அழித்து அங்குள்ள ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றியுள்ளனர். அதிரடிப்படையினரின் உதவியோடு, நிரந்தர படையினர் நடாத்திய நடவடிக்கை வெற்றியளித்துள்ளதென படை மேலாளர்கள் கூறிகின்றார்கள்.

ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தெற்கு மாகாண சபைத் தேர்தலுக்குமுன் விடுதலைப் புலிகள் துணிவானதும் பிரமிக்கத்தக்கதுமான தாக்குதல்களை நடாத்தக் கூடுமென பாதுகாப்பு மேலாளர்கள் கூறுகின்றார்கள்.

கடுமையானதும் புலிகளுக்கெதிரானதுமான தங்கள் கொள்கை தெற்கில் நடத்தவிருக்கும் தேர்தலில், தங்களுக்குப் பெரும் வெற்றியை அளிக்குமென தாம் உறுதியாக நம்புவதாக அரசியல் தலைவர்கள் கூறுகின்றார்கள்.

படைய ரீதியாகத் தாங்கள் தோல்வியடையமாட்டோம் என்பதற்கு அடையாளமாக விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்வார்களென தாம் நம்புவதாக அம் மேலாளர்கள் கூறுகின்றார்கள். விடுதலைப் புலிகளை வடக்கு கிழக்குப் பிரதேசத்திலிருந்து துரத்தியடிக்கவும் அதை முந்திய அரசியல் நிலைக்குக் கொண்டுவரப் போவதாகவும் அரசியல் தலைவர்கள் திருப்பவும் சூளுரை எடுத்துள்ளார்கள்.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை, கிழக்கில் விரைவில் நடாத்த தீர்மானித்து, மேலும் விடுதலைப் புலிகளின் மீதான தாக்குதல்களைத் தீவிரபபடுத்துமெனவும் அவர்கள் கூறினார்கள்.

இந்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பாதுகாப்பு, அரசியல் வளர்ச்சி பற்றித் தாம் அறிந்துள்ளதாகப் படைய மேலாளர்கள் கூறுகிறார்கள் விடுதலைப் புலிகளுடைய ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதலுக்குள்ளாகாமல் இருப்பதற்கேற்ற முன் நடவடிக்கைகளை எடுக்க முனைகின்றோமெனப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மேலாளர் ஒருவர் கூறினார்.

பூநகரி - நாகதேவன் துறைப் பகுதியில் கடந்த நவம்பர் மாதத்தில் தமிழர்த் தாக்குதலின் பின் அங்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை. விடுத்லைப் புலிகள்

ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்ளவிருக்கிறார்கள் எனச் சிலர் நம்புகிறார்கள். மன்னார்த் தீவிலும் ஊர்காவற்றுறையிலும் நடைபெற்ற திடீர்த்தாக்குதல்கள் வடக்குப் போர் முனையிலும் தாக்குதல்களை ஏற்படுத்தக்கூடும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

பிரச்சனைக்குள்ளான யாழ்ப்பாணக் கடனீரேரியில் காவலுலா செல்வது குறைக்கப்பட்டமையால் யாழ்குடா நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் போராளிகளையும் ஆயுதங்களையும் கொண்டு செல்லும் வாய்ப்பு விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்திற்குக் கிடைத்துள்ளது. நாகதேவன் துறைக் கடற்படைத் தளத்தின் தகர்ப்பு கடலில் காவலுலா செய்வதற்கு முடிவு கட்டிவிட்டது.

## வெய்யிலிலிருந்து மின்சாரம்

பெட்ரோலியத்தின் விலை ஏகத்தாறாக ஏறியபோது எல்லா நாடுகளிலுமே சூரிய ஒளி ஆற்றலைப் பயன்படுத்தக் கூடிய வழிவகைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டன. சூரிய ஒளியை நேரடியாக மின்னாற்றலாக மாற்றக் கூடியசூரிய மின்கலங்களின் திறமையை அதிகரிக்க மிகுந்த பொருட் செலவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுப் பல சிறப்பான சூரிய மின் கலங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது பெட்ரோலிய விலை வீழ்ச்சியடைந்தாலும் சூரியமின்கலங்களைப் பற்றிய ஆராய்ச்சியும், உற்பத்தியும், விற்பனையும் குறைவடைவதில்லை, 1982ஆம் ஆண்டின் உலகம் முழுவதிலும் நூறு மில்லியன் டாலர் மதிப்புள்ள ஒளி மின்கலங்கள் விற்பனையாயின. இவையெல்லாமாகச் சேர்த்து எட்டு மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியவை. இது மிகக்குறைவான அளவாகத் தோன்றலாம். ஆனால் அணுமின் நிலையங்களுடன் ஒப்பிடுகையில் இது அதிகம்தான். இரண்டாயிரம் மில்லியன் டாலர் செலவில் கட்டி முடிக்கக் கூடிய ஒரு சாதாரணமான அணுமின் நிலையம் சுமார் 1,000 மெகாவாட் மின் சக்தியைத்தான் உற்பத்தி செய்யமுடியும். மேலும் உலகில் அணுமின் நிலையங்களை அமைப்பதில் அக்கறை குறைந்துவருகிறது. ஒளி மின்கலங்களின் விற்பனை பெருகிக் கொண்டிருக்கிறது. உற்பத்தி அதிகரிக்கும்போது அவற்றின் விலையும், குறையக்கூடும். அவற்றின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் முகமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

# யாழ்குடா நாட்டில் அமைதி வேண்டும்

—கோமல் சுவாமிநாதன்
(சுபமங்களா - மே 1994)

"நடந்து போனவைகள் கசப்பான அனுபவங்களாக எங்கள் நினைவுத் திரையிலிருந்து அழிந்து போகட்டும். இனி நடப்பவைகள் இங்கே அமைதியாக இருக்கட்டும்.

எங்கள் அன்றாட வாழ்வு தினம் நரகமாகிக் கொண்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டிலிருந்து நாங்கள் பழைய கற்காலத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறோம். எங்கள் துன்பங்களை இந்திய மக்களுக்கு, குறிப்பாக தமிழ்மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் அரசியலுக்கு எங்களை காய்களாகப் பயன்படுத்துவதைவிட கருணை உள்ளத்தோடு எங்களைப் பார்க்கச் சொல்லுங்கள்" இது யாழ்ப்பாண மக்களின் ஒருமித்த குரல்.

"நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக்கிறோம். எங்களுக்குச் சரியான தீர்வு கிடைக்குமானால்" என்கிறார் புலிகளின் சார்பாகக் குரல் கொடுக்க வல்லார் ஒருவர்.

"தமிழீழம் தனியாகப் பிரிய வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?"

"மக்கள் படும் துயரங்களிலிருந்து அவர்களை மீட்டெடுக்க அதை நிபந்தனையாக நாங்கள் தற்காலிகமாக வைக்கவில்லை. கனடாவில் உள்ளது போன்ற முற்றும் சுதந்திரமுள்ள கூட்டாட்சி முறைக்கு அவர்கள் இணங்குவதானால்..."

"உங்கள் படையணிகளை என்ன செய்வீர்கள்? கலைத்து விடுவீர்களா..."

"இல்லை அவர்கள் மீதும், அவர்கள் செயற்பாட்டின் மீதும் எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கை ஏற்படும் காலம் வரை அது இருக்கும்."

ஆனால் ஆயுதத்தைக் கீழே வைப்பதே பேச்சு வார்த்தைகளுக்கு முன் நிபந்தனையாக இலங்கை அரசு கேட்பதாகத் தெரிகிறது.

"பேச்சுவார்த்தை ஒன்றிற்கு முன்னர் ஆயுதங்களைக் கீழே போடுமாறு எந்தவொரு கொரில்லா அமைப்பையும் வலியுறுத்திய வரலாறு எங்கும் நடந்ததில்லை. அத்துடன் ஆயுதங்கள் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவை. அரசாங்கம் வாக்குறுதியை மீறாது என்ற நம்பிக்கை தரக்கூடியதாக கடந்தகாலசரித்திரங்கள் எதுவுமில்லை" என்று கூறுகிறது வீரகேசரி நாளிதழ்.

'பயத்தின் அடிப்படையில் புலிகளின் கீழ் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா..?' என்ற கேள்விக்கு பேராசிரியர்களும், எழுத்தாளர்களும் அளித்த பதில்: "இல்லை. இவர்கள்தான் இப்போதைக்கு எங்களையும், எங்கள் மண்ணையும் காக்கிறார்கள். இவர்களும் இல்லை என்றால் எங்கள் இனம் பூண்டற்றுப் போயிருக்கும்.

"பிற குழுக்களோடு ஏற்பட்ட சண்டையில் மாண்டு போனவர்கள், தொலைந்து போனவர்கள், பிடித்து வைக்கப்பட்டவர்கள் இவர்களைப் பற்றி..."

"இங்கே நடந்துகொண்டிருப்பது யுத்தம். தினம், தினம் எங்கள் இளைஞர்கள் இந்த மண்ணில் தங்கள் உயிரை விதைக்கிறார்கள். யுத்தத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று கருதப்படுவர்களைத் தண்டிக்க வேண்டுந்தானே."

"உங்கள் நிலைப்பாடு என்ன? என்று இடதுசாரித் தோழர்களைக் கேட்கிறேன்.

"கொள்கையளவில் ஈழம் தனியாகப் பிரிவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், அதை முக்கியமாக வைத்து இங்கு நடக்கும் போராட்டத்தைச் சோர்வடையச் செய்ய நாங்கள் விரும்பவில்லை. பேரினவாதத்தின் பெயரால் இங்கு நடக்கும் அநீதிகள், ஆக்கிரமிப்புக்கள், கலாச்சார ஒடுக்குமுறைகள், கல்விச் சீரழிவு எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும். தீர்வு பின் தள்ளப் படுவதற்கு, அரசின் வர்க்க நலன் பேணும் பேரினவாத அடித்தளமே காரணமாகும்" என்கின்றனர்.

தென் மாகாண சபைத் தேர்தலின்போது, இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவியான சிரிமாவோவின் மகள் சந்திரிகா குமாரணதுங்கா கூறினார். வடகிழக்குப்பகுதியில் நடாத்தப்படும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும். ஜனாதிபதி கூறுவதுபோல் அங்கே நடப்பது பயங்கரவாதம் இல்லை. இனப்போராட்டம்தான்' இது அரசியல்

நீதியாகவே தீர்க்கப்பட வேண்டும்.'' அவர் கொடுத்த குரலை சிங்கள மக்கள் ஏற்று, ஆளும் ஐ. தே. கட்சியைத் தோற்கடித்து, அவர் கட்சியையும் கூட்டணியையும் வெற்றி பெறச் செய்தனர்.

கொடூரமான முறையில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நடாத்தப்படும் எறிகணை குண்டுவீச்சுகளால் மக்கள் மாய்வதும், பாதுகாப்புக்காக பதுங்கும் குழிகளுக்குள் சென்றவர்கள் குடும்பம், குடும்பமாக மண்ணுக்குள் புதைவதும், பள்ளி மாணவர், வயோதிபர், பச்சிளம் குழந்தைகள் என்ற பேதமில்லாமல் பள்ளிக்கூடங்களிலும், வழிபாட்டு இடங்களிலும் மக்கள் வதைபட்டு மாயும் தொடர்கதையையும் நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர்களுக்கான நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் பேச்சுவார்த்தை நடைபெறத் தடையாக உள்ளவற்றையெல்லாம் நீக்கி அமைதியை முன்னெடுத்துச் செல்ல இலங்கை அரசியல் கட்சிகள் மனப்பூர்வமாக முன்வர வேண்டும். இதை சாத்தியமாக்க இந்தியாவும் தன் வெளிநாட்டுக் கொள்கையில் புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

## பனியுகம்

சென்ற பல ஆண்டுகளாக உலகின் பல பகுதிகளில் காணப்படும் நிகழ்ச்சிகள் வானிலை நிபுணர்களின் மனதில் ஒருவித ஜயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. உலகம் மீண்டும் பனியுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று நம்ப இடமளிக்கும் வகையில் சென்ற சில ஆண்டுகளாகவே குளிர் காலங்கள் மிகவும் குளிர்ச்சியாக உள்ளன. ஐஸ்லாந்து பகுதியில் பனிக்கட்டிகளின் அளவு அதிகரித்துக் கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு செய்கிறது. வெப்ப நிலையை விரும்பும் பிராணிகள் கொஞ்சம், கொஞ்சமாகத் தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதிலும் உள்ள வானிலை நிலையங்கள் காற்று மண்டலத்தின் வெப்ப நிலை படிப்படியாகக் குறைந்து வருவதை உறுதிப்படுத்துகின்றன. இன்னும் சில காலத்திற்குள் கனடா, வட அமெரிக்கா, வட ஐரோப்பா பகுதிகள் பனி மண்டலத்தில் அமிழ்ந்துவிடக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் மேலுள்ள தடையை நீடிக்குமாறு தமிழ்நாடு கேட்கின்றது

(டெய்லி நியூஸ் - 22. 04. 1994)

விடுதலைப்புலிகளின் மீதான தடையை இரண்டு ஆண்டுகளால் நீடிக்குமாறு புதுடில்லியிலுள்ள மத்திய அரசைக்கேட்கும் ஒரு அரச திர்மானம் தமிழ்நாடு சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது.

1992 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள்மீது விதிக்கப்பட்ட தடை, இந்த ஆண்டு மே மாத நடுப்பகுதியில் முடிவடைகின்றது.

முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா திர்மானத்தைக் கொண்டு வந்த காரணத்தை விளக்குகையில் திரு. பி. வி. நரசிம்மராவின் தலைமையிலான மத்திய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் விவகாரத்தில் தயக்கம் காட்டுகின்றது எனக் கூறினார். முன்னைய பிரதம மந்திரி ராஜீவ்காந்தியின் தியாகத்தால் ஆட்சிக்கு வந்தவர்கள் ஏன் அமைதியாக இருக்கிறார்கள்? திரு. ராவ் ஏன் எதுவும் கூறுகின்றாரில்லை என அவர் அதிசயப்பட்டார்.

புலிகளின் மீதான தடையை நீடிப்பது பற்றி இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் தனது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி வந்ததையும், மத்திய அரசின் உள்துறை அமைச்சு அதிகாரிகளால் எழுப்பப்படும் கேள்விகளுக்கும் விசாரணைகளுக்கும் விளக்கம் கொடுத்ததையும், தமிழ்நாட்டுச் சிறப்புப் புலனாய்வுத்துறையின் தலைவர் புதுடில்லி சென்று உள்துறை அமைச்சு அதிகாரிகளின் கேள்விகளுக்குத் தாமாகவே பதிலளித்ததையும் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா சுட்டிக் காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீடிக்கும் அவசியத்தைப்பற்றி, தமிழநாடு அரசிடமிருந்து தமக்கு எந்த விதமான அறிக்கையும் கிடைக்கவில்லை என மத்திய உள்துறை

அமைச்சர் எஸ் பி. சவான் அவர்கள் கூறியிருப்பது தன்னைத் திகைப்படையச் செய்து விட்டது எனச் செல்வி. ஜெயலலிதா கூறினார். தமிழ்நாடு அரசு தனது சொந்தச் சட்டத்தால் விடு தலைப் புலிகளை தடைசெய்ய முடியுமெனவும், ஆனால் அப்படியான ஒரு சட்டம் இல்லையெனவும் முன்பிருந்த ஒரு சட்டம் நீதியன்றத்தால் நீக்கப்பட்டதென்றும் செல்வி. ஜெயலலிதா சட்ட சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இத்தடையை மத்திய அரசே கொண்டுரவேண்டும். ஏனெனில் அதற்கான பொருத்தமான சட்டம் அதற்குள்ளது. சட்டத்திற்கு மாறான செயல்களைத் தடைசெய்யும் சட்டம் (1987) அதுவாகும்.

மாநிலச் சட்டத்தின் கீழ் தடைவிதிப்பதானது, அது அந்த பயங்கரவாதக்குழுவை அந்த மாநிலத்தில் மாத்திரமே தடை செய்யும். ஆனால் இந்தியாவில் அநேக பகுதிகளிலுள்ள பயங்கரவாத இயக்கங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டுள்ளனர்.

இவர்கள் காஷ்மீர் தொடக்கம் ஆந்திரப் பிரதேசம்வரைக்கும். பஞ்சாப் தொடக்கம் அசாம் வரைக்கும் உள்ள பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சினை தேசியப் பிரச்சினையல்ல. லண்டன், பாரீஸ், பொன், ஜெனிவா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தலைவர்களை வைத்திருக்கும் அதன் பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாகும்.

மத்திய அரசு தனது சொந்த நன்மைகளுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமாளிக்கும் பொறுப்பை எடுக்காமல் தமிழ்நாடு அரசின் மேல் சுமத்துகின்றது. எனச் செல்வி. ஜெயலலிதா குற்றம்சாட்டினார்.

திரு. கோபாலசாமி தலைமையிலான திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரே அங்கத்தவர் எதிர்பார்க்கப்பட்டது போல இந்த விவகாரத்தில் பங்குகொள்ளவில்லை. இவருடைய தலைவர் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவுமில்லை, எதிர்கவும் இல்லை எனக்கூறினார். பொருந்தாத ஒன்றைத் தடைசெய்வதில் அர்த்தமில்லை என்றும், இந்தியாவில் அது இல்லை என்றும் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூறினார். விடுதலைப் புலிகளின் மேலுள்ள தடைக்கு ஆதரவா? அல்லது இல்லையா? என அவரை செல்வி. ஜெயலலிதா கேட்டபொழுது அவர் குழப்பமடைந்தார். இதனால் அவருடைய கட்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்க்கும் துணிவு இல்லை என செல்வி ஜெயலலிதா கூறினார்.

சட்ட சபையில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சபாநாயகரிடம் சட்டமுறைகளுக்கு எதிராகக் குற்றஞ்சுமத்தி வெளியேறியிருந்தனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்த விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதை நீடிக்கும், பொதுமக்களுக்கு மிக முக்கியமான விடயத்தையிட்டு கவலைப்படாது ஒரு உறுப்பினர் சம்பந்தப்பட்ட விடயத்தில் அவர்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளதாக காங்கிரஸ்காரர்கள் இல்லாதது பற்றிக் குறிப்பிடும்போது அவர் கூறினார்.

இரண்டு பொதுவுடமைக் கட்சிகள், குடியரசுக்கட்சி, ஐக்கிய பொதுவுடமைக் கட்சி என்பன அந்தத் தீர்மானத்தை ஆதரித்தது. ஒரு நாட்டுக்கு ஒவ்வாத தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற பயங்கரவாத இயக்கத்தினரை எதிர்த்துப் போராட வேண்டுமாயின் ஒருவர் இரண்டு குணங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சி அங்கத்தவர் திரு. எஸ். வி. சண்முகம் கூறியபோது இடிமுழக்கம் போன்ற ஆரவாரம் எழும்பியது. 'தேசபக்தி'' (அல்லது ''நாட்டுப்பற்று'') வீரம் என்பனவாகும், எங்களுடைய முதல் அமைச்சர் இவையிரண்டையும் அதிகளவில் கொண்டுள்ளார் என அவர் கூறியபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தவர்கள் தங்கள் மேசைகளைத் தட்டி ஆரவாரஞ்செய்தனர்.

## இயந்திர மனிதர்கள்

ருசியாவிலுள்ள ஒரு மின்தொழில் நுட்பச்சாலையில் காண்டா மிருகம் ஒன்று பணியிலமர்த்தப்பட்டது இது என்ன அபத்தமான விடயமாயிருக்கிறதே என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். காண்டா மிருகம் என்பது ஒரு இயந்திர மனிதனுக்கு இடப்பட்ட பெயர். காண்டா மிருகம் எதைப் பற்றியும் கவலைப்படாமல், எதைக் கண்டும் பயப்படாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று காட்டில் நடமாடிக் கொண்டிருப்பதைப் போல இந்த இயந்திர மனிதனும் சூடு, அழுக்கு என்று பார்த்து பயந்து கொண்டிராமல் தொழிற்சாலையில் எல்லா மூலை முடுக்குகளிலும் நுழைந்து உலோக உருக்காலைப் பகுதி முழுவதையும் செப்பனிட்டு பராமரிப்புப் பணியையும் செய்து முடித்தது. அது ஒழுங்காக வேலை செய்யுமா என்று முதலில் சந்தேகப்பட்டவர்களும் கேலிபேசினவர்களும் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டனர். ருசியாவின் எஸ்டோனியாப் பிரதேசத்திலுள்ள பல தொழிற்சாலைகளில் இயந்திர மனிதர்கள் பணியாற்றி வருகின்றன. மற்ற நாடுகளைவிட ஜப்பான் அதிகமான எண்ணிக்கையில் இயந்திர மனிதர்களைப் பயன்படுத்துகிறது. ருசியா அமெரிக்கா உட்பட பல நாடுகள் தாம் உற்பத்தி செய்யும் இயந்திர மனிதர்களுடன் ஜப்பானிலிருந்தும் இயந்திரமனிதர்களை இறக்குமதி செய்து பயன்படுத்துகின்றன.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ராவ் அவர்கள் பிரதமராக வந்த முதலிரு ஆண்டுகளிலும் இந்திய அமெரிக்க உறவில் நல்ல அறிகுறிகள் காணப்பட்டன. புஷ் அவர்களின் ஆற்றுகையின் கீழ் இத் தொடர்புகள் மேலும் முன்னேற்றம் அடைந்தன. இந்தியா முன்னர் முன்னுரிமை கொடுத்த வெளிநாட்டுக் கொள்கைகளான இந்துப் பெருங்கடல் இணக்கப் பிரதேசம் ஆகிய கொள்கைகளைக் கைவிட்டு இருநாட்டு படைக்கலப்படைகளுக்கும் இடையே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டது.

## கிளிங்டன் வரவு

பில் கிளிங்டன் சனாதிபதியாக வந்தது, ராவ் அவர்களுக்கு பெரிய ஏமாற்றத்தில் முடிந்தது. புஷ் ஆற்றுகையின் போது எதிர்ப்பில்லாமல் விட்டுக் கொடுத்து இணக்கம் காணப்பட்ட பல செய்திகளில், அவர் அரசியலுக்கு வந்த சிறிது காலத்திலேயே பின்நோக்கிச் செல்வதுபோல் காணப்பட்டது. கிளிங்டனின் திட்டங்களில் அணு படைக்கலத் தடைதான் முதலாவதாகக் காணப்பட்டது. அத்துடன் பல ஆண்டுகளாக இந்தியா வெறுத்தொதுக்கிய அணு படைக்கலத்தடை ஒப்பந்தத்தில் ஒப்பமிடுமாறு அவர் அழுத்தமும் கொடுத்தார். அத்துடன் இந்தியாவுக்கு உணர்ச்சி கொடுக்கக்கூடிய காஷ்மீர் சிக்கலிலும் வேறுபாடான போக்கை கிளிங்டன் ஆற்றுகை மேலாளர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள்

தெற்கு ஆசிய மாற்றுநிலைப் பதில் செயலர் றொபின் றாபீல் போன்ற கிளிங்டன் ஆற்றுகை உயர் மேலாளர்கள் காஷ்மீரை அமெரிக்கா "கருத்து முரணுக்குரிய பிரதேசம்" எனக் கருதுவதாகவும், இச் சிக்கலுக்கு அங்கு வாழும் மக்களின் விருப்பத்தை ஆய்தலுக்கு எடுத்துத் தீர்க்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாக கூறியிருக்கிறார்கள். அத்துடன் காஷ்மீரிலும் பஞ்சாப்பிலும் இந்தியப்படைகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் பற்றிக் கேள்வியும் எழுப்பியிருந்தனர். வளர்ந்துவரும் வர்த்தக முறைமையிலான ஒரே ஒரு பிணைப்புதான் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ள உறவை மீளக் கட்டியெழுப்பக்கூடிய மிகவும் முதன்மையான ஒரு ஏதுவாக இருக்கிறது.

## அமெரிக்கப் பயணம்

இப்படியான வர்த்தக முறைமையான முன்னேற்றங்கள் இருந்தாலும் அணு படைக்கல உற்பத்தித்தடையுடன் ஒத்து

ழைக்கும் படியும் காஷ்மீர் சிக்கலுடன் அணு படைக்கல உற்பத்தித்தடை ஒப்பந்தத்தை இணைத்து இந்தியாவை இணங்க வைக்க முயற்சிக்கிறார்கள் என்றும் இந்தியர்கள் சீற்றங்கொள்கிறார்கள். அத்துடன் அமெரிக்கா எவ் – 16 ரக போர் வானூர்திகளை பாகிஸ்தானுக்கு விற்க முன்வந்தது படைச் சமநிலையில் தளம்பலை ஏற்படுத்தும் என இந்தியா கருதுகின்றது.

பொருண்மியக் கொள்கையில் மேற்கு நாடுகளின் கோரிக்கைக்கு ராவ் இசைந்தாரானால் இந்தியா அணுபடைக்கலத் தடை ஒப்பந்தத்திலும் காஷ்மீர் சிக்கலிலும் அமெரிக்காவின் அழுக்கத்திற்கு எதிர்ப்பாற்றல் இல்லாமல் சரணாகதி அடைய நேரிடும் என்ற அச்சமும் உண்டு.

கடந்த கிழமை ராவ் அவர்கள் அமெரிக்காவிற்கு புறப்படுவதற்கு சிறிது காலத்திற்கு முன் அணுக்கொள்கை தொடர்பாக இந்திய உயர் மேலாளர்களுக்கிடையில் லண்டனில் நடைபெற்றதாகக் கூறும் மறைபொருள் பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் பெரும் அரசியல் புயலைக் கிளப்பியது என இந்திய செய்தித்தாள்கள் கூறின.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர

கடந்த கிழமை ராவின் அமெரிக்க வருகையின் போது இந்தியாவை விற்றுவிடப்போகிறார் என்னும் உய்த்துணர்தல்கள் இந்தியப் செய்தித்தாள்களிடையே இருந்தது அவரது வருகையின் போது குறைந்த தொலைவு ஏவுகணையான பிருதுவி சோதனையை நிறுத்தவேண்டும் என திடீரென தீர்மானம் எடுத்தபொழுது இச் செய்தி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல தூபமிடப்பட்டது. பிருதுவி சோதனையைத் தனது வாஷிங்டன் வருகைக்கு அறிமுகப்பத்திரமாக எவரும் கருதுவதை ராவ் விரும்பவில்லை என்பது தெளிவு. முதன்மையான செய்திகளில் விட்டுக் கொடுக்கப் போகிறார் என்ற உய்த்துணர்தல்களை முறியடிப்பதற்காக திருவாளர் ராவ் எதிர்க்கட்சித் தலைவர்களை ஒவ்வொருவராகக் கண்டார். அவர் அமெரிக்காவிற்குச் சென்றபொழுது எதிர்கட்சியுடன் மனஒற்றுமை காண்பதில் வெற்றி கண்டதாக தோற்றமளித்தமை திரு. ராவ் அமெரிக்கத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் அவருக்கு உதவியது எனலாம். அவரிடம் பெறப்படும் எந்தச்சலுகையும் அமெரிக்காவின் நன்மை கருதி இல்லாவிட்டாலும் பாரதீய ஜனதா கட்சிக்கு பரப்புரைப் பீரங்கிக்கு இரையாகலாம் எனத் தோன்றுகிறது.

(High Mountain Geophysical Institute)

PUBLIC LIBRARY
JAFFNA.

புதிய உலக ஒழுங்கு மட்டுப்படுத்தப்பட்ட இறைமையை ஏற்க வேண்டும் என்ற கருத்து இந்தியர்களுக்கு மன அரிப்பைக் கொடுத்த போதிலும் சிறிய நாடுகளுக்கு இக்கருத்தை பூகோள அரசியல் உண்மைநிலை என்னும் வடிவத்தில் சில ஆண்டுகளுக்கு முன் போதித்திருந்தார்கள். இரு முனைகளாக இயங்கிய உலகத்தில் ஒரு நாடு ஒரு வல்லரசை மற்றவல்லரசுக் கெதிராகப் பாவித்து இந்தியாவை விடச் சிறிய நாட்டினால் கூடத் தனது முழுமையான இறைமையைக் கொண்டிருக்க முடிந்தது ஆனால் தற்போதய போட்டியற்ற உலகில் இது முடியாத செயலாகும்.

இந்தியா முதலாவது அணு சோதனை நடத்திய 20 ஆண்டு நிறைவு பெற்ற தினத்தன்று இந்தியப் பிரதமர் அமெரிக்காவிலிருந்து அணுக் கொள்கையை ஆதரிக்க வேண்டியது ஓர் வசைப் புகழ்ச்சியாகும். அணு வல்லமை பாணி இந்தியாவிற்குப் பதிலாக இந்தியா ஒரு முன்னணி நாடாக எடுத்துச்செல்லப்பட வேண்டுமானால் இன்றைய சூழலில் குறிப்பாக எல்லாவித முக்கியமான தொடர்புகளையும் தனிவல்லரசான அமெரிக்காவுடன் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. எனவே தங்கள் நாடு ஒரு அணு ஆற்றல் மிக்கதாக விளங்க வேண்டும் என விரும்பும் ஒவ்வொரு இந்தியனும் சிந்திப்பதற்கு இது ஒரு நல்ல செய்தியாகும். ராவின் வாஷிங்டன் பயணத்திற்கு சிறிது நாட்களுக்கு முன் புதுடில்லியில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பில் 84% (நூற்றுக்கூறு) மான மக்கள் இந்தியா அணு ஆற்றல் மிக்க நாடாக இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள்

## ஆலங்கட்டியுடன் போர்

வானத்திலிருந்து கோழி முட்டை அளவுக்குப் பெரிய பனிக் கட்டிகள் தடதட வென்று கொட்டினால் எப்படியிருக்கும்? அதற்கு ஆலங்கட்டி மழை (Hailstorm) என்று பெயர். அது ஒரு ஐந்து நிமிடத்திற்குப் பெய்தால் கூடப் பயிர்களுக்கும் பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டுவிடும் ருசியாவிலும் மற்றைய குளிர்ப் பிரதேசங்களிலும் ஆலங்கட்டி மழை அடிக்கடி பெய்யும். ருசியாவின் தென் பகுதியில் கருங் கடலுக்கு அருகாமையிலுள்ள காகஸஸ்மலைத் தொடரில் எல்பிறஸ் (Elbrus) என்ற சிகரத்திற்கு உயர் மலைப் புவியியற்பியல் கழகம் (High Mountain Geophysical Institute) என்று ஒரு ஆய்வு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. அப் பகுதியில் இடி மேகங்களும், ஆலங்கட்டி மேகங்களும் ஏராளமாகத் தோன்றுகின்றன. அவற்றின் சீற்றத்தைத் தணிப்பதற்கான வழிமுறைகளை அந்த ஆய்வு நிலையம் கண்டுபிடிக்க முயன்று வருகின்றது.

104693



# சிறீலங்காவில் அரசியல் போட்டி

— யே. என். டிக்சிற்
(சண்டே ரைம்ஸ் - 13. 03. 1994)

சிறீலங்கா சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஆரியரத்தின ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கு இடைப் பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் சென்றார். அங்கிருந்து அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது அரசி யல் தலைவர் கரிகாலனிடமிருந்து ஒரு செய்தி பதிவு செய்யப்பட்ட நாடாவைக் கொண்டுவந்தாரா? அந்நாடா விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தையை நடாத்தவிரும்புகிறார்கள் என்ற செய்தியாகும்.

இதற்கிடையில் தரைநிலைக்கு ஏற்றவாறு வன்செயல்கள் கூடியும் குறைந்தும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. தமிழர் களின் அபிலாசையைக் கையாளுவதில் சிறீலங்கா அரசின் தெளி வற்ற மனப்பாங்கு ஒரு புறத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுடைய இலக்கை அடையும்வரை மனஉறுதியுடன் நிற்றல் மறுபுறத்திலுமாக இருதரப்பினரும் ஒருங்கிணைந்த முடிவுகளை எடுக்க முடியாது இருக்கின்றனர்.

இவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டுவரும் வேளையில் இந்தியா அவைகளை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது? அண் மையில் நடைபெற்ற நிகழ்வுகளை பகுப்பாய்தல் செய்யுமிடத்து இந்தியாவின் செயற்பாடுகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் 1983 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டு வரைக்கும் இந்தியா சுறுசுறுப்பாகவும் அழைக்கப்படாத நடுவராகவும் இருந்துவந்தது.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப் பட்டபோதும் முன்னாள் இலங்கை சனாதிபதி ஜெயவர்தனாவுக் கும் மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குமிடையில் பரி மாறப்பட்ட வெவ்வேறான ஆவணங்களின்கீழ் இந்திய அமைதி காக்கும்படை இலங்கைக்கு வந்தபோதும் அதன் முயற்சிகள் உயர்ச்சி நிலையிலிருந்தன.

1987 முதல் 1990 வரையான காலத்தில் நடைபெற்றுவந்த நிகழ்வுகளினாலும், அக்காலத்தில் பெரும்பகுதியில் இலங்கை அரசியலில் ஏற்றுக்கொள்ளமுடியாத செயற்பாட்டினாலும் இந்தியா இந்தநாட்டு விவகாரங்களில் தலையிடுவது இன்றியமையாததாயிருந்தது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். 1990 ஆம்ஆண்டில் வி. பி.சிங்கின் அரசு ஸ்ரீலங்காவின் அரசியலில் ஈடுபடாதிருக்க விரைவான நடவடிக்கைகளை எடுத்தது. மார்ச் 1990 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படை இலங்கையிலிருந்து விலகியதும், அன்றிலிருந்து இன்றுவரை சிறீலங்காவின் அரசியலில் இந்தியா ஈடுபடாது பிரிந்துநின்று ஒரு அக்கறையுள்ள பார்வையாளராக இருக்கின்றது.

இப்பொழுது சிறீலங்காவின் நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. முதலாவதாக நாங்கள் தமிழர்களின அரசியல போக்கைப் பார்ப்போம். சன்நாயக செயற்பாடுகளின் தேசிய நீரோட்டத்தில் நாங்கள் பங்காளியாக இருப்பதற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் தொடர்ந்தும் சிறிதளவான முயற்சிகளை எடுக்கும் அதேவேளை தமிழர்களின் அடிப்படை இடர்பாடுகளான அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாமையால் இவர்கள் எவ்விதத்திலும் பொருத்தமற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். சிறீலங்கா அரசிடமிருந்து அவர்களுக்கு நிலையான மறுமொழிகள் வரும் அறிகுறிகள் காணப்படவில்லை. வன்முறையான வழியில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரினதும ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரினதும் தலைமைத்துவங்களை 1989 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரைக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் ஒழித்தபின தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கிலும், கிழக்கிலும் தமிழர் மீது தமது அரசியல உறுதியை வலுப்படுத்திக் கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒருவா குறை கூறினாலும், அவரது உறுதியான வன்செயல்களையும போர்க்குண அணுகுமுறையையும் வெறுத்தாலும் அவர் பிரிவினைவாத கெரில்லாபபடைகளின் தலைவர் என்ற நிலையிலிருந்து தன்னை மக்கள் தலைவராக மாற்றியுள்ளார். இலங்கைத் தமிழ் மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கு அவரது பலரறி நிலையின அடிப்படையிலா அல்லது அச்சத்தின் அடிப்படையிலா ஏற்பட்டதெனபதை கலவிமான்களிடம் விட்டுவிடுவோம். விடுதலைப புலிகள் படை ஆற்றலும், செயலுரமும் தளராது நீடித்து இருக்கின்றன.

சிங்களவரின் இடர்பாட்டு நிலையிலும் எவ்வித வேறுபாடும் இல்லை. வலுமிக்க மக்கள் தலைவரான பிரேமதாசாவின் சார்புடன் காலஞ்சென்ற பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவின் ஈவு இரக்கமற்ற நடவடிக்கைகளால் சிங்களத் தீவிரவாத அரசியல் போராளிகள் குழுவான மக்கள் விடுதலை முன்னணி அடக்கி ஒழிக்கப்பட்டது. ஆனால்1991 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள அரசியல் அணிகள் சிறு கூறுகளாக சிதைவுறுதலும், திரும்ப இணைதலுமாக இருக்கின்றன.

பிரேமதாசாவின் இறப்பால் அணிக்குள் மேலும் ஏற்பட்ட குழுப்போராட்டம். ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் நிலவும் இனச்சிக்கலைத் தீர்க்கும்வகையில் ஒரு தெளிவான மக்கள் எண்ணத்தைத் திரட்டுவதைத் தடைசெய்துவிட்டது. ஒரேதாய் வயிற்றுப்பிள்ளைகளான சந்திரிக்கா குமாரணதுங்காவிற்கும், அனுரா பண்டாரநாயக்காவுக்குமிடையிலான கருத்து வேறுபாட்டிலிருந்து எழுந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் குழச் சண்டைகள் வெளிவருகின்றன.

இலங்கை அரசியலில் தொடர்பு இல்லாமல் இந்தியா பிரிந்து நின்றாலும், அது அந்த அரசியலின் போக்கையும், நடவடிக்கைகளையும் புறக்கணிக்கமுடியாது. பெருந்தொகையான சிறிலங்கா ஏதிலிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றனர். தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகம், கேளரப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருப்பதாக நம்பகரமான அறிக்கைகள் கூறுகின்றன. மேலும், இந்தியாவிலுள்ள சில பகுதிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையான சார்பைப் பெறுவதற்கு ஒரு தளமாகப்பாவிக்கின்றனர். இவ்வாறன நடவடிக்கைகள், சிறீலங்கா இராணுவத்தையும், கடற்படையையும் பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வைக்கின்றன. இரு முக்கிய உறுப்பினர்களான சிறீலங்கா அரசிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடத்தும் இருக்கும் இந்த முரண்பாடு இந்தியாவின் மேல் உடனடியான அழுத்தத்தை அல்லது நெருக்கடியைத் தோற்றுவிக்கமாட்டாது.

1983 ஆம் ஆண்டிற்கும், 1986ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலிருந்து சிறிலங்கா அரசு இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வுதான் காணப்படவேண்டும் என வாயளவில் பேசிக்கொண்டு அதேவேளை தமிழர்களுக் எதிராகப் படைமுறை

யையும், அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதை சனாதிபதி விஜேதுங்காவும் மீண்டும் தொடங்குகின்றார் போன்று தெரிகிறது. இப்படியான சூழ்நிலைகளில் பல அரசுகள் வெறுமனே அதிகமாக நடைமுறைப்படுத்த முயல்வது போன்ற இரு பாதைக் கொள்கையை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒரு பாதை தமிழர்களுக்கு எதிராக படை நடவடிக்கை எடுத்தலாகும். இரண்டவது பாதை படைநடவடிக்கை வெற்றி பெற்றால் அதன் தாக்கம் எதிரியை ஒருமிப்புக்கு வரச்செய்யும். இந்த அணுகுமுறை வெற்றியடையப் போவதில்லை.

1987 ஆம் அண்டு ராஜீவ்காந்திக்கும் ஜயவர்த்தனாவிற்குமிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு எதிராக குறைகற்றங்கள் காணப்பட்டாலும், அந்த ஒப்பந்தம் சனநாயக பல்லின பலமொழி, பலமத, மக்களாயங்களில் அடிப்படை நோக்கில் இலங்கையின் ஐக்கியத்தைக் கட்டிக்காக்கும் வகையில் அதன் அரசியலை மாற்றியமைக்கக்கூடிய வழிவகைகளைக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக இந்தியா தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதில் எப்பகுதியிலிருந்தும் எவ்வித ஐயங்களும் எழமுடியாது. ஏனெனில் இதற்கு ஒரே மாற்றாக இலங்கை பிளவுபடுவது இந்தியாவிற்கோ, இலங்கைக்கோ நன்மை பயக்காது. இன மத அடிப்படையிலான பிளவு இந்தியாவின் சொந்த நலன்களைப் பாதிக்கின்றது. மற்றைய நாடுகளைப் பொறுத்தவரை இந்தியா இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுமாயின், பின்னர் அது இந்தியக் குடியரசிற்கும் பொருத்தமுடையதாகாதா எனக் கேள்வி எழுப்பமுடியாதா?

ஆகவே தமிழர்களுக்கான நியாயமான உரிமைகளை வழங்குமாறு தொடர்ந்தும் இலங்கை மேலாளர்களைத் தூண்டுவதாகவே இந்தியாவின் முயற்சியாக இருந்துவரும். இந்தியா தமிழர்களது அபிலாசைகளைத் தீர்க்கத் தன்னை ஈடுபடுத்தும் அதே வேளை தமிழர்களிடையே தொடக்கத்திலிருந்து கடைசிவரை உட்கமத்தையும் வன்முறையையும் மறுதலிக்கக்கூடிய ஒரு அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய பொதுவான எண்ணத்தை உண்டாக்கத் தூண்டவேண்டும். தமிழ்ப் பொதுமக்களுடன் மட்டுமின்றி விடுதலைப் புலிகளுடனும் மீண்டும் ஒருமிப்பு பேச்சுவார்த்தைகளுக்கும், இணக்கத்திற்கும் வரும்வகையில் தொடர்புகளைத் திரும்பவும் ஏற்படுத்த வேண்டும்.

104693



# இந்தியாவின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தகர்த்துள்ளனர்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

— தராகி
(ஐலண்ட் - 20. 03. 94)

இந்திய தீபகற்பத்திற்கு பொதுவாகவும், குறிப்பாக தென் இந்தியாவின் எல்லைகளுக்கு ஊடாக இருந்து வரும் தமிழ் தேசியவாதத்தோடு நெருங்கிய தொடர்புடைய தமிழ்ப் பிரிவினை இயக்கத்தால் ஏற்படும் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தலை முறைப்படி ஏற்று, இலங்கைத் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் கிளர்ச்சியில் டில்லி ஈடுபட்டகாலத்திலிருந்து முதன் முறையாக ஒரு இந்திய பாதுகாப்புத்துறை பகுப்பாய்வாளர் ஆராய்கின்றார்.

*லான்சர் செய்தித்தாள் தொகுதியிலிருந்து ஐந்தாவது புத்தகமாக வெளிவந்துள்ளது. படைத்துறைப் பணித்தலைவர் அவசர் கறீம் எழுதிய "பரவும் பயங்கரவாதமும், தெற்கின் தேசிய வாதமும்," என்னும் நூலாகும். இந்தியாவின் பாதுகாப்பு மதிப்பாய்வுரைக்காக எழுதப்பட்ட இது செய்தித்தாள் தொகுப்பு, விரிவாக்கம் அடைந்துவரும் போர் முறைத் திறனையும், தொழில் நுட்ப ஆய்வுத்துறைச் சூழலையும், விரும்பத்தகாத உண்மைகளில் கவனத்தைச் செலுததவும், இந்தியாவின் பாதுகாப்பிற்கு எதிராகத் தெரியும் சிக்கல்களை அகற்றவும், முக்கியமாகப் பரவும் தேசிய வாதத்தால் தென் நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலையும், அதையொட்டிய இந்தியாவின் பாதுகாப்பையும் ஆராய்ந்து தப்பான எண்ணங்களை அகற்று முகமாக எழுதப்பட்டது. தென் இந்தியாவில் பிரிவினைக்கான உணர்ச்சிக் கனிவை ஊக்குவித்த பிரதான பொறுப்பாளிகளாக விடுதலைப் புலிகளே இருந்தார்களென்பதை இந்த நூல் முதலில் ஒப்புக்கொள்கின்றது.*

*தென் ஆசியாவின் பாதுகாப்பிற்கெதிராகப் பரந்துவரும் தேசிய வாதக் கருத்துக்களில் கவனத்தைச் செலுத்தித் தென்*

ஆசியாவின் பாதுகாப்பைப்பற்றி இன்னொரு சிக்கலை ஆக்கிய படைத்துறை பணித்தலைவர் கறீம் முக்கியமான கருத்தை விட்டு எதிர்பாராமல் விலக்கியிருக்கின்றார். தமிழருடைய பிரிவினை வாத கருத்தியல் கொள்கைகள்தான். இந்தியாவில் மிகப் பழமை வாய்ந்ததாதலால் அதற்கு தனிப்பட்ட விசை இயக்கமுண்டு. இப்படியாக இல்லாவிட்டால் தமிழருடைய குறைபாடுகள் காந்தியின் மென்மையான கோட்பாடுகளுக்கு அப்பால் சென்று இருக்க முடியாது. கொழும்பிலுள்ள தமிழர் இதையே 'விரும்பினாலும் அவர்களுடைய அடுத்த மாநாட்டுக்கான நிதியை வழங்கும் மேற்குலக நாட்டவரைப்போல அவர்கள் போரையும் போரின் தன்மையைப்பற்றியும் அறிந்திருக்கவில்லை.

இந்த நூலில் உள்ள ஒரு அடிப்படை முரவுரைக் குறைபாடு, இந்த எழுத்தாளர் ஒரு சிக்கலின் முக்கிய கோணமாக அதன் வரலாற்றுக் காரணத்தைத் தவறவிட்டுள்ளதாகும். எழுத்தாளரின் பல சகாக்கள் ஏற்றுக் கொள்ள விரும்புவது போல தனிநாடு கோரும் நாகர்களின் கிளர்ச்சிக்கெதிரான மலைப்பிரதேசமான வடகிழக்கு எல்லையில் புநுடில்லி எடுத்து வரும் நடவடிக்கைகள் முக்கியமானதும் ஆய்வுக்குரியதுமாகும். பிரித்தானியர்கள் அவர்களது நாட்டை வென்று 1879 இல் இந்தியாவுடன் இணைத்தனர்.

படைத்துறைப் பணித்தலைவர் கறீமின் நூலோடு எம் ஜே அக்பரின், ''இந்தியாவும் அசனுள் முற்றுகையும்'' என்னும் நூலையும் சேர்த்துப் படிப்பதை நான் சிபாரிசு செய்கிறேன். இதில் தென் இந்தியாவின் பிரிவினைவாதச் சிக்கல், வரலாற்று நோக்கோடும் காஷ்மீர் சிக்கலோடும் ஆராய்ந்து பார்க்கப்பட்டுள்ளது. ''வங்காளிகள் பாகிஸ்தானிடமிருந்து தங்களுக்கு மதிப்பும் சமத்துவமும் வேண்டுமென்று கேட்டனர். அதற்குப் பதிலாக ஒரு நாடே கிடைத்தது. தென் இந்திய மாநிலமான சென்னையும் ஒரு நாடு கேட்டது. பாக்கிஸ்தானிலுள்ள வங்காளிகளுடைய இரண்டக நிலையிலும் பார்க்க இந்தியத் தமிழருடைய சிக்கல் முக்கியமானதாகும். (பக். 47) என அதில் அக்பர் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான குறைபாடுகள் இருந்தாலும் டில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்களில் சிலர் தமிழருடைய விவகாரங்களில் இன்னும் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்களென்பதை படைத்துறை பணித்தலைவர் கறீமின் நூல் தெளிவாக விபரிக்கிறது. இந்தியாவின் நிரந்தர எதிரிகளுடன் சமத்துவ நிலையிலேயே விடுதலைப் புலிகளைக் கணிக்கும் கறீம், அவர்கள் ஒன்று சேர்ந்து தென்பகுதியில் ஒரு முனையை உருவாக்குவது

இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு ஒரு புதிய சவாலாகக் கூடு மென்று எச்சரிக்கிறார். நிலைகுலைந்து இயக்கம் விசை இழந்து அழிந்து போய்விடுமென நிராமல் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்திய அரசிற்கு அவர் பரிந் துரை செய்கிறார்.

டில்லியினுடைய வெளிநாட்டுக் கொள்கை அமைப்பிலுள்ள சில பிரிவினர் விடுதலைப் புலிகள் பாகிஸ்தானின் உளவுப் பிரிவி னருடன் சேர்ந்து கொண்டார்களென்று இப்போது கதையைப் பரப்புகிறார்கள். பாகிஸ்தான் உளவுப் பிரிவினர் விடுதலைப்புலி களுக்கு எப்படி உதவி செய்கிறார்கள் என்ற ஆதாரமில்லாத பரபரப்பூட்டக்கூடிய செய்திகளை இந்தியாவின் சில செய்தித் தாள்கள் பல தடவைகள் வெளியிட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுடன் பாகிஸ்தானை இணைத்துக்கூறும் கதைகளை டில்லி யிலிருந்து பரப்புவதில் ஆர்வமுள்ளவர்கள் இப்படியான கதைக ளால் என்ன நன்மை அடைகிறார்களென்று விளங்கவில்லை. கறீமின் நூலின்படி விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை நிறுத்திக்கொண்ட இந்தியா ஒரு தோற்றத்தை உண்டுபண்ணி கொழும்பில் சந்தேகத்தை உருவாக்கும் நோக்கில், பாகிஸ்தான் உளவுப்பிரிவும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயலாற்றுகின் றனர் எனக் கூறிவருகிறது. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன் னணி, அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி நாகர் தேசிய சபை, விடுதலைப் புலிகள் முதலிய இயக்கங்களிலுள்ள பிரதிநிதிகள் கொண்ட குழு கராச்சியிலும், பம்பாயிலும் இருந்து கொண்டு இந்தியாவில் நாசகாரவேலைகளையும் பயங்கரவாத நடவடிக்கை களையும் மேற்கொள்வதாக கறீம் தனது புத்தகத்தில் நிச்சயப் படுத்திக் கூறுகின்றார். பாகிஸ்தான் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரும் அந்தக்குழுவில் அங்கம் வகிப்பதாக கூறு கின்றார். இந்தியா விடுதலைப்புலிகளை தடைசெய்த பின்பு பாகிஸ்தானே விடுதலைப் புலிகளின் இயற்கையான நண்பன் என்று தன்னைப்போல பலர் கருதுகிறார்களென்கிறார். தன் னைப்போல பாகிஸ்தான் கொழும்பிற்கு தொல்லை கொடுக்க விரும்பாது என அவர்களும் கூறுகிறார்கள் என்கிறார். அது பல ஆண்டுகளாக நெருக்கமான உறவை விருத்தி செய்து வந்தி ருக்கிறதென்றும் கூறுகிறார்.

இந்தக் கருத்தை முறையான ஆதாரமில்லாமல் அவர் விரி வாக்கி இப்போது விடுதலைப் புலிகள் அந்தக் குழுவின் செயற் திட்டத்தில் முக்கிய பங்காளியாக இருப்பதால் அந்தக்குழு

தன்னுடைய கவனத்தை புலிகளின் செல்வாக்கினால் தென் பகுதிக்கு மாற்றி அங்கே கவனத்தைச் செலுத்துகிறது என்கிறார்.

தற்போதைய குறிக்கோள் பின்வருமாறு:-

☐ வடக்கிலிருந்து திராவிட கலாச்சாரமல்லாத கலாச்சாரங்கள் பரப்பப்படுவதைச் சுட்டிக்காட்டி தமிழருடைய மனக்கசப்பை ஊக்குவித்தல். பிரிவினை இயக்கத்தைத் தொடங்கும் நோக்கில் அரசியல் பிரிவினை வாதங்களையும் அரசியல் சீர்குலைவையும் பிளவுகளையும் உருவாக்கி அதன்மூலம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஊக்குவித்தல்.

☐ காவேரி தண்ணீர்ச் சிக்கல் போன்ற சிக்கல்கள்மூலம் கர்நாடகத்தில் தமிழருக்கு எதிரான உணர்வுகளை ஊக்குவித்தல், சாதாரண வாழ்க்கையைப் பாதிக்கும் படியான சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தூண்டுதல், ஆட்சிக்கு இழுக்குத்தேடும் பொருட்டு வீரப்பன் போன்ற சட்டத்துக்கு மாறானவர்களைப் பயன்படுத்துதல்.

☐ ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் போர்க் குழுவுக்கு உதவி செய்து அரசை நடத்துபவர்களுக்கு எதிராக சட்ட விரோத நடவடிக்கைகளையும் திகிலையும் தேவை ஏற்படும்போது ஊக்குவித்து முதன்மையான பகுதிகளிலிருந்து கவனத்தை திசைதிருப்புதல்.

☐ கேரளத்தில் அடிப்படைவாதக் குழுக்களைக் கொண்டு இனங்களுக்கு இடையே பதட்டத்தை உச்சநிலைக்குக் கொண்டு வருதல், பல்லினங்களுக்கிடையே வேறுபாடுகளை ஏற்படுத்துதல். திகில் ஊட்டும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பனவாகும், விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவின் சுற்றாடலிலுள்ள அதன் பேணுநர்களுக்கும் இது ஒரு நீண்ட கட்டளையாகும். ஆனால் கரீமும் மற்றவர்களும் கூறுவது போல் இப்படியான கோரிக்கைகளிலுள்ள அதன அடிப்படை நோக்கங்கள் எதிர்பாராதவிதமாகவும் தவிர்க்க முடியாத முறையிலும், நூலில் எச்சரிக்கை செய்யப்பட்டது போல பிரிவினைக்கும், அது வளர்ச்சிபுறுவதற்கும் இட்டுச் செல்லும். தமிழ்நாட்டில் பிரிவினை வாதத் தீவிரவாதம் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குபவர் ஜெயலலிதாவே என அவர் வாதிடுகின்றார். படைத்தலைவர் கரீம் தன்னுடைய ஆய்விலிருந்து தமிழ் நாட்டிலுள்ள தற்போதைய நிலையின் முதன்மையான கருத்தை ஆணித்

தரமாகச் சுட்டிக் காட்டுறபடியால் நான் அவரை மேலும் மேற்கோளாகக் காட்டவுள்ளேன்.

சீரற்ற அரசியல் நிலமையினாலும் உட்கிளர்ச்சிகளினாலுமே பயங்கரவாதமும், கிளர்ச்சியும், வளர்சசியும அடைகிறது. அரசியல் எதிரணியினரை அல்லது ஒரு பகுதி மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவது கிளர்ச்சியையும், குழப்பத்தையும் கொண்டுவருகிறது. அதிகாரங்கொண்ட ஆட்சிமுறையும், அடக்குமுறைக்கு சார்புடைய அரசும், பிரிவினைவாதமும், அரசியல் வன்முறைச் செயல்களும் வளர்வதற்கு இடமளிக்கிறது மேலே குறிப்பிட்டவை யாவும இன்று தமிழ்நாட்டிலுண்டு. ஊழல், அரசியல், பழிவாங்கல, செய்தித்துறை அடக்குமுறை என்ற இந்த மூன்றும் சவிடபூட்டும் நடவடிக்கைகளில் முதறாக அடங்கும். தமிழ்நாட்டில் பயங்கரவாத அழிட்பு நடவடிக்கைகள, தட்டபுச்சட்டம் (தடா) முதலியவற்றின பிரகடனததினால் அரசியல் எதிர் அணிகளோடிருந்த பகைமைகளையும், செய்தித்துறையோடிருந்த முரண்பாடுகளையும் தீர்க்கமுடிந்தது. இது மட்டுமல்லாமல 1911ஆம் ஆண்டின் பழமையான, அரசிஊலுக்கெதிரான கூட்டச் (தடைச்) சட்டத்தோடு 1967ஆம் ஆண்டின சட்டத்திற்கெதிரான நடவடிக்கைகள் தடைச்சட்டம் என்பன அமுல்நடத்தப்பட்டன. இந்தச்சட்டங்களை விலையேற்றத்திற்கெதிரான போர்க்குரல் எழுபபுபவர்களையும அடிப்படை வசதிகளின்மைக்கு எதிரான கோசங்கள் எழுப்புபவர்களையும் சிறையிலடைக்கப் பயனபடுத்தபபட்டன. அரசைக் கண்டனஞ் செய்கின்ற செய்தித்தாள்களின காரியாலயங்கள் கூலிக்கு அமர்த்தபபட்டவர்களைக் கொண்டு தேடுதல் செய்யப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள பல அரசியலவாதிகள் எழுபபும் குற்றச்சாட்டுக்களும் எதிர்க்குற்றச்சாட்டுகளிலும், எதுவும உண்மையிருக்கலாம். தமிழ்நாட்டிளை அநேகமான மக்கள் தமிழ் ஈழத்தையும் விடுதலைப் புலிகளையும் ஆர்வத்துடன் ஆதரிப்பவர்களாவார்கள் ஆனால் அநேகமான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமிலலாததோடு ஒவ்வொருவர்க்கெதிரான பகையையால பொறுப்பிலலாத வகையில சாட்டப்பட்டதாகக் காணப்படுகிறது. பஞ்சாப்பிலும், அசாமிலும், ஜம்முகாஷ்மீரிலும் அரசியல கொந்தளிப்பும் குழப்பங்களும ஏற்படுவதற்கு முன்னர் இப்படியான நிலமையே இருந்ததென்பதை நாங்கள் உணரவேண்டும். இது இப்படியாக இப்போது இருந்தால், டில்லியிலுள்ள சிலர் விடுதலைப் புலிகளையும பாகிஸ்தானிய உளநாட்டுச் சேவைகள், புலனாய்வுத் துறையையும் குற்றஞ்சாட்டுவது நிவர்த்தி செய்யமுடியாத விளைவைய உண்டு பண்ணக் கூடியதாயிருக்கும். இது படைத்

3273CC

துறைப் பணித்தலைவர் கரீம் சரியாகக் குறிப்பிட்டது போன்ற விளைவுக்கு உந்து சக்தியாக அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிந்து போகும் குறிக் கோளுக்கு பாகிஸ்தானின் உளவுத் துறை துணைபோகும் என்ற எண்ணம் வலுவடைந்தால் தமிழநாட்டு நிலைமை கட்டாயமாக மேலும் மோசமடையும். இன்று ரஜீவின் கொலையினாலும் அதற்குப பின்னால் விடுதலைப் புலிகளுக்கும் பேணுநர்களுக்கெதிராகவும் எடுத்த பாரிய எதிர் நடவடிக்கைகளினாலும் தமிழ்த் தேசிய வாதம் புலிகளுக்கு அளிக்கும் சார்பின் அடித்தளம் அழிந்துவிடவிலலை. ஆனால் பல அரசியல்வாதிகளும் அறிவுத்திறனுடைய வர்களும் முன்வந்து திராவிட இயக்கததின் முன்னைய கொள்கையான பிரிநது போகும் அடித்தள விருப்புணர்வை வெளிக் கொணர முயற்சிக்கின்றார்கள்.

ஆனபடியால் அந்த நூலில் விபரித்துள்ள பாகிஸ்தானைப் பற்றிய கதை சிறிய பங்களிப்பு என்று வேறுபடுத்தாமல் அதில் குறிப்பிட்ட போக்கைத் தடைசெய்யாமல் செயற்படவிட்டால் முதன்மையான தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் தி. மு. க. உட்பட தங்கள் வழமையான நடவடிக்கைகளில் இறங்கி, பெயர்ப் பலகையிலுள்ள இந்திச் சொற்களை அழித்தும் தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழ்நாட்டில் தனிமைப்படுத்தாமல் தமிழர்களின் தேசியக்கொள்கைக்கு எதிரானவர்கள் என்று வட இந்தியர்களின் பார்வையில் தோற்றுவிப்பர்.

பிரித்தானிய பேரரசின் மரபுவழி வந்தது தன்னுடைய நிலப் பரப்பு என்ற டில்லி கடைப்பிடித்துவரும் முறையால், இந்தியாவின் விடுதலை இயக்கத்தால் கட்டமைக்கப்பட்ட இந்திய ஒன்றியம் எனபதை தமிழ்நாட்டில் ஒன்றிணைத்து வைத்திருப்பது கடுமையாகும். விடுதலையடைந்தவுடன் இந்த முறையைக் கடைப்பிடிதத டில்லி, அரசியலாலும், அரசியலமைப்பாலும், படையாலும், மற்றும் மறைபொருள் முறைகளாலும் ஒன்றியத்திற்கு அச்சுறுத்தலாயிருந்த வெளிப்படை அழுத்தங்களை அடக்கி வந்தது. ஒரு பேரரசின மரபு வழிவந்த இந்த முறைகள் இந்த அழுத்த நிலையை பின் தள்ளுமேயொழிய அதற்கு ஒரு தீர்வு காணமாட்டாது என்பது உண்மையாகும். தென்னிந்திய நிலைமையில் அவைகள் எவ்வளவு கவனத்துடன் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதையும், அவைகளால் ஏற்படும் பாரதூர விளைவுகளையும் திரு. கரீம் அவர்களது புத்தகம் ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளது.

# இனப்படுகொலையின் உச்சக்கட்டம் ருவாண்டா

ருவாண்டா மத்திய கிழக்காபிரிக்காவிலுள்ளது. அதனைச் சுற்றிவர கிழக்கில் தான்ஷானியா, வடக்கில் உகண்டா, மேற்கில் சயர், தெற்கில் புறுண்டி ஆகிய நாடுகள் உள்ளன. ஆனால் புறுண்டியிலும், ருவாண்டாவிலும் குட்டுஸ் இன மக்களும், துத்சிசு இன மக்களுமே வாழ்ந்து வருகின்றார்கள்.

> பெல்ஜியத்திலுள்ள அன்ற்வேப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் வளர்முக நாடுகளில் (மூன்றாம் உலகநாடுகள்) இருந்துவரும் மக்களுக்கான ஆராய்ச்சிக் கல்லூரியில் பேராசிரியராகப்பணிபுரியும் திரு. வேர்க்னெர் அவர்களின் (ஐலண்ட் 20-5-94) பேட்டியிலும், புரண்லைன் (20- 5- 94) இதழில் இருந்தும் தொகுக்கப்பட்ட கட்டுரை

இவர்களில் குட்டுஸ் இன மக்கள் இந்நாடுகளின் பழச்குடி மக்களாவர். ஆனால் துத்சிசு இன மக்கள் நைல்நதிப் பிரதேசத்திலிருந்து அழகிய ஒட்டகங்களில் இங்கு வந்து குடியேறியவர்களாவர். இந்தத் துத்சிசு இனமக்கள் குட்டுஸ் இன மக்களைப் போலல்லாது நெடிதுயர்ந்த தோற்றமும், அழகும், நாகரீகப்பாங்கும் கொண்டவர்கள். பெரு நிலப்பரப்பான ருவாண்டாவிலும், புறுண்டியிலும் இவர்கள் பரந்திருக்கின்றனர். அந் நாடுகளின் மொத்தச்சனத் தொகை 12 மில்லியன்களாகும். இவர்களில் பெரும்பான்மையினர் குட்டூஸ் இனத்தைச் சேர்ந்தவர்களாகும். மக்கள் தொகையில் 80 வீதமானவர்கள் குட்டூஸ் இனத்தவர்களாகும். மிகுதி 20 வீதத்தில் 14 வீதம் வரை துத்சிசு இனத்தவர்களாகும். ஏனையோர் வேறு இனத்தைச் சேர்ந்த குள்ளமான மக்களாகும்.

1918 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியின் வசமிருந்த அனைத்துக் குடியேற்ற நாடுகளும் அதன் ஆளுகையின் கீழிருந்து மீட்கப்பட்டன. அப்போது

அதன் ஆளுகையின் கீழிருந்த ருவாண்டாவும், புறுண்டியும் அனைத்துலக சபையால் பெல்ஜியத்திடம் கையளிக்கப்பட்டது. அன்று முதல் ருவாண்டாவும், புறுண்டியும் வரலாற்றுக் கலாச்சார வகையில் பெல்ஜிய நாட்டின் குடியேற்ற நாடுகளாயிருந்து வந்சன. அங்கு தங்களது ஆற்றுகையை பெல்ஜியநாடு மற்றைய குடியேற்ற நாட்டு வல்லரசுகள் நடாத்தி வந்ததைப்போலவே நடாத்திவந்தது. பெரும்பான்மையினராகக் குட்டுஸ் மக்கள் இருந்தாலும் உயர் குடிகளைப் போன்றிருந்த சிறுபான்மையினமான துத்சிசு மக்களைக் கொண்டே தனது ஆற்றுகையை நடத்த அது விரும்பியது. இதனால் சிறுபான்மையினரான துத்சிசு இன மக்கள் பெரும்பான்மையினரான குட்டுஸ் மக்கள் மீது ஆதிக்கம்




செலுத்தக் கூடியதாக விருந்ததோடு தங்களை மேல்வகுப்பினராகவும், குட்டுஸ் மக்களைக் கீழ்வகுப்பினராகவும் கருதி அவர்களைத் தங்களது வேலைக்காரர்கள் போன்று நடாத்தி வந்தனர்.

ருவாண்டா, புறுண்டி ஆகியவற்றின் ஆட்சித் தலைவர்கள் மியாமி என அழைக்கப்பட்டனர். இருநாடுகளுக்கும் வெவ்வேறு மியாமிகள் இருந்தனர். இம் மியாமிகள் அரசனைப் போன்றே ஆட்சி செய்து வந்தார்கள். இவர்களை வைத்தே ஜேர்மனியர் ஆற்றுகையை நடத்தினர். பெல்ஜியம் பொறுப்பேற்ற பின்னும் அந்த நடைமுறையையே கடைப்பிடித்தது. இந்த மியாமிகள் மரபுவழி வந்தவர்களல்ல. இவர்கள் இனக்குழுக்களிலிருந்து வந்தவர்கள். ஒரு மியாமியின் மகன் தந்தைக்குப் பின் மியாமியாக வரமுடியாது. ஆனால் இனக்குழுக்களைச் சேர்ந்த எவரும் வரமுடியும். இந் நடைமுறை துத்சிசு இன மக்களால் கொண்டு வரப்பட்டதாகும். இதனால் 40 ஆண்டுகள் ருவாண்டாவையும், புறுண்டியையும் ஆற்

றுகை நடத்திவந்த பெல்ஜியத்தவர்கள் அவர்களது தயவிலேயே அங்கிருந்து வந்தார்கள்.

ருவாண்டாவிலும், புருண்டியிலும் ஆற்றுகை நடத்தி வந்த பெல்ஜியத்திற்குப் பொருளாதாரரீதியில் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. அதனால் அவர்களது ஆற்றுகை எதுவித தடையுமின்றிக், குழப்பமுமின்றி நடந்தது. அங்குள்ள மக்களில் அதிகமான குட்டுஸ் இனத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயமே செய்து வந்தனர். அவர்கள் கோப்பி, தேயிலை ஆகிய பயிர்வகைகளைச் செய்து வந்தார்கள். அங்கு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ''பிரசாரகர்கள் பாடசாலைகள்'' மற்றும் வைத்திபசாலைகளை நிறுவினர். இப்பாடசாலைகளில் அதிகமாக துத்சிசு இனத்தைச் சேர்ந்தவர்களே கல்வி கற்றனர். குட்டுஸ் இன மக்கள் விவசாயிகளாகவிருந்தமையால் அவர்கள் கல்வி கற்பதில் அதிக அக்கறை கொள்ளவில்லை. இதுவும் துத்சிசு மக்கள் முன்னணியில் இருப்பதற்குக் காரணமாகும்.

மக்களாட்சி அங்கு ஏற்படாததைப் பற்றிக் குறிப்பிடும் பெல்ஜியப் பேராசிரியரான கொர்னேலிஸ், ''உலகத்தின் மற்ற நாடுகளில் மக்களாட்சி நடைமுறையில் இருப்பதைப் போன்று குட்டுஸ் மக்கள் கல்விகற்றபின்னர் இங்கும் அதை நிலைநாட்டுவதற்கு நிமிர்ந்து நிற்பவர்களென எண்ணுகின்றேன்'' எனக் கூறுகின்றார். பெல்ஜியம் ஆற்றுகை நடத்திய 40 ஆண்டுகளில் சுதந்திரம் கோரி எந்தக் கோரிக்கையையும் அங்குள்ள மக்களிடமிருந்து விடுவிக்கப்படவில்லை.

மக்களாட்சி ஏற்படுத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு ஐக்கியநாடுகள் சபை பெல்ஜியத்தைக் கேட்டுக் கொண்டது. மக்களாட்சி முறையானது தன்னுரிமை, தேர்தல்கள், ஆட்சிப் பிரிவுகள் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. இதை எப்படி நடைமுறைப்படுத்துவது என பெல்ஜியம் சிந்தித்தது. ஏனெனில் மக்களாட்சிமுறை ஏற்படுத்துவது தற்போதிருக்கும் மியாமியையும், துத்சிசு மக்களின் ஆதிக்கத்தையும் இல்லாது செய்யும். இதனால் தத்சிசு மக்களில் பல அறிந்தவர்கள் இதைத் தவிர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

19 2ஆம் ஆண்டு ருவாண்டா சுதந்திரம் பெற்றது. அப்போது குட்டுஸ் இன மக்களே வெற்றிபெறும் நிலையிருந்ததால் பெல்ஜியத்தினர் அவர்களுக்குச் சார்பாகவே இருக்கத் தீர்மானித்தார்கள். 1950களில் ஆபிரிக்காவில் குடியேறிய நாட்டு ஒழிப்புமுறை விசையாற்றல் பெற்றபோது குட்டுஸ்களின் எழுச்

சியும் ஆரம்பித்தது. 1962ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தபின் குட்டுஸ் விடுதலை இயக்கத்தின் கீழ் துத்சிசுகளுடன் நடந்த சண்டையைத்தொடர்ந்து துத்சிசுகள் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். 1959ஆம் ஆண்டிற்கும் 1964ஆம் ஆண்டிற்கு மிடையில் நடைபெற்ற குழப்பங்களின்போது பல்லாயிரக்கணக்கான துத்சிசு இனமக்கள் கொல்லப்பட்டதோடு. அவர்களில் 150,000 மக்கள் அயல் நாடுகளான உகண்டா, தான்ஷானியா, புறுண்டி, ஷயர் ஆகிய நாடுகளுக்கு ஏதிலிகளாக தப்பிச்சென்றனர். குட்டுஸ்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட 'சமூகப் புரட்சி'யானது ஆபிரிக்காவில் பழமையான ஏதிலிச் சிக்கலாக முடிந்தது.



போர்ச்சூழலை எடுத்தியம்பும் ஒரு காட்சி

தற்போதைய சண்டைக்கான காரணங்களை 1960ஆம் ஆண்டுகளில் நடந்த எழுச்சிகளிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது. துத்சிசுகளின் தலைமையிலான நாட்டுப்பற்று முன்னணி (Rwandan Patriotic Front) யிலுள்ளோர் ஏதிலித் தங்ககங்களில் வளர்ந்தவர்களாகும். அயல் நாடான புறுண்டியில் துத்சிசுகள் அரசியலிலும், பொருண்மியத்திலும் ஆதிக்கம் பெற்றிருப்பது போல் அல்லாது ருவாண்டாவில் அவர்கள் அடக்குமுறை ஆட்டுழியத்தையும், பாரபட்சத்தையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவர்கள் மேற்கொண்ட சதிப்புரட்சி கருணையின்றி ஒடுக்கப்பட்டது. அப்போது பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதோடு ஏதிலியாகப் புதிதாக வெளியேறுவதும் இடம்பெற்றது. அதேவேளை துத்சிசுக்களின் சட்டுப்பாட்டிலான புறுண்டியின் ஆற்றுகை அங்கு தனது இனத் தூய்மைப்படுத்தும் முயற்சியை ஆரம்பித்ததால் கணக்கிலடங்கா குட்டுஸ் இன மக்கள் ருவாண்டாவிற்குள் புகுந்தனர். ருவாண்டாவிற்கு சுதந்திரம் வழங்கும் குழுவில் அங்கத்துவம்வகித்தவரும் பெல்ஜியம் அன்ற்வேப் பல்கலைக்கழகத்தில் வளர்முகநாடுகள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு மூன்றாம் உலகநாடு

ளிலிருந்து வருபவர்களுக்கு முகாமைத்துவத்திலும், பொது ஆற்றுகையிலும் பயிற்சியளிப்பவருமான பேராசிரியர் கொர்னேலிஸ், துத்சிசு மக்கள் பற்றிக் கூறுகையில், துத்சிசு மக்களுடன் அறிமுகமாக நான் ஒரு போதும் பழகவில்லை என்பதைக் கூறவேண்டியவனாக இருக்கின்றேன். அவர்கள் மிக அன்பானவர்கள் ஆனால் மறைமுகமான அவர்களின் செயல்களால் உலகமே உங்கள் தலை மீது சரிந்து விழலாம். பழிவாங்குவதற்கென்றே பல ஆண்டு காலம் காத்திருப்பார்கள்'' என்கின்றார்.

ஏழைநாடுகளான ருவாண்டாவிலும், புறுண்டியிலும் நிலத்திற்காகப் போட்டியிடுவதும் அங்குள்ள மக்களிடையே இன வெறுப்பைத் தூண்டியுள்ளது. புறுண்டியில் பெரும்பான்மையாக இருந்துவரும் குட்டுஸ் இன மக்கள் 1962ஆம் ஆண்டிலிருந்து அதிகாரத்தைப் பறிப்பதற்காக முயன்று வருகின்றார்கள். அங்கு ஆதிக்கம் செலுத்திவரும் துத்சிசு இனப்படைகள் 1965, 1969, 1972 மற்றும் அண்மையில் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற ஆட்சிக்கெதிரான சதிப்புரட்சிகளை முறியடித்தன. 1972ஆம் ஆண்டுச் சதிப்புரட்சியின்போது 2,00,000 மக்கள் கொல்லப்பட்டதாகக் கணக்கிடப்பட்டது. 1993ஆம் ஆண்டு சதிப்புரட்சி முயற்சிக்குப் பின்னும் அதேயளவு மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த இனங்களைச் சேர்ந்த எல்லோரும் ஒருவரது இரத்தத்தை ஒருவர் குடிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்களல்ல. இரண்டு இனங்களிடையேயுள்ள நல்லெண்ணம் கொண்டோா மீண்டும் மீண்டும் வரும் இந்த இரத்தஞ்சிந்தும் வன்முறைகளை முடிவிற்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ருவாண்டாவின் சனாதிபதி யுவெனல் கப்யாரிமானாவும், அவர் குறைபாடுகளை ஈடுசெய்யும் நண்பர் சனாதிபதி சைப்பிரியன் நித்தார்யாமிராவும் ஒரு விரிவான அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு தான்ஷானியாவிலிருந்து திரும்பும் போதே அவர்கள்பயணம் செய்த வானூர்தி ருவாண்டாவின் தலைநகர் கிகாலி (Kigali)யில் துத்சிசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நாட்டுப்பற்று முன்னணிக்குச் சலுகைகள் வழங்குவதை விரும்பாத ருவாண்டா சனாதிபதியின் சிறப்புக் காவல்படையைச் சேர்ந்தவர்களால் ஏவுகலணயால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

புறுண்டியிலும் அனைத்துலக நடுவர்களின் பெருமுயற்சியால் துத்சிசுகளின் ஆதிக்கத்திலுள்ள அரசு முதன் முறையாகப் பல கட்சிகள் பங்கு பற்றும் தேர்தல்களை நடத்துவதற்கு உடன்

பட்டது. 1993 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில குடடுஸ்களின் கட்டுப்பாட்டிலுள்ள சனநாயக முன்னணி வெற்றிபெற்றது. ஆனால் துத்சிசுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள படையணி, அதிகாரத்தில் தங்களது கொடூரமான ஏகபோக உரிமையை விடாது வைத்திருக்தும மூர்க்கமான முயற்சியில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட குட்டுஸ் இனத்தைச் சேர்ந்த சனாதிபதி மெல்சியோர் நித்தாயேயை 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கொலை செய்தது இது இரத்த ஆறு ஓடும் இன்னொரு வெறியாட்டத்திற்கு வழிவகுத்தது.



அகதிகளாக துத்சிசு மக்கள் தான்ஷானியாவிற்குச் செல்வதைக் காணலாம்

ருவாண்டாவிலுள்ள துத்சிசுகள் முழுமையாக அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டாலும், அவர்களது நாட்டுப் பற்று முன்னணி படை வெற்றிளைப் பெற்று ருவாண்டாவின் தலைநகர் கிகாலியின் எல்லை வரை முன்னேறி வந்து அதன் வானூர்தி நிலையத்தையும் கைப்பற்றியுள்ளது. ருவாண்டா படையினர் தலைநகர் கிகால்யையும், அதன் அண்மையிலுள்ள கனொம்பைத் தளத்தையும் விட்டு வெளியேறி அரசாங்கமிருக்கும் இடமான கிதாராமாவிற்தச் சென்றுள்ளதாகத் தெரிகிறது. ருவாண்டாவின் நாட்டுப்பற்று முன்னணிக்கு உகண்டாவின் ஆதரவு உண்டு அங்கிருந்தே ருவாண்டா நாட்டுப்பற்று முன்னணி 1990 இல் படையெடுத்ததும். அது அனைத்து இன மக்களினதும் ஆதரவைக் கோருகின்றது. 1993ம் ஆண்டில் அரசாங்கம் ருவண்டா நாட்டுப்பற்று முன்னணியுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைப் பிரகாரம் சனநாயக வழிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது ஆனால் ஏப்ரலில் நடைபெற்றநிகழ்ச்சிகள் இதற்கு முன்னர் செய்தவைகளை மீளச்செய்ய முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளன.

ருவாண்டா நாட்டுப் பற்று முன்னனியே அந்த நாட்டில் ஒரு உறுதியான தன்மையைக் கொண்டு வரக்கூடிய நிலையிலுள்ளது. முன்னாள் சனாதிபதியின் ஆட்சிக்காலத்தின் போது எழுந்த குட்டுஸ் இனப் பாகுபாடுகளால் 1975 ஆம் ஆண்டுப் புரட்சி சதி மூலம் ஆட்சிக்கு வந்த காலஞ்சென்ற கப்யாரியான தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள தனது இனத்தவர்கள் மீது தங்கியிருக்கவேண்டி வந்தது. உகண்டா நாட்டுடனான எல்லைச்சண்டைகளும், உகண்டா நாட்டு சனாதிபதி ஜோவேரிமுசேவேனியை ருவாண்டா நாட்டு பற்று முன்னணியைச் சேர்ந்த கிளர்ச்சிக்காரர்களுக்கு மேலும் ஆதரவளிக்க செய்துள்ளது. ருவாண்டா நாட்டு பற்று முன்னணியைச் சேர்ந்த கிளர்ச்சிக்காரர்கள் இடி அமினுக்கும், மில்டன் ஒபேட்டாவுக்கும் எதிராக முசேவேனியின் கரந்தடிப் படையுடன் சேர்ந்து தங்களது தீரத்தைக் காட்டியவர்கள் இதனால் துத்சிகப் போராளிகளுக்கு நன்றிக்கடனுடைய உகண்டா சனாதிபதி அவர்கள் ருவாண்டாவில் அதிகாரத்தில் இருப்பதிலிருந்து விலகமாட்டார்.

சமர்களில் ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணி பெற்று வரும் வெற்றிக்கு ருவாண்டாவில் குட்டுஸ்களை அரசை உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அரசியல் திருத்தங்களை மேற்கொள்ள வைத்தது. கிளர்ச்சியாளர்களுக்கும் அரசுக்குமிடையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை இடைக்கால அரசாங்கம் ஒன்றையும், பல கட்சிகள் பங்குபற்றும் தேர்தலை நடத்தவும் ஒப்புக்கொண்டது. எதிர்க் கட்சியிலிருந்து பிரதம மந்திரியைத் தெரிவு செய்தாலும் மற்றைய பேரங்கள் செயல்படுத்தப்படவில்லையென ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணி கூறியுள்ளது. (அகாத்தே உவலிங்கியிமானா வானூர்தி நெருங்கியபின் ஏற்பட்ட விளைவுகளின்போது கொல்லப்பட்டுள்ளார்).

அருசாவில் கைச்சாத்தான உடன்படிக்கைக்கேற்ப அரசாங்கம் அமைக்கப்படவில்லை. அருசா உடன்படிக்கை ருவாண்டா, புறுண்டிமீது பொருளாதாரத் தடை கொண்டுவரப்படவேண்டும் என்ற அச்சுறுத்தலாலேயே கைச்சாத்திடப்பட்டது. ருவாண்டாவின் சனாதிபதியின் சிறப்புக் காவற் படையினர் அங்கு அமைதி திரும்புவதை விரும்பவில்லை என்பதற்குச் சான்றுகள் உள்ளன. குழப்பங்கள் நடப்பதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. எதிர்ப்பவர்களும் தாக்குதல்களுக்கு ஆயத்தமாகவே இருக்கின்றார்கள். அமைச்சர் ஒருவர் பட்டப்பகலிலேயே படுகொலை செய்யப்பட்டார். புறுண்டியில் நடக்கும் நிகழ்வுகள் ருவாண்டா

வில் குலைந்துபோயிருக்கும் அமைதிபற்றி அனைத்துலக சமூகத்தை அக்கறை கொள்ளவைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை 2000 துருப்புக்களை அனுப்பியுள்ளது. சண்டையிலீடுபட்டோர் சமாதானத்தை நோக்கிச் செல்லாவிட்டால் அவர்கள் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது. சண்டையிலீடுபட்டோர் சமாதான வழிகளை நாடாமையால் அது தனது அமைதிப் படைகளை விலக்கிக் கொள்ள முடிவுசெய்தது. அதனை ஆபிரிக்க ஒற்றுமை இயக்கச் செயலர் சலீம் அகமட் சாலி வெகுவாகக் கண்டித்துள்ளார். படுகொலைகள் நடந்து கொண்டிருக்கும்போது அமைதி பேணுபவர்களைத் திருப்பி அழைப்பது தனக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதாகக் கூறுகின்றார். ''சில மக்களே கொல்லப்படும் பொஸ்னியாமீது கடுமையான ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று கூறும் ஐக்கிய நாடுகள் சபைச் செயலர், இதைத் தீர்மானித்திருப்பது, உலக அமைப்பில் இனத்துவேசமும், தரம் பிரித்தலும் பெருகி வருவதைக் காட்டுகின்றது'' எனக் குற்றஞ்சாட்டியுள்ளளார்.



தன்ஷானியாவுக்கு தப்பிச்செல்லும் துத்சிசு இன மக்கள்.

''ஆபிரிக்காவின் சுவிற்சலாந்து'' என சுதந்திரம் அடைந்த பின் அழைக்கப்பட்ட ருவாண்டா இப்போது அனைத்துலக சமூகத்தால் கைவிடப்பட்ட நாடாகக் காணப்படுகின்றது. இருந்தாலும் அங்கு நடைபெற்றுவரும் அநாகரிகச் செயல்கள் கடைசி நேரத்தில் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும், ஆபிரிக்க நாடுகளும் அங்கு நடைபெறும் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபை அங்கு பணியாற்றுவதற்கு 5500 அமைதிப் படையினரை அனுப்பத் தீர்மானித்துள்ளது. எனினும் 15 அங்கத்தவர்கள் கொண்ட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இத் தீர்மானத்திற்கு 10 உறுப்பு நாடுகளே ஆதரவளித்துள்ளன. ஐந்து நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ருவாண்டாவிற்கு அமைதிப் படைத்

துருப்புக்களை அனுப்புவதில் ஐக்கிய நாடுகள் சபைச் செயலர் பெரும் சிரமத்தை நோக்கியுள்ளார். அவரது வேண்டுகோளுக்கு பிரான்ஸ் முன்வந்து 2500 துருப்புக்களை உதவியுள்ளது. அவர்களில் 600 துருப்புக்கள் ஏற்கனவே ருவாண்டா போய்ச் சேர்ந்துள்ளன. பிரான்சின் துருப்புக்கள் குட்டுஸ் இனத்தவரது ஆட்சிக்கு ஆதரவாகவே வந்துள்ளதாகக் கூறும் ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணி அவர்களை எதிர்த்துப் போராடப்போவதாகத் தெரிவித்துள்ளது. ஆனால் பிரான்ஸ் தனது துருப்புக்கள் படுகொலைகளிலிருந்து தப்பிப் பிழைத்திருக்கும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யவே சென்றுள்ளதென்றும் அது தனது பணி முடிந்ததும் இரண்டொரு மாதத்தில் திரும்பிவிடுமென்றும், அங்கு கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் எவருடனும் சண்டையிலீடுபடக் கூடாது எனக் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றது. மனிதாபிமானச் செயல்களில் ஈடுபட்டால் அதை எதிர்க்கப்போவதில்லை. ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணியைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். கானா, செனகல், எதியோப்பியா, இத்தாலி ஆகிய நாடுகளும் தங்கள் படைகளை அனுப்பச் சம்மதித்துள்ளன.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த இக்பால் றிசா சமாதான முயற்சிகளை மேற்கொண்டு ருவாண்டாவுக்குச் செல்கிறார். ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணிக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஒரு போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்த அவர் முயல்வார். ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணித் தலைவர் அலெக்கிஸ் கன்யாரெங்குவாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஏப்ரல் 6ஆம் திகதிக்குப் பின் நடைபெற்றுவந்த கொலைகளைத் தடுத்து எஞ்சியுள்ளோருக்கு உதவும் வகையில் ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவார் என ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த பேச்சாளர்கள் கூறியுள்ளார்கள். அரசிற்கு எதிரானவர்களையும், துத்சிசு சிறுபான்மையினரையும் கொன்றுவரும் குட்டுஸ் படையணிகளின் அதிகாரத்தை ருவாண்டா நாட்டுப்பற்று முன்னணி வெற்றிகொள்ளும் முன்னரே யுத்த நிறுத்தத்துக்கான உடன்பாடு ஏற்படுமென இராசதந்திரிகள் கூறுகின்றார்கள். அனைத்துலக சமூகத்திற்குத் தங்களை நல்லவர்களெனக் காட்டிக்கொள்வதற்காக ருவாண்டா நாட்டுப் பற்று முன்னணி யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திடும் என அவர்கள் கூறுகின்றார்கள்.

பின்வாங்கிவரும் ருவாண்டாப் படைகள் இடைக்கால அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருந்து வருகின்றன. ருவாண்டா நாட்டுப்பற்று முன்னணி இடைக்கால அரசாங்கத்தைக் ''கொலை

காரக்கும்பல்'' எனக் கூறுகின்றது. அவர்கள் இடைக்கால அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுக்கள் நடாத்த மறுத்துவரும் வேளையில் படுகொலைகள் நிறுத்தப்பட்ட பின்னர் ருவாண்டா படையணியுடன் யுத்த நிறுத்தம் செய்யப்போவதாகக் கூறியுள்ளனர். இதேவேளை ருவாண்டாவில் ஐக்கிய நாடுகள் சபையில் பணி பற்றி அதன் செயலாளர் நாயகம் கூறும்போது, அது ஐக்கிய நாடுகள் சபைக்கும், உலகத்திற்கும் எற்பட்ட தோல்வி என்கிறார் ''நான்தோல்வியடைந்துவிட்டேன். அது ஒரு கீழ்செயலாகும். அதை நானே முதலில் கூறுகின்றேன். இதைத்திரும்பவும் கூறுவேன்'' என அவர் செய்தியாளரிடையே கூறினார். அது ஐக்கிய நாடுகள் சபைக்கு மட்டும் தோல்வியல்ல, அனைத்துலக சமுகத்திற்கும் ஏற்பட்ட தோல்வியாகும், நாம் எல்லோரும் அதற்குப் பொறுப்பாளிகளாகும்'' ருவாண்டாவில் இன அழிவினால் 200000 மக்கள் கொல்லப்பட்டிருக்கும் போது அனைத்துலக சமுகம் இன்னமும் என்ன செய்யவேண்டும் என விவாதித்துக் கொண்டிருக்கின்றது'' எனக் கூறும் அவர் பெரிய நாடுகளுள் மட்டும் பொறுப்பல்ல இந்தக் குற்றத்தை ஆபிரிக்க மற்றைய நாடுகளும் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்கிறார். அங்கு 500000 மக்கள் கொல்லப்பட்டதாக நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளோர் கூறுகின்றனர். அவைகளில் அதிக கொலைகள் படையணிகளாலும். குட்டுஸ் இன வன்செயல் கும்பலாலும் செய்யப்பட்டவையாகும். 10இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர்.

யுத்தநிறுத்தமின்றி எந்தப்பணியையும் அங்கு செய்யமுடியாது எனச் சமாதானத்தூதுவர் றிசா கூறியுள்ளார். அவர் தலைநகர் கிகாலிக்குச் சென்ற கனடா நாட்டு வானூர்தி சுடப்பட்டதாகத் தெரிகிறது அதை யார் சுட்டார்கள் என்பது தெரியவில்லை. நான்கு இயந்திரங்களைக்கொண்ட அவ்வானூர்தி மட்டுமே வெளிநாட்டிலிருந்து அங்கு தேவையான பொருட்களையும், துருப்புக்களையும் கொண்டு சென்றது, அதன் ஒரு இயந்திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டதால் கிகாலிக்கான வானூர்திச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது,

அதேவேளை லைபிரியச் சிக்கலில் ஈடுபட்டபின் இந்நெருக்கடியைக் தீர்க்கும் வகையில் ஆபிரிக்க நாடுகள் கூடியுள்ளன. அக்கூட்டத்தில் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும் 27 ஆண்டுகளுக்கு நீண்ட சிறைவாசம் அனுபவித்தவரும், சமாதானத்துக்கான நோபல்பரிசு பெற்றவரும் அபிரிக்க நாட்டின் மிகச்செல்வந்த நாடான தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பினச் சனாதிபதியுமான நெல்சன் மண்டேலா தான் பதவியேற்ற பின்னர் முதலாவதாகக் கலந்து கொண்டு பேசுகையில் தனது நாடு 50 கவசவாானங்களையும்,

ஒரு வைத்திய வசதிகொண்ட வாகனத்தையும் தந்துதவும் என கூறியுள்ளார்.

மனித உயிர்களுக்கு மதிப்பளிக்காத ஆபிரிக்காவில் கடந்த பத்து ஆண்டுகளில் சூடானில் 500,000 பேரும் அங்கோலாவில் 100,000 பேரும் மற்றும், மொசாம்பிக், லைபிரியா சயர் ஆகிய நாடுகளில் அதேயளவு மக்களும். இப்போது உகண்டாவில் 500000க்கு மேற்பட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அனைத்துலக சமூகத்தைப் பொறுத்தமட்டில் ஆபிரிக்கா இருண்ட கண்டமாக இருந்துவந்ததெனினும் அது மீண்டும் அந்தநிலைக்கே சென்றுகொண்டிருக்கின்றது. ருவாண்டா நெருக்கடியைத் தீர்ப்பதில்ஈடுபட்டுள்ள. ஐக்கியநாடுகள் சபையின் முயற்சியும், ஆபிரிக்கச்சிக்கல்களை ஆபிரிக்க நாடுகளே தீர்துவைக்க வேண்டும் என்ற நோக்கில் ஈடுபட்டுள்ள அந்நாடுகளின் முயற்சிகளும் வெற்றிபெறுமா?

# குரங்கும் மனிதனும்

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று சாதாரணமாகச் சொல்வதுண்டு. ஆனால் அது ஒரு சரியான கூற்று அலல. குரங்குகளும், மனிசர்களும் தாயாதிகள், ஒரே கோத்திரக்காரர்கள் என்று சொல்வதுதான் சரி. அதாவது இரண்டு இனங்களும் ஒரு பொதுவான மூதாதையினத்திலிருந்து பிரிந்து பரிணமித்த கிளைகள் சுமாராக மூன்று கோடி ஆண்டுகளுக்கு முன்னால் பூமியில் வசித்த சில வகை விலங்குகள் முன் கால்களைத் தூக்கிக் கொண்டு இரண்டு கால்களால் நடக்கத் தொடங்கின. (BIPED) அவற்றின் இரண்டு கண்களும் சேர்ந்து இயங்கி ஒரு பொருளைப் பார்க்கிற (Binocularvision) திறமையைப் பெற்றன. அவற்றின் மூளையின் முன்பகுதி வளர்ந்து அபிவிருத்தியடைந்தது. அவற்றிற்கு புத்திக் கூர்மையும் பகுத்தறிவும் ஏற்பட்டது. அவை பிரைமேட்டுகள் எனப்படும். நாளாக இந்தப் பிரமேட்டுகளில் ஒரு பிரிவு மனிதனாகப் பரிணமிக்கத் தொடங்கி தனக்கென ஒரு புதிய பாதையை வகுத்துக் கொண்டு வளர்ச்சியடைந்தது. மற்ற பிரிவுகள் வேறு திசைகளில் பரிணாமமடைந்து வாலுள்ள குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் கொரில்லா எனப்படும் மனிதக் குரங்குகள், லெமூர்கள் (Lemurs), டார்சியர்கள் (Tarsiers) என்ற வெவ்வேறு இனங்களாக மாற்றமடைந்தன. இத்தகைய பாதைப் பிரிவு சுமார் 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்தான் தொடங்கியது என இதுவரை விஞ்ஞானிகள் நினைத்துக்கொண்டிருந்தார்கள். தென் கலிபோர்னியா பல்கழைக்கழகத்தில் செய்யப்பட்டிருக்கின்ற ஆய்வுகளிலிருந்து இந்த மனித அவதாரம் ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டது எனத் தெரிய வருகிறது.

# நெல்சன் மண்டேலாவிற்கும் எவ். டபிள்யூ. டீகிளாக் அவர்களுக்கும் ஒரு இலங்கைப் பிரசையின் கடிதம்

(ஐலண்ட் – 03. 04. 1994)

**இக் கடிதம் எழுதுபவர் தென் ஆபிரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட ஓர் இலங்கைப் பிரசை. நடக்கவிருக்கும் தேர்தலில் கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள் வெற்றியீட்டுவார் என்றும் அதன் பின்பு இரு இனமும் ஒன்று சேர்ந்து வாழ முடியுமா என ஆய்வு நோக்குடன் இருவருக்கும் எழுதியது. இக் கடிதம் பலவின மக்கள் வாழும் நாடுகளில் எப்படி ஒற்றுமை இன்றி பிரிவினை ஏற்படுகின்றது என்பது எல்லா நாட்டு மக்களுக்கும் எடுத்துக்காட்டுகின்றது.**

*நெல்சன் மண்டேலா அவர்கள்,*
*தலைவர்,*
*ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்,*
*தென் ஆபிரிக்கா.*

*இணைக்கப்பட்டிருக்கும் ஆவணம் திரு. எவ். டபிள்யு. டீ. கிளாக் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியாகும். அது தன்னையே விளங்கிக்கொள்ளும். இந்த யோசனையை நீங்கள் ஏற்று தென் ஆபிரிக்காவைப் பிரித்து உங்களுடைய செல்வாக்கைப் பிரயோகித்து திரு. கிளாக் அவர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அல்லாவிட்டால் கறுப்பு இன மக்கள் எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லாமற் போய்விடும். ஏப்பிரலில் நடக்கவிருக்கும் தேர்தலில் நீங்கள் அதிக பெரும்பான்மையுடன் சந்தேகமில்லாமல் வெற்றியீட்டுவீர்கள். அதன் பின்பு என்ன செய்வீர்கள்? வெள்ளையர்கள் தேர்தலில் தோல்வியை ஏற்று கறுப்பு இனப் பெரும்பான்மை மக்களுடைய ஆட்சியின் கீழ் இருக்க உடன்படுவார்களென்று நம்புகிறீர்களா? பயப்படத் தேவையில்லை.*

புதினப் பத்திரிகைகள் அடிக்கடி தெரிவிப்பதைப்போல அவர்கள் போருக்குத் தயாராகிறார்கள். இராணுவ நிலையங்களி

லிருந்து பெரிய அளவில் ஆயுதங்களைக் களவாடுகிறார்கள் என்பது பீதியை ஊட்டுகிறது. இவை எதற்காக? கறுப்பர்களைக் கொலலுவதற்காகும். வெளிப்படையாக அதிகாரத்திலுள்ளவர்களின் அனுசரணையுடனேயே இவை களவாடப்படுகின்றன. ஒரு யுத்தம் நடந்தால் ஆயுதப் படையினரும் காவற்துறையினரும் வெள்ளையரின் பக்கமே சாருவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் அவர்கள் எல்லோரும் வெள்ளையர்களே. சிலவேளை கறுப்பர்களை முற்றாகவே அழித்துவிடுவார்கள். கறுப்பர்களுக்கு தலைவர் இல்லாமற் போகும்படி சிலவேளை உங்களைத்தான் முதலில் கொன்றுவிடுவார்கள்.

ஒரு தேர்தலில் வெற்றிபெற்றால் அடுத்த பகுதியினர் தோல்வியை ஏற்றுக்கொண்டு கறுப்பர்களின் ஆட்சிக்கு உட்படுவார்கள் எனக் கருதமுடியாது. அங்கோலாவில் என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். எதிர் எதிரான இரண்டு கட்சிகளும் உடன்பட்டு தேர்தலை நடத்தியபின் அரசாங்கக் கட்சியே வெற்றியீட்டியது. யுனிட்டா புரட்சியாளரின் தலைவர் பிரிந்து சென்று யுத்தத்தை திரும்பவும் ஆரம்பித்தார். அது இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொரு நாளும் கொல்லப்படுகிறார்கள். இது கறுப்பர்களிடையிலேயே நடைபெறுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் புதினப் பத்திரிகையின் கட்டுரைப்படி நீங்கள் உங்களுடைய கரந்தடிப் படையினரை வெளிக்கொணரப் போவதாகக் கூறுகிறீர்கள். உங்களுடைய கரந்தடிப்படையினர் சிலவேளை ஈட்டி, வாள், தடிகளுடனும், உரமான நெஞ்சமும் கொண்டவர்களாகவிருப்பார்கள். ஆனால் வெள்ளையர்களோ பெருமளவில் அழிவை ஏற்படுத்தக்கூடிய நவீன ஆயுதங்களை வைத்திருப்பார்கள். நெஞ்சுரமும் துப்பாக்கிக் குண்டுகளை நிறுத்தாது. பயனில் நாட்டமுள்ளவராயிருங்கள். உங்களுடைய மக்களைப் படுகொலை செய்ய அனுமதிக்காதீர்கள்.

ஐக்கிய நாட்டுச்சபை நிச்சயமாகத் தலையிடாது என்பதை நம்புங்கள். அமெரிக்காவும் மற்ற வெள்ளையர் இன நாடுகளும் ஐக்கிய நாட்டுச்சபை உங்களுக்கு உதவியாக வருவதை அனுமதிக்கமாட்டார்கள். பெரும் அழிவு ஆரம்பித்தாலும் அமைதிப்படைகளையும் அனுப்பமாட்டார்கள். அப்படி அனுப்பப்பட்டாலும் எவ்வளவு காலத்திற்கு அவர்கள் தங்கியிருப்பார்கள்?

ஏப்ரிலில் நடக்கவிருக்கும் தேர்தலை ஒத்திவைத்து, கறுப்பர்களும் வெள்ளையர்களும் தங்களுடைய தாய் நாட்டில் வருங்

காலத்தில் சமாதானமாக இருக்கக்கூடியவகையில் தென்னாபிரிக்காவை எப்படிப் பிரிக்கலாம் என்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துங்கள்.

மேன்மை தங்கிய எவ். டபிள்யு. டீ கிளாக் அவர்கள்,

சனாதிபதி,

தென் ஆபிரிக்க குடியரசு.

நான் ஒரு இலங்கைப் பிரசை — கறுப்பு இனத்தவர். நாங்கள் தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கீட்டு முறையை வெறுத்து வந்தவர்கள். இன ஒதுக்கீட்டுமுறையை ஒழிப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் வெகுவாகப் பாராட்டத்தக்கவை. வெள்ளை இன மக்களிடமிருந்து வரும் மிகப்பெரிய எதிர்ப்போடு போராடுபவர் நீங்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்காக 1992ஆம் ஆண்டில் பொதுமக்கள் வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். அதற்குப் பெரிய அளவிலான ஒத்துழைப்பை பெற்றீர்கள். அதன்மூலம் நீங்கள் ஒரு அரசியல்வாதியல்ல, அரசியல் மேதை என்பதை நிரூபித்துவிட்டீர்கள். ஒரு அரசியல் மேதை அடுத்த சந்ததியைப் பற்றிச் சிந்திப்பவர் என்றும் ஆனால் ஒரு அரசியல்வாதியோ அடுத்து வரும் தேர்தல்களைப்பற்றி ஆலோசிப்பவர் என்றும் கூறுவார்கள். உலகத்தில் இந்த நூற்றாண்டின் ஒரேயொரு உலக அரசியல் மேதையாகவல்ல, மிகப்பெரிய அரசியல் மேதையாக நீங்கள்தான் இருப்பீர்கள்.

கறுப்பர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் சமசந்தர்ப்பமளிக்கும் மாற்றங்களுக்கு உங்களுடைய தேசத்திலுள்ள வெள்ளை இனத்தவர்களிடமிருந்து பயங்கரமான எதிர்ப்புகள் வருமென்பதை நாங்கள் அறிவோம். கறுப்பர்களுக்குச் சம உரிமை வழங்கினால் வெள்ளையர்கள் உள்நாட்டு யுத்தத்திற்கு ஆயத்தமாவர்களெனப் புதினப்பத்திரிகைகளின்மூலம் அறிகிறோம். இதனால் முன்னம் ஒரு போதும் கண்டிராத இரத்தக்களரி ஏற்படும்.

சம வாக்குரிமை மூலம் கறுப்பர்கள் அதிகாரத்திற்கு வந்தால் எவ்வளவுதான் இன ஒதுக்கீட்டை வெறுத்தாலும் வெள்ளையர்கள் எவ்வளவு தூரத்திற்குப் பயப்படுவார்களென்பதை நாங்கள் உணருகிறோம். பெரும்பான்மையினரான கறுப்பர்கள் இப்போது இருப்பதுபோல இரண்டாம் தரப் பிரசைகளாய் அவர்களும் இருப்பார்கள்.

வெள்ளையரின் கருத்துப்படி இந்த பிரச்சனையை நோக்குவோம். வெள்ளையர்கள் தென் ஆபிரிக்காவுக்கு இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வந்தவர்கள். உண்மையில் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். அவர்களுக்கு அங்கே உரிமை ஒன்றுமில்லை என்பது உண்மை வலிமைக்கே உரிமை என்ற வழக்கப்படி அந் நாட்டு இனத்தவரின் எதிர்ப்பை அடக்கி தென்னாபிரிக்காவில் குடியேறினார்கள். வெள்ளையர்கள் குடியேறியபோது ஆபிரிக்காவின் எஞ்சிய பகுதிகளைப் போல பழங்குடிசார்ந்த இனக் குழுக்களும் காட்டு மிருகங்கள், யானைகள், சிங்கங்கள், பூனை இனத்தை சார்ந்த ஊனுண்ணி விலங்குகள், ஆபிரிக்க வாலில்லாக் குரங்குகளும் சுற்றித் திரிந்த காடுகளாகத் தென்னாபிரிக்கா இருந் திருக்கும் வெள்ளையர்களே அந்த தேசத்தை இப்போதிருக்கும் நவீன நாகரீக அரசாக்கினார்கள். (நாங்கள் இன ஒதுக்கீட்டு முறையை முற்றிலுமாக எதிர்த்தாலும்) எங்களுடைய மறுக்க முடியாத சொந்த கருத்தின்படி ஒரு நூற்றாண்டுக்கு மேலாக கடுமையான உழைப்பினாலும் தியாகத்தினாலும் தென்னாபிரிக்காவை இப்போதிருக்கும் நிலைக்கு அபிவிருத்தி செய்த வெள்ளையர்களை இரண்டாம்தரப் பிரசைகளாக்குவது அவர்களுக்குச் செய்யும் அநீதியாகும். சம வாக்குரிமை அடிப்படையில் கறுப்பர்கள் அதிகாரத்திற்கு வந்தால் எதிர்பாராத இரத்தக்களரியும் படுகொலைகளும் நிச்சயமாகப் பின்தொடரும். சமவாக்குரிமை எல்லோருக்கும் இருக்க வேண்டும். கறுப்பர்களுக்கும் வெள்ளையருக்கும் பெரிய அளவிலான படுகொலைகளும் இரத்தக்களரியும் ஏற்படாமல் எப்படி நியாயம் வழங்க முடியும். இதனை அடுத்துத்தான் என்னுடைய கருத்தை தங்களின் அக்கறையுள்ள பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறேன்.

ஒரு பகுதி கறுப்பர்களுக்கும் மற்றப்பகுதியை வெள்ளையர்களுக்குமாகத் தென்னாபிரிக்கா இருநாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் என்னுடைய கருத்தை தெரிவிக்கிறேன். இது வடக்குத் தெற்குப் பக்கமாகவும் அல்லது கிழக்கு மேற்காகவும் இருக்கலாம். கூடிய அளவில் புவியியல் எல்லைகளைப் பாவித்து வடக்குத் தெற்காக ஒரு நேர்க்கோட்டமைப்பில் இணை தொலைவுக் கோட்டிற்கு சமமாகவோ அல்லது கிழக்கு மேற்காகப் பிரிந்து விரிவகலக் கோட்டுக்கமைய (வட, தென் கொரியா) வையும் போல வட, தென் வியட்நாமையும் போல அமைக்க முடியும். ஒரு தேசத்தைப் பிரிப்பது என்றால் சிலர் புனிதத் தன்மையான பேரச்சங் கொண்டு கைகளை மேலே உயர்த்துவார்கள். இவைகளில் முற்போக்கானதும் மிக வெற்றிகரமானதும் இந்திய பாகிஸ்தான் பிரிவினையாகும். பிரிட்டிசார் இந்தியாவை

விட்டு வெளியேறு முன்பு இந்தியாவை பிரித்து விட்டுச் சென்றது மிகவும் நல்ல செயலாகும். பிரிக்கப்படுமுன்பு பிரிட்டிசாரின் ஆட்சியிலும் இந்துக்களுக்கும் முசிலிம்களுக்கும்மிடையே இடைவிடாத இனப்பூசல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இதனால் பல உயிர்கள் பலியாகி பெரிய அளவிலான சொத்துக்களும் அழிந்தன. இந்தியாவைப் பிரிக்காவிட்டால் இந்த சர்ச்சை நீடிக்குமென்பதைப் பிரிட்டிசார் உணர்ந்தார்கள். பிரிக்கப்பட்ட பின்பு இந்தியாவில் அல்லது பாகிஸ்தானில் பெரிய அளவிலான மோதல்கள் ஏற்படவில்லை. பின்பு பாகிஸ்தானும் பங்களா தேசமாக பாகிஸ்தான் பிரிந்தது. ஐரோப்பாவில் கிழக்குசேர்மனியும் மேற்கு சேர்மனியும் பிரிந்தது ஒரு கோட்பாட்டின் அடிப்படையினாற்தான். பின்னர் அவை ஒன்றாகி விட்டன. இப்பொழுது செக்கோசுலோவாக்கியா இரண்டாகப் பிரிந்து விட்டது. அங்கு சமாதானம் நிலவுகிறது. ஆனபடியால் நீங்கள் இதைப் பரிசீலித்து மற்ற கட்சிகளுடன் விவாதித்து பிரிவினையை ஏற்படுத்தினால் எக்காலமும் சமாதானம் நிலவும். இந்தக் கருத்தை நீங்கள் விளம்பரம் செய்து பொது மக்களின் வாக்கெடுப்பிற்கும் விடலாம். மேலே கூறப்பட்ட கருத்தின்படி தென்னாபிரிக்காவை இரண்டு அரசுகளாகப் பிரித்தால் வெள்ளையர்களை, வெள்ளையர்களுடைய புது அரசிற்குமாற்றி கறுப்பர்களையும் புது கறுப்பர்களுடைய அரசிற்கு மாற்ற வேண்டி வரும் இது ஒரு தன்னிருப்பஞ்சார்ந்த செயலடிப்படையில் செயற்படுத்தலாம். வெள்ளையர்கள் யாராவது கறுப்பர்களின் அரசிலிருக்க விரும்பினால் அவர்களின் விருப்பப்படி செய்யலாம். கறுப்பர்களும் அப்படியே செய்யலாம்.

இடம் பெயர்வினால் தங்களுடைய மரபார்ந்த வீடு சூழ் பண்ணைகளையும் நிலங்களையும் பெரும் தொழிற்சாலைகளையும் உடைமைகளையும் விட்டுச் செல்பவர்களுக்கு புது அரசில் புது நிலங்களும் இழப்பிற்கேற்ப போதிய அளவு நட்ட ஈடும், அவர்கள் புது வீடுகளை நிர்மாணிக்க உதவியும் பண்ணை நிலங்களும் கொடுக்க வேண்டும். இவற்றுக்கு பெரும் தொகையான நிதி தேவைப்படும். தென் ஆபிரிக்க அரசாங்கம் அவ்வளவு நிதியையும் வழங்க முடியாது. ஆனபடியால் ஐக்கிய நாட்டுச் சபை தென் ஆப்ரிக்காவுக்கு உதவுவதற்கான உலகளாவிய நிதியை ஆரம்பித்து தென் ஆபிரிக்காவின் பொறுப்புக்களை நிறைவேற்ற உதவ வேண்டும். பல தேசங்களும் மக்களும் இந்தச் சிக்கலானதும் நிறைவேற்றக் கடினமானதுமான பொறுப்புக்களைத் தீர்த்து வைக்க பங்களிப்புச் செய்வார்கள் என்பது திண்ணம். அது பெரிய அளவிலான கொலைகளைத்தடுத்து விடும். எல்லாவற்

றிலும் மேலாக உலகளாவிய யுத்தங்களையும் உள்நாட்டுப் போர்களையும் தடுப்பதற்காகவே ஐக்கிய நாட்டுச்சபை இருக்கிறது.

ஒரு மூத்த இலங்கைப் பிரசை

பிரதி 1. நெல்சன் மண்டேலா தலைவர் ஆபிரிக்க தேசியக் காங்கிரசு.

2. அருட் திரு. அதிமேற்றிராணியார் தெசுமந்து டுட்டு.

3. கலாநிதி பூட்றோஸ், பூட்றோஸ் காலி பொதுச் செயலர்ள்ளர் ஐக்கிய நாட்டுச்சபை.

# ஜே. ஆரைப் பழிவாங்க சிறிமா திட்டம்

தாம் பதவிக்கு வந்ததும் இலஞ்ச ஊழல் விசாரணைக் கொமிஷன் அமைக்கப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறிவருகின்றது. சிற்றூழியர் தொடக்கம் உயர் அரசியல்வாதிகள் வரை இக் கொமிஷன் முன் விசாரணைக்கு நிறுத்தப்படுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான கொமிஷன் அமைக்கப்படப் போவதன் உள்நோக்கம் உள்ளங்கை நெல்லிக் கனிபோற் தெளிவானது. ஜே.ஆர். பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து சிறிமாவோ பண்டாரநாயக்கா வினது சிவில் உரிமையைப் பறித்தமைக்காக ஜே.ஆரையும் அவரது முக்கிய சகாக்களையும் பழிக்குப்பழி வாங்குவதற்காகவே இத்தகைய விசாரணைக் கொமிஷன் அமைக்கப்படவுள்ளது.

ஜே.ஆரும் அவரது முக்கிய சகாக்களும் இதில் முன்னிறுத்தப் படலாம். ஜே.ஆர் அவரது மகன் ரவி ஜெயவர்த்தனா, காமினி திஸநாயக்க, டி. பி. விஜதுங்கா, றொனிடீமெல், கேமா பிறேம தாஸா இன்னும் பல உள்ளூர் அரசியல் முக்கியஸ்தர்கள் இதில் அடங்கலாம்.

ஜே. ஆர். மீது மகாவலி அபிவிருத்தி நிதி மோசடி பிரதான குற்றச்சாட்டாகச் சுமத்தபடக் கூடும். இந்த ஊழல் உலகறிந்த உண்மை. இதனை நிரூபிப்பது சுலபம்.

# இன்றைய வியட்நாம்

— சி. ரி. சூரியன்
(புரொன்ட்லைன்)

**இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு ஆசியாவிலும், உலகத்திலும் மிகவும் கூடுதலாகப் பேசப்பட்டு வந்த நாடு வியட்நாமாகும். பிரான்சு நாட்டின் காலனித்துவ ஆட்சிக் கெதிராக வியட்நாம் மக்கள் நடத்திய போராட்டம், ஏற்கனவே தன்பால் கவனத்தை' ஈர்த்துவைத்திருந்த ஹோசிமின் அவர்களின் தலைமையில் வட வியட்நாமில் ஒரு புரட்சிகர ஆட்சியை அமைப்பதில் முடிவுற்றது.**

பின்னர் அமெரிக்காவுடனான போர் ஆரம்பமானது சுதந்திர உலகின் வீரன் எனத் தன்னை நினைத்துக் கொண்ட அமெரிக்கா தனது பயணத்தில் சிறிய நாடான வியட்நாமை நசுக்கிவிடலாமென எண்ணியது. ஆனால் 1960 - ஆம் ஆண்டுகளிலும், 1970 - ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரையும் நடந்த போரில், உலகத்தின் பெரிய வலிமை மிக்க இராணுவ சக்திக் கெதிராக வீரபுருஷர்களான வியட்நாம் மக்கள் போராடி, எதிரியை வெளியேறச் செய்து நாட்டின் வடபகுதியையும், தென் பகுதியையும் இணைத்துச் சமதர்ம வியட்நாம் குடியரசொன்றை நிறுவினர். பின்னர் ஆசியாவில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், முக்கியமாகச் சீனாவில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் வியட்நாமிலிருந்த கவனத்தை வேறுபக்கம் திருப்பின.

ஆனால் தற்போது ஒரு சமதர்ம நாடு கூடுதலான வெளிநாட்டு, தனியார் முதலீடுகளுடன் தன்னைக் கைத்தொழில் நவீனமயமாக்கி, சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டு விரைவாக முன்னேறிவர முனைகின்றது என வியட்நாம் பற்றிய செய்திகள் மீண்டும் வரத் தொடங்கியுள்ளன. 1986 - ஆம் ஆண்டில் கொபர்சேவ் அவர்கள் ''பெரஸ் ரோய்க்கா'' வைத் தனது நாட்டில் அறிமுகப்படுத்தியதிற்குப் பின்னர், சோவியத்யூனியனுடனான நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த வியட்நாம் தனது பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் ஒரு திட்டத்தை ஆரம்பித்தது.

## வெளிநாட்டு மூலதனம்

வெளிநாட்டு மூலதனம் இந்த நடைமுறை ஆரம்பத்தில் மிக மெதுவாகவும், கவனமாகவும் கையாளப்பட்டது. 1989ஆம் ஆண்டிலும் 1990ஆம் ஆண்டிலும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட சமதர்ம அரசுகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, வியட்நாமியப் பொதுவுடமைக்கட்சி விவசாயத்துறையிலும், உள்நாட்டு வர்த்தகத்துறையிலும் மாற்றங்களைக்கொண்டு வந்து அதைத் துரிதப்படுத்தத் தொடங்கியது. கடந்த இரண்டாண்டுகளாக வெளிநாட்டு மூலதனங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சியில் அழுத்தங் கொடுத்ததைத் தொடர்ந்து வெளிநாட்டு மூலதனங்கள் ஜப்பான், தாய்வான், தென் – கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வரத்தொடங்கியதோடு, கூட்டாக இணைந்து செயற்படும் பல நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்டன. வியட்நாமின் மனநிலை, விசேடமாகத் தலைநகர் ஹனோயின் மனநிலை பரபரப்பாகவும், தடுமாற்றமாகவும், விரைவாகவும் இருந்தது.

ஒருவர் ஹனோயிலுள்ள அனைத்துலக வானூர்தி நிலையத்தில் இறங்கி, அந்த வானூர்தி நிலையத்திலுள்ள கட்டிடத்திற்குள் கால்வைக்கும்போது அவர் ஒரு நாட்டின் தலைநகரை அடைந்துள்ளார் என்ற மனோநிலை ஏற்படமாட்டாது. வானூர்தி நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளெங்கும் வயல்களே காணப்பட்டன. நான் டிசம்பர் மாதத்தின் மத்தியில் அங்கு சென்ற வேளை அப்போதுதான் அறுவடை முடிந்திருந்தது. வானூர்தி இறங்குதுறையில் இருந்து கட்டிடம் விசித்திரமாகவிருந்தது. நீளமான கரையோரங்களாலும், ஏறி இறங்குபடிகளாலும் சென்று குடியகல்வு, குடிவரவுத்திணைக்களகத்தினது வழமையான சோதனைகள் முடிந்த பின்னரே அக் கட்டிடத்தில் பெரியமண்டபத்துள் செல்ல முடிகிறது. அந்த மண்டபம் குளிரூட்டப்பட்டதல்ல. அத்துடன் அங்குள்ள தளபாடங்கள் அனைத்தும் சாதாரணமானவையாகக் காணப்பட்டன. அங்குள்ள பணியாளர்கள் சிநேகபூர்வமாகக் காணப்பட்டாலும்,நாங்கள் சென்ற வரிசை மெதுவாகவே நகர்ந்தது. சுங்கப் பரிசோதனைகள் முடிந்து ,கட்டிடத்திலிருந்து வெளியே வந்தால், அதன் முன்னாலிருக்கும் பூங்காவில் ஒரு சில வாகனங்களே காணப்பட்டன. சமூக அறிவியல் தேச நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் என்னை வரவேற்று, தலைநகருக்குச் செல்வதற்கான வாகனத்திற்கு அழைத்துச் சென்றனர் அங்கிருந்து தலைநகரைச் சென்றடைய ஒருமணிநேரம் எடுத்தது. அந்தக் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக எனக்கு முன்னர் வானூர்தி நிலையத்தை வந்தடைந்தவர்களும் அந்த வாகனத்திற்குள் காணப்பட்டனர்.

## நகர அமைப்பு

இருமருங்கிலும் வயல்கள் நிரம்பிய தெருவூடாகவே நாங்கள் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அதிகமான இடங்களில் தெருவில் திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அந்தத் தெருவூடாக அநேகமான வாகனங்களும், பேருந்துகளும், தனிப்பட்டவர்களின் வாகனங்களும், இரு சக்கர வண்டிகளும், ஈருருளிகளும் சென்றுகொண்டிருந்தன. நகரத்தை அண்டிய பகுதிக்குச் சென்றபோது தெருவோரங்களில் கடைகளையும், பெரிய அளவிலான கட்டிட நிர்மாண வேலைகள் நடைபெறுவதையும் காணக்கூடியதாகவிருந்தது.

நகரத்தை அடைந்தபோது அங்கெல்லாம் அதிகமான மக்களையும் மூன்று சக்கரரிக்சாக்களையும், அதிகமான மோட்டார் வாகனங்களையும் காணக்கூடியதாகவிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஹனோய் நகருக்கு வந்திருந்த ஒருவர், தான் முன்பு வந்தபோது சில மோட்டார் வாகனங்களையும், மிகச் சொற்ப அளவிலான இரு சக்கர வண்டிகளையுமே காணக்கூடியதாகவிருந்ததாகவும், நகரம் இப்போது பெருமளவு மாறிவிட்டது எனவும் கூறினார். தனது பயணத்தின்பின் 1975-ஆம் ஆண்டு பேராசிரியர் கே.என். ராஜ் அவர்கள் எழுதிய "ஹனோய்க் குறிப்பு" என்னும் நூலில் நான் வாசித்ததைவிட வேறெவ்விதத்திலும் நான் அவைகளை ஒப்பிடமுடியாதிருந்தேன். அதில் இப்படி கூறப்பட்டிருந்தது.

" நாங்கள் அனைவரும் நகரத்தை அடைந்ததும் நான் சிறிது அதிர்ச்சியுற்றேன். உண்மையில் அது எந்தவிதத்திலும் ஒரு நகரம்போன்று தோன்றவில்லை. தெருக்கள், கடைகள், வீடுகள் மற்றும் தெருவின்'இரு மருங்கிலும்நான் பார்த்தவையெல்லாம் இந்தியாவிலுள்ள ஒரு சிறிய நகரத்தை எனக்கு நினைவூட்டியது. ஆனால் அவை கவரும் வகையில் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒரு குளத்தினருகே ஏராளமான சிறிய குடிசைகளும், குடில்களும் ஒன்றாகப் பக்கத்திற்குப் பக்கம் காணப்பட்டன. அங்கு காளைகள் இழுக்கும் வண்டிகள் கூடக் காணப்பட்டன. இரண்டு பெண்கள் சாக்குகள் நிறைந்த ஒரு வண்டியைத் தள்ளிக்கொண்டுவந்தனர். எங்களுக்குத் தெரிந்த நவீனமாக்கல்படி பார்த்தபோது ஹனோய்நகரம் எவ்வளவோ பின்தங்கிய நகரமாகவே காணப்பட்டது.

## இன்றைய மாற்றம்

அன்றிலிருந்து இன்றுஎவ்வளவோ மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் 20 இலட்சத்துக்குக் கிட்டத்தட்ட எண்ணிற்கையான

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

மக்களைக் கொண்ட ஹனோய் நகரம் இந்தியாவிலுள்ள ஒரு சிறிய நகரத்தின் நல்ல பண்புகளைக் கொண்டதாகவே இன்னமும் இருந்து வருகின்றது. முக்கியமாக அங்குள்ள தெருக்களில் சில மோட்டார் வாகனங்களே காணப்படுகின்றன. தனியியல்பும், மகிழ்ச்சியும், தனிப்பண்பும் கொண்ட ஒரு பாரம்பரியமான சமுதாயமும், நிழலையும் குளிர்ச்சியைத் தரும் பெரும் மரங்களைக் கொண்ட விசாலமான சதுக்கங்களும் அங்கு காணப்படுகின்றன. ஆனால் ஹனோய் நவீனமயமாகி வருகின்றது. தெருக்களிலெல்லாம் ஹொண்டா உந்துருளிகளும். ஒரு நாளைக்கு ஒரு அறைக்கு 200 அமெரிக்க டொலர்கள் வசூலிக்கும் மெற்றோ போல், சைக்கோன் ஆகிய தங்குமிடங்களும், வியட்நாமிய, ஆசிய, மேற்கத்தைய உணவுவகைகளைப் பரிமாறும் சாப்பாட்டுக் கடைகளும்,(இந்திய உணவுப்பரிமாறும் ஒருகடைதானும் இல்லை) எல்லாவிதமான பாவனைப் பொருட்களை விற்கும் பல கடைகளும், அனைத்துலக வானூர்திச் சேவை அலுவலகங்களும் அங்கு காணப்படுகின்றன. இளைஞர்களும், யுவதிகளும், மேற்கத்தைய பாணியிலான உடைகளை அணிந்தவாறு செல்கின்றார்கள் அங்கு புதியதும், பழையதும் பாரம்பரியமும், நவீனமயமும் கலந்த ஒரு வாழ்க்கைமுறை காணப்படுகின்றது.

நகரத்தின் மத்தியில் கடக் கோழி கூவுவதைக் கேட்டு காலையில் எழக் கூடியதாகவுள்ளது. நாள் முழுவதும் குறிப்பிடத்தக்கதாகக் காலை வேளைகளில் பாரம்பரிய வியட்நாமிய ஆடைகளை அணிந்த பெண்கள் ஒரு மூங்கிலின் இரு மருங்கிலும் இரண்டு உடைகளைப் பிணைத்தவாறு அதில் மரக்கறிவகைகளை நிரப்பிக் கொண்டு தங்கள் தோள்களில் சுமந்தவாறு நகர் நோக்கி விரைவதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஜப்பானிய ஹொண்டா உந்துருளிகளில் வரும் இளம் பெண்கள் இவர்களது வாடிக்கையாளர்களாக இருக்கின்றார்கள். பெரிய தங்குமிடங்களுக்கு வெளியே மூன்று சக்கர ரிச்சா வண்டிகளே வாடைக்குக் காணப்படுகின்றன. நிச்சயமான அப்படியான பண்புகள் எங்களது நகரங்களில் காணப்பட்டாலும் நாம் அதைக் கவனிப்பதில்லை. பாரம்பரியமான முறைகளும், நவீன முறைகளும் இணைந்து காணப்படுவது ஹனோயில் கூடக் காணப்பட்டது அதிர்ச்சியைத் தந்தது.

பாரம்பரியமான வியட்நாம் சமுதாயத்தின் பலவிதமான பண்புகளைச் சித்தரிக்கும் தனித்துவமான நீரிலாடும் பொம்மலாட்டம் நகரத்தில் மிகவும் கவர்சியானதாகும். இது வெளிநாட்டவர்களை மிகவும் வெகுவாகக் கவருகின்றது. நிட்சயமாக அப்பொம்மலாட்டம் கூடிய திறமையுடன் அமைக்கப்பட்ட

தோடு கலையம்சமும் பொருந்தியதுமாகும். ஆனால் அந்த ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கூட்டத்தைக் கவருவதற்கும், ஏற்கனவே மண்டபத்தில் உள்ளோரை மகிழ்சியுறச் செய்வதற்கும் இசைக்கப்படும் இசை, போனியில் பாபிலோன் நதியால் என்பதைப்போன்று இனிமையாகவிருக்கும். என்ன காரணமோ தெரியாது இந்தப் பாடல் நகரில் எல்லாப் பகுதிகளிலும் வெவ்வெறு நேரங்களில் கேட்டுக்கொண்டேயிருந்தது. சந்தேகமில்லாமல் இது எதையும் ஆரம்பிக்கும்போது ஒலிக்கப்படும் பாடலாக இருக்க வேண்டும்.

## தொழில்கள்

முன்பிருந்த சீர்திருத்த நடவடிக்கைகளும், இப்போதிருந்து வரும் நடவடிக்கைகளும் வியட்நாமிய மக்களின் அன்றாட வாழ்கையில் குறிப்பிடத்தக்களவு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. ஏழு கோடி மக்களைக் கொண்ட ஐக்கியப் பட்ட வியட்நாம் ஒரு விவசாயநாடாகும். மூன்று கோடி தொழிலாளர்களில் இரண்டு கோடியே இருபது இலட்சம் தொழிலாளர்கள் விவசாயத்துறையிலும் 34 இலட்சம் பேர் கைத்தொழில் துறையிலும், 17 இலட்சம் பேர் வர்த்தகத்துறையிலும் ஈடுபட்டுள்ளனர். கூட்டுறவுத் துறை, விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள ஒருகோடியே அறுபதுஇலட்சம் தொழிலாளர்கள் கூட்டுறவுத்துறையைச் சார்ந்தவர்களாவர். மிகுதியாகவுள்ளவர்களில் 58 இலட்சம் பேர் தனியார்துறையச் சேர்ந்தவர்கள். இன்னும் மிகுதியாகவுள்ளவர்கள் அரசாங்கத்துறையைச் சேர்ந்தவர்களாவர். 34 இலட்சம் பேர் கைத்தொழில்துறையைச் சார்ந்தவர்கள். இக் கைத்தொழில்துறையைச் சார்ந்தவர்களில் 16 இலட்சம் பேர் தனியார் கைத்தொழில்துறையிலும். வர்த்தகத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர். (10 இலட்சம் பேர் கூட்டுறவுத் துறையிலும் ஏனையோர் அரசதுறையிலும் பணியாற்றி வருகின்றனர்.) வர்த்தகத்துறையைச் சார்ந்த 13 இலட்சம் பேரில் 03 இலட்சம் பேர் அரசதுறையில் ஒரு இலட்சம் பேர்கூட்டுறவுத் துறையிலும் பணியாற்றி வருகின்றனர்.

நடைமுறையிலுள்ள சந்தைப்படுத்தும் வழிமுறை மேலும் பலரும் விரும்பி பகுதி நேரங்களில் வர்த்தகம் செய்யும் வகையில் மாற்றப்படவேண்டியது அவசியமாகும். அரிசி, மளிகைப் பொருட்கள், ஆடைகள் உட்பட அனைத்தும் நேரடியாக விநியோகிப்பதும், பங்கீட்டுமுறையில் அளிப்பதும் நிறுத்தப்பட்டு அதை வாங்குவதனால் அதை வாங்குவதற்கு ஒருவர் விற்பனை செய்யவும் இருக்கவேண்டும். ஆகவே அதனால் அங்கு பட்டிண

களில் காணப்படுவது போன்ற வர்த்தக நடைமுறைகள் புத்துயிர் பெற முடியும். தலைநகரான ஹனோயிலுங் கூட சில தெருக்கள் காலை முதல் மாலைவரை சுறுசுறுப்பாக இயங்கும் சந்தையைக் கொண்டதாக மாற்றியமைக்கப்படவேண்டும்.

## வியாபாரப் பண்டங்கள்

இங்கு விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்கள் தங்களால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள், பழவகைகள், அரிசி, மரவள்ளிக்கிழங்கு உணவு வகைகளான வீடுகளில் தயாரிக்கப்பட்ட நூடில்ஸ், ரொட்டிகள், இறைச்சி வகைகள், முட்டைகள், கோழிகள், மட்பாண்டங்கள், கடைகள், தும்புத்தடிகள், துடைப்பான்கள் மற்றும் வீட்டுத்தளபாடங்கள், இயற்கையான, செயற்கையான மலர்வகைகள், ஆணிகள், திருகாணிகள், கயிறுவகைகள் மற்றும் பலவிதமான பொருட்களையும் கொண்டு வந்து விற்பனை செய்கின்றார்கள். விலைகள் அங்குள்ள பொருட்களுக்கும், கேள்விக்கும் ஏற்றவாறு நிர்ணயிக்கப்படுவதோடு பேரம் பேசுவதில் அதிகளவு சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் நாள் முடிவில் தங்களைச் சுற்றிவரவுள்ள கடைகளில் ஏராளமான வாழைப்பழங்களை வைத்திருக்கும் முதிய பெண்கள் போவோரையும், வருவோரையும் அதை வாங்குமாறு கெஞ்சிக் கேட்பது கவலைக்குரிய காட்சியாக இருக்கும்.

நீண்ட வரிசையில் தெருவோரங்களில் இருக்கும் கடைகளில் தைக்கப்பட்ட ஆடைகள், துண்டுத்துணிகள், காலுறைகள், தொப்பிகள், கழுத்துக் கச்சைகள், பலவிதமான விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அவைகளில் அநேகமானவை தென் — கொரியாவிலிருந்தும், தாய்வானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டனவாகும். கள்ளத்தனமாக கடத்தப்பட்டு வந்த பொருட்களும் அங்கு காணப்படுகின்றன. வியட்நாம் மக்களைத் தவிர இங்கு வருகை தரும் ஏராளமான உல்லாசப் பயணிகளும் இந்தக் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குகின்றார்கள். கொடுக்கல் வாங்கல்முறை வழமையானதாகவுள்ளது. அரச கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே பொருட்கள் விற்கப்படுகின்றது.

அங்கு மொழியினால் எவ்வித பிரச்சனையும் இல்லை கொடுக்கல் வாங்கலில் விற்பனை செய்பவர் ஒரு பொருளின் விலையை ஒரு துண்டில் எழுதுவார், வாங்குபவர் தனது கேள்வியை அதன்

பக்கத்திலே அல்லது அதன் கீழேயே குறிப்பிடுவார். இப்படியாக இருவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விலை வரைகேட்கலாம் பேரம் ஒத்துப்போகவில்லையெனில் வாங்குபவர் சென்றுவிட வேண்டியதுதான் அங்குள்ள கொடுக்கல் வாங்கலில் அமெரிக்க டாலரும், வியட்நாம் பணமும் ஏற்றுக்கொள்ளப்படுவதால் எதுவித பிரச்சனையும் எழுவதில்லை. தெருவோரக் கடைக்காரர்கள் கூட இரண்டு காசுகளையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு டாலர் 10.000 டொங்குகளுக்கு கூடவானாலும், இலகுவாகக் கணக்கிடக் கூடியவகையில் அது 10.000 டொங்காகவே கணக்கிடப்படுகின்றது.

டாக்டர் ராஜ் அவர்கள் 1975 - ஆம் ஆண்டெழுதிய ஹனோய் குறிப்பு என்னும் புத்தகத்தில் அப்போது ஒரு டாலர் மூன்று டொங்காக இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கணக்கிலிருந்து டொங்கின் நாணய மதிப்பு கடந்த 20 வருடங்களில் எவ்வளவுக்குக் குறைந்துள்ளதென்பதை மதிப்பிடக் கூடியதாகவுள்ளது. அது டொங்கு நாணயத்தைக் கொண்டு செல்பவர்கள் பெரிய கட்டுக்கணக்கில் பணத்தையெடுத்துச் செல்லவேண்டியதைக் காட்டுகிறது. டொங்கு நோட்டுக்கள் 5,000, 2,000, 1,000 என்ற கணக்கிலும் 500 டொங் கணக்கிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. ஆனால் அதற்குக் குறைவான நோட்டுக்களைக் காணப்படவில்லை.

## நாணயத்தின் பெறுமதி

இந்தக் கணக்கில் டொங் நாணயம் இருப்பது அதை வாங்குமாறு தூண்டவில்லை. ஒரு தொழிலாளியின் மாதாந்தச் சம்பளம் 3,00,000 (30 டாலர்கள்) டொங் ஆக இருக்கிறது எனக் கூறப்படுகிறது. பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் படிப்பிக்கும் ஆசிரியர்களினதும், அலுவலகங்களிலும் பணியாற்றுவோரினதும் சம்பளம் இதைப்போன்று மூன்று மடங்காகும் அரிசி ஒரு கிலோ 2,500 டொங்காகவும், இறைச்சி 1,800, மீன் 4,500 டொங்காவும் விற்கப்படுகிறது. இவைகளோடு, பெற்றோலின் விலையை ஒப்பிடுகையில், லீற்றர் 3,000டொங்காக விற்கப்படுவது மிகவும் மலிவானதாகும். 20சிகரெட்டுக்கள் கொண்ட 01பைக்கற் உள்நாட்டுத் தயாரிப்பாகவிருந்தால் 5,000 தொடக்கம் 7000 டொங்காகவும், வெளிநாட்டு தயாரிப்பாகவிருந்தால் 12,000 டொங்காகவும் விற்கப்படுகிறது. நாளாந்தம் அணியும் ஒரு சோடி சப்பாத்து 60,000 தொடக்கம் 70,000 டொங்காகவும் சட்டை (சேட்) ஒன்று 50,000 தொடக்கம் 10,0000 டொங்காகவும் விற்கப்படுகிறது. வீட்டுவாடகை

மிகவும் அதிகமாகும். தலைநகர் ஹனோயில் 40 சதுர அடி கொண்டவீடு ஒன்றுக்கு மாதாந்த வாடகையாக 1,00000 டொங்குகள் செலுத்தவேண்டியுள்ளது.

கணவனும், மனைவியும் வேலை செய்து தங்கள் குடும்பத்தை ஒருவாறு கொண்டு நடாத்துகின்றார்கள். சிலவேளைகளில் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகளைச் செய்து வருகின்றனர். தங்களது வழமையான வேலை நேரத்தின் பின்னர், இளம்பெண்களும், ஆண்களும் நடைபாதைகளில் தேனீர்க் கடைகளை நடத்துவதைக் ஹனோயில் பொதுவாக காணமுடிகிறது. குறிப்பிடத்தக்க வகையில் கடந்த சில வருடங்களில் பணவீக்கம் வருடாந்தம் 60 விகிதத்திற்கும் மேலாக அதிகரித்து வருவதாவது, சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களும் மற்றும் அதிகமான மக்களும் அதனால் ஏற்படும் விழுக்காடுகளை எதிர்கொள்ள கூடுதலான நேரத்திற்கு கடினமாகவும் வேலை செய்வதோடு சிலர் தங்களது ஆடைகள் வீட்டுப்பண்டங்கள் ஆகியவற்றை விற்பனை செய்து அதைச்சரிப்படுத்தி கொள்கிறார்கள். 1993-ஆம் ஆண்டு நாணய மதிப்பிறக்கத்தை 10%க்குக் கொண்டு வந்து ஒரு பெரும் சாதனையை அவர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

## பெண்களின் பங்கு

அரசானது சமூகத்தின் பிரதிநிதியாக இருந்து ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் வேறுபட்ட பொறுப்புக்களை கவனித்து வந்த அரசு, நிருவாகப் பெருளாதார முறையிலிருந்து சந்தை விநியோகப் பொருளாதார முறைக்கு மாற்றமடைந்து வருவதில் குடும்பம் அல்லது முழுக் குடும்பமும் பெரும் பங்கை வகிக்க வேண்டி வந்துள்ளது. வியட்நாமில் விவசாயப்பொருளாதார முறையில் முழுக் குடும்பமுமே அடிப்படை உற்பத்தி நிலையமாக இருந்து வந்தது. பெரியளவிலான கூட்டுறவு முறை அமுல்படுத்தப்பட்ட பின்னருங் கூட, முழுக்குடும்பமும் தொடர்ந்து முக்கிய பங்கை வகித்து வருகின்றது. ஆனால் அரசினால் வழங்கப்பட்டு வந்த சமூகப் பாதுகாப்பு விளங்கிக் கொண்ட பின்னர், மாற்றங்கள் கொண்டுவரப்பட ஆரம்பித்ததிலிருந்து முக்கியத்துவம் பெற்று விளங்கும் நாணய மதிப்புக் குறைப்பு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பொருளாதாரப் பேரிடர்களுக்கு எதிரான பாதுகாப்பாக இப்போது முழுக் குடும்பமும் இருந்து வருகின்றது.

முழுக்குடும்பத்துள்ளும் எதையும் சரிப்படுத்திக் கொள்ளும் முழுப்பாரத்தையும் பெண்களே தாங்கிக் கொள்கின்றனர். நீண்

டகாலம் நடைபெற்று வந்த போரில் ஆண்கள் ஈடுபட்டிருந்தபோது பொருளாதாரத்தைக் கொண்டு செல்லும் முக்கிய பங்கை வியட்நாமில் பெண்களே ஏற்றிருந்தனர். இப்போதும் நாட்டில் ஆண்களிலும் பார்க்கப் பெண்களே கூடுதலாக இருக்கின்றனர். மூன்று கோடியே முப்பத்தேழு இலட்சம் ஆண்களும், மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சம் பெண்களும் இப்போது வியட்நாமில் இருக்கின்றனர். பலவிதமாக வகுக்கப்பட்ட மக்கள் தொகையில் 15 வயதுக்குக் குறைவான மூன்று பிரிவுகள் தவிர மற்றைய பிரிவுகளில் பெண்களே கூடுதலாக உள்ளனர். இது அதிகமாக 40 வயதிற்கு மேற்பட்ட பிரிவினர்களில் காணப்படுகின்றது. உண்மையில் 60 வயது தொடக்கம் 64 வயதானவர்களில் 1,000 ஆண்களுக்கு 1, 200 பெண்களும், 65வயது - 69வயதானவர்களில் 1, 000ஆண்களுக்கு 1,300 பெண்களும், 70வயது தொடக்கம் 74 வயதிற்கு இடைப்பட்டவர்களில் 1, 000 ஆண்களுக்கு 1, 475 பெண்களும் என்ற விகிதத்தில் காணப்படுகின்றனர். இந்தக் கணிப்புக்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னதாக முடிவுற்ற போரில் இறந்த ஆண்களின் தொகையைப் பிரதிபலிக்கின்றது. (வியட்நாமிய மக்கள்மீது போரைத் திணித்து பத்து இலட்சக் கணக்கில் துருப்பினர்களையும், பொது மக்களையும் கொன்று குவித்த அமெரிக்கா, அந்தப் போரின்போது காணமல் போன 2,000 அமெரிக்கத் துருப்புக்கள் பற்றி இன்னமும் எதுவும் தெரியவில்லையென அந்த விவகாரத்தை எழுப்பி வருவது நகைப்புக்கிடமாகத் தானிருக்கின்றது)

அதன் காரணமாக நீண்டகாலத்துக்குச் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் தலைமையான பங்கை வகித்து வந்த பெண்கள் அதைத் தொடர்ந்தும் செய்து வருகின்றார்கள். நகரங்களில், கூட அரசாங்க அலுவலங்களிலும், கடைகளிலும் ஆண்களிலும் பார்க்கப் பெண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். பொருளாதார விடயங்களில் பெண்களின் தனியியல்பான ஈடுபாடு தற்போது அவர்களின் தொழில்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது என ஒரு மூத்த வியட்நாமிய சமூகவியலாளர் குறிப்பிட்டுள்ளார். குறைந்த வேலை செய்யவல்ல, கூடுதலான வேலை செய்வதற்காகப் பெண்கள் பொருண்மை சார்பில்லாத மற்றும் சம்பளம் பெறும் தொழில்களிலிருந்து கூடுதலாக வெளியேற்றப்பட வேண்டும். சுதந்திரமான சமூக ஏற்பாடுகளால் குழந்தைகளைக் கவனிப்பது விரைவாக மறைந்து வருகின்றது.

இப்போது வீட்டில் இருக்கும் பெண்கள் குழந்தைகளைப் பராமரிப்பதுடன். மரக்கறி வகைகள், கோழி, முட்டை முதலியவற்றை வாங்குவதைக் குறைக்கும் வகையில். வீட்டுத் தோட்டங்களைச் செய்தும். கோழி முதலியவற்றை வளர்த்தும், வீட்டில் உற்பத்தி செய்வனவற்றை விற்பனை செய்வதும் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கியும் வருகின்றார்கள். மேலும் அவர்கள் குடும்பத்தைக் கவனிப்பதுடன். வீட்டு வேலைகளையும் செய்து வருகின்றார்கள், இந்த வகையில் சமூகம் தன்னை நவீனப்படுத்த முயன்றாலும், சில பாரம்பரியமான முறைகளுக்கு மீண்டும் திரும்பவும் வேண்டியுள்ளது என அந்தச் சமூகவியலாளர் கூறினார். வயது வந்த பெற்றார்களுக்குக் குழந்தைகளைக் கவனிப்பதற்கு மிக்க கிராக்கி உண்டு. இதேவேளை விதைவைகளான பாட்டிமார்கள் இந்தப் பொறுப்புக்களைச் செய்வதில் மகிழ்சியும் அத்துடன் குடும்பத்தைக் கவனிப்பதுடன் ஓரளவு பாதுகாப்பும் பெறுகின்றார்கள்.

இப்படியாகத் தங்களைப் பழக்கிக் கொள்வது இயற்கையாகவே இருந்துவருவதுபோல் தெரிகின்றது. ஆனால் ஒரு விடயத்தில் அவர்கள் வருங்காலத்தில் பெரும்நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார்கள். குழந்தைகளுக்குக் கல்வியூட்டுவது அதிகசெலவீனத்தை ஏற்படுத்துவதாக மாறிவருகின்றது. இயற்கையான போக்குப்படி ஆண் மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் முதன்மையளிப்பதோடு, வளர்ந்து வரும் குடும்பப் பாரத்தில் பங்கு கொள்ளும் வகையில் பெண்களை வீட்டில்வைத்திருக்கவோ அல்லது வெகு கிராக்கியுள்ள திறமை வேண்டாத சிறு வேலைகளில் சேர்த்துவிடவோ எண்ணுகின்றார்கள்போன்று தோன்றுகின்றது. 1989 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீட்டின்படி 10 வயதிற்கு மேற்பட்ட 90 விகிதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்களெனத் தெரிகிறது. இது வியட்நாமியர்கள் பெருமைப்படக் கூடியவிடயமாகும், ஆனால் 05-ஆம் வகுப்பைத் தாண்டியவர்களில் 04 விகிதமானவர்களே வாழ்க்கைத் தொழில்சார்ந்த பயிற்சி பெறுபவர்களாகவும். கல்லூரிகளில் கற்றுவருபவர்களாகவும் இருக்கின்றார்கள். பாடசாலைக்குச் சேர்ப்பதில் உள்ள புதிய நெருக்கடிகள் காரணமாக பெண்களின் கல்வியில் வீழ்ச்சி ஏற்படுமா? இது எதிர்காலத்தை எந்தளவில் பாதிக்கும்? இக்கேள்விகள் சில கூரறிவுடைய கல்விமான்களினதும். நிருவாகிகளினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

## சீர்திருத்தம்

ஆனால் சீர்திருத்த நடவடிக்கைகளை பெரும்பான்மையான மக்கள் வரவேற்றுள்ளனர். என்ற எண்ணம் எவருக்கும் தோன்

றுகின்றது. வியட்நாமின் சனத்தொகையில் ஐந்தில் நான்கு பங்கு மக்கள் வசிக்கும் கிராமப்புறங்களிலும். கூடுதலாக விவசாயத்துறையிலும் இச் சீர்திருத்தங்கள் மேற் கொள்ளப்படுவது இதற்கொரு காரணமாகும். 1987-ஆம் ஆண்டில் 151 இலட்சம் தொன்னாக இருந்த தானிய உற்பத்தி, 1982-ஆம் ஆண்டில் 215 இலட்சம் தொன்னாக அதிகரித்தது. நாட்டுப்புறங்களில் வாழும் அதிகமான மக்களின் வாழ்கைத் தரத்தில் நிச்சயம் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு. நகர்புறங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்குள்ள கல்விமான்கள், நிருவாகிகள், பலதுறைகளிலிலும் ஈடுபட்டுள்ள ஆண்கள், பெண்கள் ஆகியோரிடமிருந்து அறிந்தமட்டில். இன்றுள்ளவர்கள் இதற்கு முன்னர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் வாழ்த்தவர்களிலும் பார்க்க நன்றாக உண்டும், அழகாக உடுத்தியும் இருக்கின்றனர் என்பது கேள்வியாகவுள்ளது. இதில் உள்ள கேள்வி என்னவெனில் முக்கியமாக நகரங்களில் வாழ்ந்து வருபவர்கள்' நன்றாக வாழ்ந்து வருகின்றார்களா என்பதாகும்.

சமநிலையின்மைகள் அதிகரித்துவிட்டன என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. நகரங்களில் இது நன்றாகத் தெரிய வருகின்றது. தெருக்களில் பிச்சைக்காரர்களை இடையிடையே காணக் கூடியதாகவுள்ளது. ஆனால் மிகக் குறைவாகக் காணப்படுகின்றனர். வரைபடங்கள், படங்கள், தபாலட்டைகள் புத்தகங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் சிறுவர்களையும் காணலாம். ஆனால் இவர்கள் வாழ்க்கையை நடாத்துவதற்கு வேறு வழியற்ற அனாதைகள் எனச் சில அதிகாரிகளின் சான்றிகழ் வைத்திருக்கின்றார்கள். தங்களது எளிய வாழ்க்கையைக் கொண்டு நடாத்த அதிகளவிலான முதியோர்கள் கடினமாக உழைப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. அதேவேளை முன்னர் ஒரு காலத்தில் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கென இருத்த தங்ககங்களுக்கு வியட்நாமியர் செல்வதையும் நகரங்களில் சிலர் தனிப்பட்டவர்கள் மோட்டார் வாகனங்கள் வைத்திருப்பதையும் நகர்புறங்களில் கவர்ச்சியான வீடுகள் கட்டப்பட்டு வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

சமத்துவத்தைக் கடைப்பிடித்து வந்த சமுதாயத்தில் இருந்த அவர்களில் பலர் இந்த சடுதியாகமாற்றங்கள் பற்றி அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஆனால், ''உங்களுக்கு வெளிநாட்டு மூலதனமும், கூட்டுமுயற்சியும் தேவையெனில், இந்த விலையை நீங்கள் கட்டாயம் செலுத்த வேண்டும்,, என்ற வழியில் அதை அவர்கள் கணக்கிட்டார்கள்.

# விடுதலைப் புலிகள் - இந்திய உறவு தணிந்து வருகின்றதா?

—தாரகி
(ஐலன்ட் 01.05.1994)

**விடுதலைப் புலிகளுக்கும் இந்திய புலனாய்வு (றோ) பிரிவிற்குமிடையே ஒரு ஒப்பந்தமிருப்பதாகப் பலமுறை ஜெயலலிதா கூறியது தமிழ் நாட்டு நாளிதழ்களில் வந்துள்ளது. ஓர் புகழ்பெற்ற வாரமஞ்சரியின் அரசியல்துறை எழுத்தாளரின் கூற்றின்படி, புலிகள் - புலனாய்வுத்துறை உறவை விரும்பாத இந்திய வெளிவிவகார புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த சிலர் திட்டமிட்டே இதை அம்பலப்படுத்தியுள்ளனர்.**

இந்தக்கதை பற்றி நம்பக்கூடிய பெயர்கள், இடங்கள், காரணங்கள் இருந்தபோதும் இருபகுதியினரிடையிலான மறைபொருள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது.

ராஜீவ் காந்தி கொலைக்கு முன்னர் விடுதலைப்புலிகளுக்கும் றோவிற்குமிடையிலிருந்த உறவை நன்கு கவனித்த எவருக்கும் புலிகள், றோ இருவரில் எவர் எவரைத் தங்களுக்குச் சாதகமாய் பாவித்துள்ளன என்பது புரியும்.

எனது கருத்தின்படி இந்திய வெளிவிவகார புலனாய்வுப் பிரிவிலுள்ள வலுக்குறைவை(பலவீனம்) நன்கு பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தமது தேவைகளை நன்கு பூர்த்தி செய்துள்ளனர் என்றே கூறலாம். புதுப்பிக்கப்பட்ட றோ - புலிகள் உறவு பற்றிய மேற்கூறப்பட்ட கதை விடுதலைப்புலிகளின் மேற்குலக பேச்சாளர் திரு.லோரன்ஸ் திலகரை இந்திய புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த சிலர் பாரிசில் சந்தித்து பேசியதாகக் கூறுகிறது.

இது உண்மையோ தெரியவில்லை. எனினும் அண்மைக் காலத்தில் இந்தியாவுடனான புலிகளின் போக்கில் மனமாற்றம்

PUBLIC LIBRARY
JAFFNA.


ஏற்பட்டுள்ளதை கவனிக்காது இருக்க முடியாது இவற்றிற்கான உண்மையான காரணங்களை எம்மால் ஊகிக்கமட்டுமே முடியும்.

பாரிசில் விடுதலைப்புலிகள் வெளியிடும் 'எரிமலை' என்னும் இம்மாத இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் இந்தியாவைப் பற்றி பின்வருமாறு எழுதியுள்ளார். ''தமிழர்கள் மீது சிங்கள பேரின வாதம் தனது மேலாதிக்கத்தைச் செலுத்துவதை இலக்காக வைத்து ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் மாநில சபை அடிப் படையிலான ஒரு தீர்வைத் திணிக்கும் முயற்சிக்கு மேற்குலக நாடுகள் ஆதரவளிக்கலாம்: அத்துடன் தமிழர்களின் தாயகத்தை வடக்கு கிழக்கு எனப் பிரிக்கும் முயற்சிக்கும் மேற்குலகம் தனது ஆசியை வழங்கலாம் ......இந்தச் சூழ்நிலையில் எங்கள் சிக்கல் பற்றிய இந்தியாவின் அணுகுமுறையில் சில மாற்றங்கள் காணத் தொடங்கியுள்ளன. இந்தியா இலங்கையின் சிங்களத் தீவிரவா தப் போக்கை ஏற்றுக்கொள்ளாததுடன் சிறு பான்மைத் தமிழர் களின் உரிமைகள். வரலாற்று முறைமையாக வடகிழக்கு ஒரு மித்த தாயகத்தில் தமிழர்கள் வாழ்வது பற்றிய செய்திகளில் தொடர்ந்தும் தனது முன்னைய நிலையிலிருந்து வழுவாது என நாம் எதிர்பார்க்கலாம். இந்து மாகடல் பிராந்தியத்தில் ஏற்படும் மாற்றங்களினால் தனது நன்மைகள் பாதிக்கப்படுமா யின் எமது நாட்டைப் பற்றிய கொள்கைகளில் அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலை இந்தியாவிற்கு ஏற்பட லாம். காஷ்மீர், இலங்கைச் சிக்கல்களில் அமெரிக்கா கால்வைக் கப் போவதை விரும்பாத இந்தியா தனது உள்நாட்டுப் பாதுகாப் புக் கொள்கைகளுக்கு மாறாக தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து. அப்படி செய்வதன் மூலம் தமிழீழ த்தை தனது நிரத்தர நண்பனாக்கலாம். இது இத்தியாவின் கொள்கைகளை ஆக்குபவர்கள் சகல செய்திகளையும் கணித்து எடுக்கும் முடிவாகவே அமையும்.''

எனினும் இத்தலையங்கத்தில் முடிவில் தமிழர் தனது சொந் தக் காலில் நின்று உலக எண்ணத்தை தம்வசம் திருப்பவேண்டும் என்று கூறியுள்ளது. ஆனால் பாரிசில் உள்ள புலிகளால் இந்தியா தமது போராட்டத்தை ஆதரிக்கவேண்டும் என்பதில் நம்பிக்கை யுள்ளனர் என்பதை மறைக்க முடியவில்லை.

பாரிசிலுள்ள புலிகளின் இந்த ஆசிரியர் தலையங்கச் சிந்த னைகள், மேற்குலகம் இலங்கையின் உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப் பதில் கூடிய நாட்டம் எடுத்துள்ளது என்ற நிறைப்பாட்டினால் உருவானதல்ல. இது இந்தியாவைப்பற்றி விடுதலைப்புலிகள் அண்மையில் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்த சிலகருத்துக்களை பிரதிபலிக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும், விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வமான கருத்துகளை வெளியிடும் மார்ச் மாத விடுதலைப்புலிகள் செய்தித்தாளின் தலையங்கம் ஒரு குறிப்பாகும். முன்னாளின் பலம் வாய்ந்த இராசதந்திரியாகத் திகழ்ந்த திரு. டிக்சித்தின் உணர்ச்சியூட்டும் கருத்துக்களை விடுதலைப்புலிகள் நன்கு வெளிப்படுத்தியுள்ளனர். இது சாதாரண பரப்புகையில் பார்க்கக் கூடிய செய்தியாகவே இருக்கின்றது.

அதன் முழு விபரத்தையும் கீழே தருகிறேன். இது நீண்டகால அணுகுமுறையாகவோ அல்லாமல் அந்த வரிகளுக்கிடையேயுள்ள புவியியல், அரசியல் முறையான கரவின்மையின் வாடை உண்மையிலேயே திகைப்படையவைக்கிறது.

**''இந்தியாவின் நிலை''**

அமைதிகாக்கும்படை தமிழீழத்தை விட்டகன்று நான்கு ஆண்டுகளாகின்றன. கடைசி வீரன் 1990 ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் நாள் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து சென்றார். இந்திய – இலங்கை ஒப்பந்தம், 1987 யூலையில் சிங்கள - இந்திய அரசுகளுக்குமிடையிலே கைச்சாத்திடப்பட்டு, ஈழமக்களின் அனுமதியின்றி இந்தியப்படை ஈழமண்ணில் அடிவைத்ததும், அதைத் தொடர்ந்து புலிகளுக்கும் இந்திய அரசிற்குமிடையே ஏற்பட்ட போரால் புலிகளுக்கும் - இந்திய அரசிற்குமிடையிலான அரசியல் இராசதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டன.

உறவுகளில் விரிசல் ஏற்படுவதற்குப் பொறுப்பாகவிருந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைசாத்திடப்படுவதற்கு ஆரம்ப காரிய கர்த்தாவாகவிருந்தவர் டிக்சித் என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. டிக்சித்தின் அச்சுறுத்தும் இராசதந்திர செயற்பாடுகள், அவரின் குறுகிய கருத்துக்கள். இந்திய நலன்களை மட்டும் நோக்கும் நோக்கு எல்லாம் இப்போரிற்குக் காரணமாகியது. 8.000 தமிழீழ மக்கள் இப்போரில் உயிர் இழந்தனர். தமிழீழத்தில் மீள முடியாத பொருள் சிதைவு ஏற்பட்டது. இந்தியப்படை 1000 வீரர்களை இழந்ததுடன் போரின் வெற்றியைப் புலிகளுக்குக் கொடுத்துச்சென்றது. புலிகளை கணக்கில் எடுக்காததும், தமிழீழ அரசியல் நிலைப்பாட்டை நன்கு கவனிக்காததுமே இந்தியாவின் அரசியல், படைத் தோல்விகளுக்குக் காரணமாகும். இந்தியாவின் தவறுகளுக்குப் பங்களித்த திரு. டிக்சித் ஏழு ஆண்டுகளுக்குப் பின் தமிழீழ அரசியல் உண்மை நிலையை அறிந்துள்ளார் போலும், 'இந்து' செய்தித்தாளில்

வெளியான கட்டுரையில் தமிழீழ மக்கள் பற்றிய தனது புதிய நோக்கை அவர் வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் தமிழீழத்தின் உயிர்நாடி புலிகள்தான் என்பதையும், பிரபாகரன் தான் தமிழ் மக்களின் தலைவர் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். அவர் இராசதந்திரப் பணியில் இருந்து ஒய்வு பெற்றுள்ளதால் அவரின் கருத்துக்கள் இந்திய அரசின் உத்தியோக பூர்வமானவை என்று ஏற்காவிடினும் அக்கருத்துக்கள் ஆழமாகப் பார்க்கப்படவேண்டியவையே. அவரின் கருத்துக்கள் 'இந்து' பத்திரிகையில் வெளியானது. மேலும் முக்கியமாகின்றது. ஏனெனில் ஒப்பந்தம் உருவாகும்காலத்தில் அவர்களின் பங்கு மிகவும் பிரதானமாகவிருந்தது. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்பற்றி இப் புதிய கருத்துக்கள் இராசதந்திர வட்டாரத்தில் விவாதிக்கப்பட்டு சீர்கெட்டிருக்கும் புலிகள் இந்திய உறவுகள் மீண்டும் தொடங்க உதவலாம், எனினும் திரு. டிக்சித் தனது கருத்துக்களை மட்டுப்படுத்தி ஒரு குறுகிய வரையறையுக்குள் வெளியிட்டுள்ளார். ஒரு நாடு என்ற அடிப்படையில் இலங்கை இச்சிக்கலை அணுகுவதே இந்தியாவின் தேசிய நலனுக்கு உகந்தது என அவர் கூறியுள்ளார்.

தமிழீழ சுயநிர்ணயப் போராட்டம் இறுதியில் வெற்றி பெற்றால் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் நலனுக்கும் பாதிப்பு விளைவிக்கும் என்ற பயத்துடன் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் செயற்பட வழிகாட்டுகிறது.

பாகிஸ்தானிலிருந்து வங்காளதேசம் பிரியமுயற்சிக்கும் போது சில இந்தியத் தலைவர்கள் இதேவிதமான கருத்தை வெளியிட்டனர். வங்காளதேசம் பிரிந்து செல்வது மேற்கு வங்காளத்தில் பிரிவினைப் போராட்டதைத் தூண்டும் என்றனர். ஆனால் வங்காளதேசம் இந்தியாவின் உதவியுடனே உருவானது மட்டுமன்றி மேற்கு வங்காளத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் உருவாகவில்லை என்பதும் வரலாறாகும்.

வங்களாதேச மக்களைப் போல ஈழத்தமிழர் போராட்டமானது. தம்மை இனப்படுகொலையிலிருந்து பாதுகாப்பதற்காக கேட்கும் சுயநிர்ணயமே அன்றி, தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் பிரிவினைக் கருத்தை வளர்ப்பதற்கல்ல என்பதை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் நன்கு உணரவேண்டும்.

தமிழர் போராட்டம் தமது தேசிய நலன்களைப் பாதிக்கும் என்ற இந்தியாவின் தயக்கம் மிகைப்படுத்தப்பட்டது மட்டுமின்றி

ஆபத்துமானதுமாகும். இந்த தேவையற்ற பயத்தை ஒதுக்கிவிட்டு இந்தியத் தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும். இதுவே தமிழீழ மக்களின் விருப்பமுமாகும்.

''விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் பின்வரும் கேள்விகளை எழுப்புகின்றன.

1. புலிகளின் தன்னுரிமைத் தமிழ்நாட்டுப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு தற்போது ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியில் நன்மையடைகின்ற சிலருக்கும் தமிழ்நாட்டு தேசியவாதக் குழுக்களுக்கும் சில தனிப்பட்டவர்களுக்குமிடையே வேற்றுமை வளர்க்கும் புதுடில்லியின் பொறிக்குள் விடுதலைப்புலிகள் அகப்பட்டுள்ளனரா? நாம் இங்கு கவனிக்கவேண்டியதென்னவெனில். தமிழ் நாட்டு நிலைமையில் தன்னை ஈடுபடுத்த வேண்டிய தேவையில்லை என்னும் தமிழீழ விடுதலைப் புலிகள் புதுடில்லியின் நட்புக்குப் பதிலாக, இணைந்து போவதில் சிறு கவனம் கூடச் செலுத்தாது அதற்குப் பதிலாக நீண்ட காலத்திற்கு ஆபத்தாகவிருக்கும், வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ பிரிவினைவாதத்திற்குச் சார்பான தமிழ்நாட்டிலுள்ள பற்றுறுதி கொண்ட பேணுநர்களுக்கு எதிராகவும், மாறாகவும் செல்வது பாக்கு நீரிணைக்கப்பாலுள்ள அவர்களது நண்பர்களது நோக்கத்தைக் கைவிடச்செய்யும் என்பதாகும். ஈழத்தமிழர்கள் தங்களது நன்மைக்காகப் போரிடுகின்றார்களே தவிர தென்னாசியப் பிராந்தியத்தின் எவ்வித பிரிவினைவாதத்தையும் ஊக்கப்படுத்துவதற்கோ அல்லது தூண்டுவதற்கோ அல்ல என அவர்கள் குறிப்பிட்டுக் கூறுவதை இது குறிக்கின்றது.

தென்னிந்தியாவிலுள்ள தமிழர் தேசியவாதச் சிக்கல் பிரிவினை மூலமோ அல்லது கூட்டிணைப்பு மூலமோ தீர்த்து வைக்கப்படும்போதுதான் இலங்கைத் தமிழர்களின் சிக்கலும் கடைசி முடிவுக்குக் கொண்டுவரப்படும் என விடுதலைப்புலிகளின் கோட்பாடுகளை தமிழ் நாட்டுடன் இணைத்துப் பேசுவோரின் கருத்துக்கு இது எதிரானதாக செல்கின்றது.

2. புதுடில்லி கவனத்துடனோ அல்லது கவனக்குறைவாகவோ புலிகளை இப்படியான நிலைகள் எடுக்கச் செய்து இக்கட்டானநேரத்தில் மேற்குலகிற்கும் புலிகளுக்குமிடையே பிளவு ஏற்படுத்த முயற்சிக்கின்றதா? இந்தியா எப்போதும் இலங்

கைத் தமிழர் சிக்கலைத் தமது கைக்குள் வைத்திருக்கவே முயற்சித்துவருகின்றது என்பது எமக்குத் தெரியும். இந்த விருப்பம் ஒப்பந்தத்தில் நிரந்தரமாக சட்டமாக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## ஸ்ரில்வெல் வீதி (STILWELL ROAD)

இதன் ஆரம்பப் பெயர் லெடோ வீதி (Ledo Road) என்பதாகும். 769 கி.மீ. நீளமான இந்த நெடுஞ்சாலை வடகிழக்கு இந்தியாவைப் பர்மா வீதியுடன் இணைக்கிறது. இந்தப் பர்மா வீதி சீனாவையும் பர்மாவுடன் இணைக்கிறது. இரண்டாவது உலகயுத்த காலத்தில் ஸ்ரில்வெல் வீதி யுத்த தந்திரோபாயம்மிக்க இராணுவ மாக்கமாக இருந்தது. 1942 டிசெம்பரில் லெடோவின் (அன்று அசாம்பகுதி இப்போது இந்திய அருணாசலப் பிரதேசப் பகுதி) ரயிற் பாதையின் முடிவிடங்களை மொகாவுங்குடன் (பர்மா) இணைப்பதற்காக, ஐக்கிய அமெரிக்க அரசுகளின் இராணுவப் பொறியியலாளர்கள் இதனை நிர்மாணிக்கத்தொடங்கினர். இச் செயற்திட்டத்திற்குச் சீன இராணுவ அணியினர் பின்பு உதவியளித்தனர். பற்காய் மலைத் தொடரின் கடினமான பங்காசாவ் கணவாய்க்கூடாகப் பர்மாவிற்கு இந் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது. அப்பொழுது மு-சே (Mu-se) என்ற இடத்தில் பர்மா வீதியைச் சந்திக்க மயிற்கியினா மற்றும் பாமோ (Myitkyina and Bhamo) வழியாக ஓர் இணைப்புப் பூரணப்படுத்தப் பட்டது. சியாங்கை சேக், ஐக்கிய அமெரிக்க அரசைச் சேர்ந்த ஜெனரல் ஜோசப் டபிள்யு. ஸ்ரில்வெல் என்பவரது பெயரை, இந்த நெடுஞ்சாலைக்கு மறுபெயராகச் சூட்டினார். 'யுத்தத்தின் பின்னர் 1945 அக்ரோபரிலிருந்து ஐக்கிய அமெரிக்க அரசுகளினால் இதன் பாவனை உதத்யோகபூர்வமாகக் கைவிடப் பட்டது. ஆனால் அது பிரதான உள்நாட்டுப் பாதையாகத் தொடர்ந்தும் இருந்துவருகிறது.

3273cc

P... RARY



பட்டினியால் இறக்குந்தறுவாயில் ஒரு சூடானியக் குழந்தை